உ

கடவுள் துணை.

சர்வசமயசமரசக் கீர்த்தனைகள்.

இஃது

மாயூரம் - மாஜிமுன்சிப்

ச - வேதநாயகம்பிள்ளை

அவர்களால்

இயற்றப்பட்டு

காரைக்கால்

காசிம்ராவுத்தரவர்கள்

பதிப்பித்தபிரதிக்கிணங்க

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுகூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

௧௮௯௨ ௵.

கடவுள்துணை.

சர்வசமயசமரசக்கீர்த்தனைகள்.

க. இராகம்-தேவகாந்தாரி-ஆதிதாளம்.

பல்லவி.

எக்காலமும்உன்தன் பொற்காலம்பணிந்துகொண்
டிருக்கநீவரம் அருள்வாய். (எக்கால)

அநுபல்லவி.

தக்கோர்அபிமான ஞானசீலா
சகலபுவனரக்ஷகாநுகூலா (எக்கால)

சரணங்கள்.

க. சந்தமேவுபிர பந்தமாலைபாடி
கந்தமார்உன்அர விந்தபாதம்சூடி
வந்தனுதிகள் அநந்தமேசொலி
விழுந்துபூமியில் எழுந்துனைந்துருகி (எக்கால)

உ. துங்கசாதுஜன சங்கமோடுகூடி
பொங்கும்ஞான அளங்கவாரிஆடி
அங்கமேபாவ சங்கொளப்பலப
தங்களோடுசுப மங்களங்கள்சொலி (எக்கால)

ங. பழுதிலாதுதினம் முழுதும்உன்னைநாடி
தொழுதுநேசமுடன் அழுதுபாடிஆடி
ஒழுகுசெந்தமிழின் மெழுகுபோலமனம்
இளகியேஅதிக புளகிதாங்கமுடன் (எக்கால)

ச. பூதலம்பரவு பாதவேதநாதா
சாதகம்செய்யும் அபேதநீததாதா
போதநாயகனே பூதநாயகனே
நீதநாயகனே வேதநாயகனே (எக்கால)

௨. இராகம் - துசாவந்தி - ஆதிதாளம்

பல்லவி.

ஓடிநான்உனைத் தேடிவந்தேன்-எனக்
குதவிசெய்தருள் ஐயனே. (ஓடி)

அநுபல்லவி.

நாடிஉன்பாதம் தொட்டேன்
கோடிதரம் கும்பிட்டேன்
நாதவிநோத பிரசாதபிரபோத
அபேதஅதீத நிர்வாதகியாத்மனே (ஓடி)

சரணங்கள்.

௧. அற்பமானபதார்த்தம் சற்றும்விரும்பேன்
ஐயா இது யதார்த்தம்
அற்புதபரமார்த்தம் கொடுத்தருளில்
அதுவேஉபயோகார்த்தம்
பற்பலவிசித்திரனே
கற்பனு சமுத்திரனே
பாசவிநாச சுரேசநரேச
பிரகாச விகாச உலாச விலாசனே. (ஓடி)

௨. வந்துனையேஅடுத்தேன் கீர்த்தனமாலை
வகைவகை நான்தொடுத்தேன்
வந்தனம்கைஎடுத்தேன் நீவசிக்கஎன்
மனக்கோயிலுங் கொடுத்தேன்
அந்தமனை உனக்கே
உன்தன் மனைஎனக்கே
ஆய விதேயர்கள் நேய சகாய
அகாய உபாய நியாய விதாயனே. (ஓடி)

௩. அன்பர்உபாசனனே பூதலந்தன்னின்
அதர்ம விமோசனனே
இன்பநிவேசனனே வேதநாயகன்
இதய சிம்மாசனனே
என்பவங்களைத் தீர்ப்பாய்
உன்பதந் தன்னிற்சேர்ப்பாய்
ஏக அநேக திரிலோக நிர்வாக
தெய்வீக விவேக அமோக தியாகனே. (ஓடி)

௩. இராகம்-கேதாரகௌளம்-ஆதிதாளம்.

பல்லவி.

எனைஆதரிப்பாயே-என்மனஇருள்
தனியேபிரிப்பாயே (எனை)

அநுபல்லவி.

வினையேஅரிக்கும்செல்லா
வீணனான்ஒருபுல்லா
நினையாஎன்மனம்கல்லா
நிதம்அதனுடன்மல்லா
நிச்சயப்பிரபோதனே
அக்ஷயப்பிரக்கியாதனே
சஜ்ஜனப்பிரசாதனே
து ஜனப்பிரமாதனே. (எனை)

௨. துக்கப்பிரபஞ்சத்தொல்லை
சொல்வதற்குண்டோஎல்லை
திக்குவேறெனக்கில்லை
தெய்வமேகேள்என்சொல்லை
சிஷ்டர்சமுதாயனே
துஷ்டர்கள்அபாயனே
இஷ்டர்கள்சகாயனே
அஷ்டகுணநேயனே. (எனை)

௨. அடியனான்வினைவசம்
ஆயினன்இதுநிசம்
படியிற்கருணாரசம்
பாலித்தருள்கவசம்
பக்தஜனநேசனே
சுத்தமனவாசனே
சித்தமலநாசனே
வித்தகவிலாசனே. (எனை)

௩. மருவியபாசவலை
மாட்டிஉற்றேன்கவலை
தருமசைதன்னியநிலை
தந்தேன்மயக்கந்தொலை

சங்கடநிவாரகா
எங்கள்குலதாரகா
பொங்குசுகதாயகா
துங்கவேதநாயகா. (எனை)

---

௪. இராகம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி,

சித்தம்உவந்தருள்செய்ய இத்தனைதாமதமேனு
சீலனேபுவனபரி பாலனேமுன்னேநீயுள். (சித்தம்)

அநுபல்லவி.

நித்தனேபுவியெங்கும்பிர சித்தனேநிகிலலோக
கத்தனேஜீவகோடிகட் கத்தனேசுத்தனேநீயுள் (சித்தம்)

சரணங்கள்.

௧. அசடனென்பதென்னரகசியமா-பெற்ற
அன்னையிடம்உண்மைசொல்லவேபயமா
வசஞ்செய்தருள்வதுனக்கோர்விஷயமா-யாவும்
வல்லஉனக்கிதென்னஅதிசயமா
வசனசாதுரியனே
மன்னமாதுரியனே
சஜ்ஜனர்கள்பிரியனே
சார்தொழும்பெரியனே. (சித்தம்)

௨. நிதமும்உனதுபதகைங்கரியமே-செய்ய
நீயருளெனக்குச்சுதந்திரியமே
அதுவேயெனக்குப்பெருஞ்சௌந்தரியமே-இனி
ஐயனேவேண்டேன்வேறைசுவரியமே
அதிசயஅப்பிரமேயா
அகணிதசுப்பிரகாயா
விதிநெறிசெப்பும்வாயா
விநயசங்கற்பதூயா. (சித்தம்)

௩. பூதபௌதிகமெல்லாம்நிறைவோனே-நல்ல
புண்ணியத்திருமறையைஅறைவோனே
வேதநாயகன்மனம்உறைவோனே-ஞான
விழியில்லாதவருக்குமறைவோனே

போதகப்பிரகாசனே
புண்ணியப்பிரதேசனே
சாதகக்கிருபேசனே
தாசாநுப்பிரவேசனே. (சித்தம்)

ரு. இராகம்-அசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

உன்னிடத்திற்சொல்லாமல் யாரிடத்திற்சொல்லுவேன்,
ஓ-ஓ-ஜகதீசா.

அநுபல்லவி,

பொன்னிடத்தாசையறுபுனிதாகள் தமக்கின்பம்
பொழிதருவேஇத்தப்புவியில்நான்படுந்துன்பம் (உன்னி)

சரணங்கள்.

க. வயிறுபசிக்கும்பிள்ளைமாதர் இடம்போமன்றி
மற்றொருவரிடத்திற்சேருமோ-காளும்
அயர்வுறும்பெரும்பிணிஅருமருந்தாலன்றி
அயலொன்றினாலேஅதுதீருமோ-கன
வெயிலால்வருந்துவோரே
வேண்டுவர்நிழல்நீரே
உயிர்ப்பயிரோம்புங்காரே
உனையன்றிக்கதியாரே
உலவுறுசல்லடைபோற்பலஓட்டை
உளதாகியவெறும்புழுமலக்கூட்டை
நிலையெனமக்களிசெயும்பலசேட்டை
நித்தியம்நான்அதனாற்படும்பாட்டை (உன்னி)

உ, நாதனேநான்பிழையாதுசெய்யினும்-நின்னை
நம்பினேனென்மேலின்னம்க்ஷாத்திரமா-பாரில்
ஓதரும்புலச்சத்துராதியர்கையில்என்னை
ஒப்புவிக்குதல்தர்மசாஸ்திரமா-மறு
மாதர்மேற்செல்லும்நேத்திரம்
வாயேஅபத்தபாத்திரம்
தீதுரைகொள்ளுஞ்சுரோத்திரம்
சிற்றின்பம்வேண்டுங்காத்திரம்

தீயஅவையவங்கள்செயுந்தினமோசம்
சிந்தையிற்குடிகொண்டதாசாபாசம்
நாயேன்செய்கைகளேஆபாசம்
நான்குபக்கத்திலும் நான்படுங்கிலேசம். (உன்

௩. எத்தனைசுமைபாவம்வேண்டுமானுலுமுந்தி
எனக்குக்கொடுக்கலாம்அச்சாரமே-என்தன்
அத்தனேநானுன்சேயேன்றறிந்தும்நோய்செய்யுமாயைச்
கார்தந்தார்இந்தஅதிகாரமே-சர்வ

உத்தமஞ்சேர்நிர்தோஷ
உன்னதமாவிசேஷ
பத்தர்கத்தியசந்தோஷ
பாசமயத்துவேஷ

பாக்கியமலர்ந்தருள்பழுக்கும்உத்தியா
பலபுவனுத்மகோடிகள்அபிமான
ஆக்கியவேதநாயகன்ஸ்வாதீன
அனைதந்தைகுருதெய்வஞ்சகலமுமான. (உன்னி)

---

௬. இராகம்-பூரணகௌளை-ஏகதாளம்

பல்லவி.

என்பிழைகள்பொறுத்தருள்வாய்-எனை அலைக்கும்
துன்பவினை அறுத்தருள்வாய். (என்)

அநுபல்லவி.

முன்பாவியேஜெபிக்கும்
அன்பர்கள்அனுபவிக்கும்
இன்பமேஅவர்விரும்பும்
நின்பதகமலநம்பும். (என்)

சரணங்கள்.

௧. நேயனைப்போல்விவகரிப்பேன்-துதிகவிகள்
ஆயிரம்உண்டாக்கிவிரிப்பேன்-என்செய்கையெல்லாம்
வாயின்அன்பலாதுமனந்-தோயும்அன்புளதோசிறு
நாயின்அன்புமேயிலாமல்-தீயவம்பனுய்த்திரியும் (என்(

௨. எண்ணவொண்ணுமோ என்பவமே - ஐயனே இந்த
மண்ணில்என் ஜன்மம் அவமே - தினந்தினமும்
உண்ணலும் நித்திரைதனை - நண்ணலும் பெரும்பவங்கள்
பண்ணலும் அல்லால் தான்பதம் எண்ணல்செய்தறியேன் சுவாமி - எ

௩, போதகம்என்னிடம்லயமே - என்மனம்பஞ்ச
பாதகங்கட்காலயமே - புவனமிசை
மாதவம்புரிபவர்க்கு - கோதகலும்இகபர
சாதகங்கொடுத்தருளும் - வேதநாயகர்இரங்கி (என்)

---

௭ - இராகம் - சுப்பிரதீபம் - திரிபுடை

பல்லவி.

வினையே எனையே மேவாதருளே

அநுபல்லவி.

நினையேநம்பினேன் விமலப்பொருளே வினை.

சரணங்கள்.

௧. கனவிலுந்தருமத்தைக்கண்டறியேனே
அனவரதமும் உனதருள்குறியேனே. எனை.

௨. பாவமென்பதற்கொருபதியானேனே
ஜீவனும்வழி தெரியாமற்போனேனே எனை.

௩. உதரபோஷணையன்றி உனைநினையேனே
இதயந்தனில்உன்னடி இணைபுணையேனே எனை.

௪. பூதலந்தொழும்அதி புண்ணியர்மித்திரனே
வேதநாயகன்தொழும் விமலபத்திரனே. எனை.

---

௮ - இராகம் - பரசு - ரூபகம்

பல்லவி.

ஆண்டருளே - கருணை - பூண்டருளே

அநுபல்லவி.

தூண்டருஞ்சுடராகவேவிளங்கும்
சோதியோ - உயர் - நீதியோ எனை எனை.

சரணங்கள்.

௧. என்னை ஆள்வது பாரமா - என
திடம்வர வெகுதூரமா
அன்னைக்கும் உபகாரமா - எனக்
கருள்புரிய இந்நேரமா - கன
ஆரியனே - மெய்ஞ்ஞான
சூரியனே - சர்வலோக
காரியனே - மிகுந்தஊள
தாரியனே - ஜகந்தனில்
உன்னையல்லது பின்னையார்துணை
யோகனே-சுக-போகனே என்னை ஆண்ட.

௨. எனதுடலெனும் புல்லையே - காக்க
எவர்க்குங்காட்டுவென் பல்லையே
தினமும் ஆயிரந் தொல்லையே - இதில்
சிறிதுமே சுகம் இல்லையே - கன
சேதனனே - பெரியபு
ராதனனே - பரமநி
கேதனனே - மெய்ஞ்ஞான
சாதனனே - அநுதினம்
நினது பாதம் நம்பினேன் அதி
நேசனே-பிர-காசனே-என்னை ஆண்ட.

௩. பொறுமை உனக்குச் சொந்தமே - நான்
புரியும்பிழை அநந்தமே
மறுமையுறு நிற்பந்தமே - கெட
மலர் பாதாரவிந்தமே - கன
மாட்சியனே - அடியார்கண்
சாட்சியனே - சர்வாண்ட
சாட்சியனே - தனிஅர
காட்சியனே - தினந்தினம்
சிறுவன்வேதநாயகன்பணி
சீர்த்தியே-அற-மூர்த்தியே-என்னை ஆண்ட.

௩-இராகம்-மோகனம்-திரிபுடைதாளம்.

பல்லவி.

காகுத்தனக்குக் கொடாமலிருக்கின்ற
காரணம் ஏதையா காகு.

அநுபல்லவி.

சாகுபயாய்நிற்கும் சர்வாதிகாரனே
மாகுயுடையோர்மகிழ் நிர்விகாரனே. காகு

சரணங்கள்.

௧. அந்தரங்கபக்தி அற்றவனென்றோ
அக்கிரமத்தில்பெயர் பெற்றவனென்றோ
பந்தப்பேய்க்குள்ளத்தை விற்றவனென்றோ
பாதகங்களெல்லாங் கற்றவனென்றோ காகு.

௨. மறந்தும்ஒருமெய்சொல் லாதவனென்றோ
மருந்துக்கும்நன்மைஇல் லாதவனென்றோ
சிறந்தமெய்ஞ்ஞானங்கல் லாதவனென்றோ
தேசத்தார்க்கெல்லாம் பொல்லாதவனென்றோ. காகு

௩. ஏசுமறையை இகழ்ந்தவனென்றோ
ஈனமதத்தைப் புகழ்ந்தவனென்றோ
நீர்செய்தநன்றி மறந்தவனென்றோ
நீசர்க்குள்மெத்தச் சிறந்தவனென்றோ. காகு.

௪. ஆதிமத்தியாந்த ரஹிதமகேசா
அற்புதசின்மயா னந்தவிலாசா
வேதவேதாந்த விதிஉபதேசா
வேதநாயகன் இதயப்பிரகாசா. காகு.

௰. இராகம்-நாதநாமக்கிரியை-ரூபகதாளம்

பல்லவி.

அருள்புரிவாயே - எனதுள
மருந்தெரிவாயே.

அநுபல்லவி.

இருளை நிகரும் சுருள் கொள் ஓதியர்
இலகும்பொருதி-உலகுட்புரி-கலகம்படர்-விலகும்படி அருள்.

சரணங்கள்.

௧. நினைவெல்லாம் உன்நினைவதாயென் நெஞ்சம்உன்றதோ - பழி
புனையும்வாய்பெறும் பேச்சைவிட்டுன்னைப் புகழ்ந்துபன்றதோ
தினையளவு மெய்தனைவிடாது (சிறு
சிந்திந்துனை-வந்தித்திடு-புந்தித்திடம்-வந்துற்றிட அருள்.

௨. எத்திசையும்உன்னுருவமாகவே இலக்கணனே-சொந்த
அத்தம்யாவும்நீயென்றேமிக ஆசைபூணேனே-கன
பத்தியாயுனை நித்தம்போற்றிப்
பாடித்தினம்-நாடித்தவம்-நீடிக்கவி-கூடிக்கொள. அருள்.

௩. நீதமாயரும் போதமாயெங்கும் நிறையுங்கர்த்தாவே-நாளும்
வேதநாயகன் காதல்மனப்பெண் மேவும்பர்த்தாவே-கொண்ட
ஏதமறப்பிர சாதம்உதவி
இழிவண்டிய-பழிவிண்டுநல்-வழிகொண்டுனை-விழிகண்டிட. அ.

௰௩- இராகம்-மணிரங்கு-திரிபுடை-தாளம்

பல்லவி.

சித்தர் இறங்கிநல் முத்தர்தங்கோஷ்டியிற்
சேர்த்தெனைக்காத்தருளே

அநுபல்லவி.

உத்தமிசிலர்தஞ் சித்தமலர்உறை
வோனே-கோனே-வானே-தேனே. சித்த.

சரணங்கள்.

௧. நின்னடித்தொண்டனென்ன அறியும்
நிதம் உலகந்தானே
என்னவுன்தொண்டின் பலனென்றெனைப்புவி
ஏசில்என் சொல்வேனே
பன்னரும் உன்னருள் என்னருகாகிடப்
பண்ணே-கண்ணே-எண்ணே-விண்ணே. சித்த.

௨. பொய்த்தெய்வந்தங்களைப் போற்றிப்பெரும்பழி
பூண்டவர் தம்முனமே
மெய்த்தெய்வம்உன்னைத் தொழும்எனக்கென்ன
விசேஷப் பிரயோசனமே
கைத்தொழில் அண்டம் அனைத்தையுந் தாங்கிடு
கையா-துய்யா-மெய்யா-ஐயா சித்த

௩. கழுவக்கழுவ அழுக்குடல்மீது
கலக்கடருந்தன்மையே
தழுவியென்னெஞ்சுறு மாசுக்கள்நீங்கிடத்
தந்தருள்வாய் நன்மையே
எழுமண்பொடுவேத நாயகன்போற்றிடும்
ஏகா-யோகா-வாகா-தியாகா சித்த.

௰௨-இராகம்-தர்பார்-திரிபுடைதாளம்

பல்லவி.

என்னையாளையா-என்விண்ணப்பம்
தன்னைக்கேளையா

அநுபல்லவி.

மின்னைநிகரும்வாழ்வை வெறுப்பவர்க்குரியோனே
அன்னைபிதாசற்குரு வாகியபெரியோனே. என்னை.

சரணங்கள்.

௧. அடியன்மேற்சினமா-என்குறைநீக்கி
ஆள்வதுகனமா
கடினம்நின்மனமா-எனதுநெஞ்சங்
கவலைக்காசனமா
படியில்என்னகத்துறு பாவஇருளைமாற்றித்
திறமுடனேமெய்ஞ்ஞான தீபமதனையேற்றி என்னை.

௨. என்றுஞ்சஞ்சலமா-ஐயனேமாயைக்
கிவளவுபலமா
வென்றுகொள்புலமா-அதனால்ஏழை
மெலிவதுநலமா
நன்றுருவாகியசாதா என்முகம்நோக்கிக்
குன்றெனநான்செய்யுங்கொடுவினைகளைப்போக்கி என்னை.

௩. கைவிடலாமா-என்னிடம்வரக்
கால்மலர்நோமா
கைவினைபோமா - இனிமைதங்கும்
நன்னயநாமா
தெய்வநாயகனாகித் திகழும்அகளங்கா
சைவல்லிபஞானநெறி கமழ் மதுரப்பிரசங்கா. என்னை.

௪. திக்திக்குந்தேனே - அழுந்தேகன
தேவர்கள்கோனே
எந்திக்குந்தாமோ - என்றுந் தவெண்மணிபோல்
இருக்குங்கோமானே
புத்தியுடையோர்குட்டும் புகழ்மாலை அணிவோனே
பத்தியுடனேவேத நாயகன்பணிவோனே, என்னை

௰௫-இராகம்-கலியாணி- ரூபகதாளம்

பல்லவி.

தருணங்கருணைபுரிகுவாய்-ஐயா-உனக்கனந்தங்கோடி
சரணஞ்சரணந்தெரிகுவாய்-மெய்யா

அநுபல்லவி.

அருணகோடிதேஜோமயனே - பொன்
இணைமென்றுள்ளுவோர்பயனே - இந் தரு.

சரணங்கள்.

௧. இந்திரியச்சத்துருக்கள் செய்மோசம்
என்னசெய்வேனிர்வகிக்கல் பிரயாசம்
நிந்தனையான அநு பந்தபாசம்
நீங்கச்செய்வாய்புண்ணிய உபதேசம்

நீயேகதியன்றோ ஒரு
தாயே துயர்ஒன்றோ சிறு
நாயேன்கெடல்நன்றோ கன
தீயேன்உடல்குன்றோ இது தருணம்.

௨. கோமாய்த்தன்பிள்ளைசெய்யினுந்-தீது
கோபித்துநீக்கிடுந்தாயுண்டோ-ஏது
காரமானான்செயும்பாவகம்- பொறுது
கைவிடில்வேறெனக்காதர-வேது

காயத்தைஎடுத்தேன் அரு
மாயத்தைஅடுத்தேன் அநி
யாயத்தைஉடுத்தேன் திரு
நேயத்தைவிடுத்தேன் இது தருணம்.

௩. நச்சுமரத்தையும்வைத்தவன்-தானே
நாள்தோறுங்காவல்செய்யாமல்-இரானே
இச்சகமீதில்எனை அமைத்தோனே
என்னைநீ ஆளாவிடிற்பிழையேனே

வகந்தழையுருவே ஈக
போகந்தழை தருவே ...
யோகந்தழைதிருவே முதி
போகந்தழைகுருவே இது சரணம்.

ச. நிதமும்நானுறும்பாதகச்-சேறு
நீக்கிடப்போதுமோநின்னருள்- ஆறு
விதியுங்கதியும்இல்லையே-வேறு
வேதநாயகனேஅருள்-பேறு
வேதத்துருவோனே பல
பூதப்பெருமானே கன
போதத்தமர்கோனே இரு
பாதத்தைவிடேனே இது சரணம்.

மச-இராகம்-தேசிகதோடி- ஆதிதாளம்

பல்லவி.

ஐயாளனை ஆண்டருளே-உனை
அண்டினனே-மனம்-வெண்டினனே. ஐயா.

அநுபல்லவி.

பொய்யாம்வாழ்வினில் நான்குழையாமல்
போகாதிகளில்என் மனம்நுழையாமல். ஐயா.

சரணங்கள்.

க. ஒருநிமிஷமுமுன்தடிமறவாமல்
உலகழியினுமுனதருள் துறவாமல்
இருதயமதனிலோரிடர்பிறவாமல்
இழிவுறுபழியொடுநானிறவாமல். ஐயா.

உ. உன்னையலாதொருவரையும்தொழாமல்
உதரநிமித்தம்எங்குமோடியழாமல்
இந்நிலமீது துராசைஎழாமல்
இறந்தபின்னுமெனிநரகில்விழாமல் ஐயா.

ந. நல்லவழிதனைஎந்தநாளும்விடாமல்
நாட்டில்அசடனெனநான்பெயரெடாமல்
பல்வகையாகியபழிகள்தொடாமல்
பாவையர்மோகத்திற்படிந்துகெடாமல். ஐயா.

௪. என்றனுயிர்போலெவ்வுயிரையும்பேண
இகசுகபோகங்களைநன்றுமேநாண
நின்றுந்துறைபரனைக்கணைப்பூண
வேதநாயகனேநானுனைக்காண. நீய.

௰௫. இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்

பல்லவி.

இந்தவரந்தருவாய்-ஸ்வாமி-இந்த

அநுபல்லவி.

பந்தவினையெலாம் அறவேண்டும் - உன்
பாததரிசனம் பெறவேண்டும் இந்த.

சரணங்கள்.

௧. இனறும்உன்பதமலர்தொழவேண்டும் - நான்
தேகபரவசமாயெழவேண்டும்
அனல்மெழுகாயுருகியழவேண்டும் - இனி
ஆனந்தககடலில்நான்விழவேண்டும் இந்த.

௨. தேசவிஷயாதிகள்கெடவேண்டும் - ஞான
தீபத்தைஎன்னுளத்தில்இடவேண்டும்
பாசஅறப்பயிரைநடவேண்டும்-அந்த
பயிர்க்குள்அருட்புனலைவிடவேண்டும் இந்த.

௩. மோகப்பசாசுதனைவெலவேண்டும் - நல்ல
முத்திநெறியிலேசெலவேண்டும்
நாகமெனும்புலனைக்கொலவேண்டும் - வேத
நாயகனேயுன்னாமஞ்சொலவேண்டும். இந்த

௰௬-இராகம்-பைரவி-ஆதிதாளம்

பல்லவி.

இந்தப்பிழைகளெல்லாம் பொறுப்பாயே-பாச
பந்தக்களைகளைவேரறுப்பாயே. இந்த.

அநுபல்லவி.

சொந்தப்பிள்ளைகளான தூயவர்க்குப்பிதாவே
அந்தப்பரமசுகம் அளிக்குங்கனதாதாவே. இந்த.

சரணங்கள்.

௧. ஆதியானபரஞ்சோதி உன்னைநான்வெறுத்தேன்
 என்மனந்தனை
ஆகமாதிசொல் யோகசாதனையில்சிறுத்தேன்
 அநுதினமும்
வேதம்வேதியர்கள்ஓது நீதியையுமறுத்தேன்
 சமர்த்தன்போலே
வீம்புபேசிப்பெரும்பாம்பு போலவிடம்பொறுத்தேன்
 சதாகாலமும்

பூதலவாழ்வுதனைநாடினேன்-மறு
மாதர்கள்சுகந்தனைதேடினேன்-பஞ்ச
பாதகரோடும்உறவாடினேன்-கன
காதகனென்றுபெயர்சூடினேன்
ஆதுலர்க்குதவியாமலேதடுத்தேன்
சாதுஜனங்களைக்கண்டேதடியெடுத்தேன் இந்த

௨. நேயமானதந்தைதாயைச்சற்குருவைப்பழித்தேன்
 ஜெபதபத்தை
நித்தியகர்மங்களைப்பத்திமார்க்கங்களையொழித்தேன்
 கைப்பொருளெல்லாம்
காயபோசுகமாயவாழ்விற்செலவழித்தேன்
 உனைத்தொழாமல்
காட்டில்வாழ்மிருகக்கூட்டம்போல்நாள்கழித்தேன்
 அநுதினமும்

தாயனைக்குறைசொல்லித் தூற்றினேன்-பெரும்
தீபனைத்தினந்தினம்போற்றினேன்-நல்ல
ஞாயவழக்குகளைமாற்றினேன்-பதி
னாயிரம்பொய்சொல்லத்தேற்றினேன்
வாயில்வந்தபடிவம்புகள்தொடுத்தேன்
கோயில்மணியமெனக்குடிகளைக்கெடுத்தேன் இந்த

௩. பூமிவேபாரியென்றுபேரெடுத்தேன்
 புரட்டுருட்டும்
பொய்யும்வஞ்சனையும்செய்யுமார்க்கந்தனையடுத்தேன்
 உன்னாமந்தனை
காளிவேலனதுபாளிலேசொலாமல்விடுத்தேன்
 ஞானியைப்போல
காட்டிமாயவேஷங்காட்டிஎன்னைநான்கெடுத்தேன்
 அநுதினமும்

பாவமும்பழிகளுந்தாங்கினேன்-பெருங்
கோவமுந்துரோகமுமோங்கினேன்-புண்ணிய
ஜீவனஞ்செய்யாமல்தூங்கினேன்-நல்ல
பாவனஞ்செய்யும்வழிநீங்கினேன்
ஆவலாகப்பலர்பொருள்அபகரித்தேன்
காவலாநெறியைக்கடந்துசஞ்சரித்தேன் இந்த

௪. வாரங்கூலிகளிற்சோரஞ்செய்துநான்குறைத்தேன்
பிறரிடத்தில்
வாங்கியபொருள்களைஎங்கிலென்றுநான்மறைத்தேன்
பஞ்சத்திலேவியா
பாரஞ்செய்யப்பலசேரில்நெல்லைக்கட்டிநிறைத்தேன்
நல்லதண்ணீரைப்
பாழிலேசகலநாழிகையும் விழலுக்கிறைத்தேன்
முதலினொடு

நேரவட்டிசனைக்கூட்டினேன்-வெகு
தூரம்அகவிலையைநீட்டினேன்-வழக்
கோரஞ்சொல்லிச்சண்டைமூட்டினேன்
காரஞ்செய்தோர்க்குக்கத்திதீட்டினேன்
தாரமபிள்ளைகளுக்காகநான்செய்தேன்வஞ்சம்
நேரில்வேதநாயகாநின்னடிதஞ்சம்

௰௫-இராகம்-சுருட்டி-திஸ்ரஜாதி-ரூபகம்

பல்லவி.

தேவாதிதேவனே-தயை-தயைசெய்தருள்வாயே

அநுபல்லவி.

பாவஉடலம்எடுத்துநீளும்
பாதகனுமன்னைநாளும
பந்தப்பகைசாடாமல்
சிந்தைத்துயர்கூடாமல்
நிந்தைப்பழிமூடாமல்
இந்தப்படிவாடாமல் தேவாதி

சரணங்கள்.

௧. கற்பகோடிகாலப்போல அற்பவாழ்வினைமதித்தேன்
காமமாகளந்தோமும் அலங்காரமும்நெஞ்சினிற்பதித்தேன்
தற்பரனைபொறுமைப்புவங் தாழ்நதிடாதெனைத்துதித்தேன்
சாந்தயம்யோகாந்தமார்க்கஞ் சார்ந்திடாமற்குதித்தேன்

கற்பகத்தனைநாளுஞ்சார்ந்து
நாசவினைகள்யாவுந்தீர்ந்து
ஞானந்தனிலேநீட
மோனந்தனையேநாட
வானந்தனையேதேட
ஆனந்தமுமேகூட — தேவாதி

௨. பாசமாம்பிசாசம்என்மனம்வாசஞ்செய்வதுநீங்கிலையே
பாபமுங்கடுங்கோபமும்பலர்சாபமும்பெருகிலையே
நேசமும்விசுவாசமும்பிரகாசமும்எனக்கிலையே
நின்மலநாயனை அகத்தைப்பூட்டும்என்சிந்தையுங்கசிந்திலையே

ஈசனேஎன்பாவம்நீக்கி
என்னையேஉன்தாசனாக்கி
இன்பக்கடலேசேரத்
துன்பக்கடலேபேர
அன்பர்க்கினமேசார
என்பொய்க்குணமேதீர — தேவாதி

௩. அன்பர்களிக்கஇன்பம்அளிக்கும்ஆனந்தப்பெருநதியே
அனவரதமுங்கனவிரதர்கள் அகத்திலொளிருநிதியே
துன்பசாகரமென்பதுகெடத்தோன்றியபரகதியே
தொண்டன்வேதநாயகன்மனப்பெண்டகமகிழ்பதியே

நின்பதந்தனைநாளும்வந்தி
நேசமாய்க்கவிமாலைசாத்தி
நீதிப்பயனேவிளை
ஆதிப்பழியேதள்ள
வேதப்பயனேகொள்ள
போதத்தினிலேதுள்ள — தேவாதி

———(*)———

யி-அ-இ-ம்-பொரு-ரூபகதாளம்:

பல்லவி.

இந்தநிமிஷமேபாபநிவர்த்தி
எனக்கருள்வாய்ஸ்வாமி

அநுபல்லவி.

எந்தநிமிஷத்தில்சாவுவருமோவென்
றேங்கியேநான்பயந்தேனே-உயர்
நீங்கிடவென்னசெய்வேனோ-சர்வேசனே

சரணங்கள்.

க. காலையோமாலையோகாலையோசாவேனுங்
காலக்கணக்கறியேனே-வந்த
வேலைமுடியுமுன் ஓலையனுப்பிட
வேண்டாருஞ்சொன்னென்றறியேனே-என்னை
ஆண்டாலுனைப்பிரியேனே-பெரியோனே இந்த

உ. பொட்டென்றுதேகந்தானசட்டென்றுவீழ்ந்திடில்
இட்டழுநவர்யில்லாரோ-குழி
வெட்டெனப்பிரேதத்தைக்கட்டென்பர்மண்ணைமேற்
கொட்டென்பர்போவர்பொல்லாரோ-ஆண்மை
நட்டம்வராமற்கண்பாரோ-துயர் இந்த

ங. கப்பல்இல்லாமலேஎப்படியேனுங்
கடலைக்கடக்கவொண்ணாதே-நாளும்
அப்படிநின்பதத்தெப்பமில்லார்க்கந்த
ஆநந்தவீடுகண்ணாதே-நல்ல
ஞானந்தருவாயிப்போதே-கைவிடாதே இந்த

௪. ஆதிமத்தியாந்தரகிதப்பிரபோத
அபேதபுராதனநாதா-நாளும்
காதலுடன்வேதநாயகனுள்ளக்
கமலத்தங்குந்திருப்பாதா-எனக்
கமலந்தரஇன்னம்வாதா-இடையாதா இந்த

௰௯-இராகம-கல்யாணி-அடதாளசாப்பு.

பல்லவி.

இந்தஉபகாரமறவேனே-புவி
அந்தரமளந்துமகிழ-கோனே

அநுபல்லவி.

விந்தைநரஜன்மந்தான் மேவஅருள்நோக்கினாய்
தந்தைதாய்மனைசெயர் தந்துதுறநீக்கினாய் இந்த

சரணங்கள்.

க. குருதிபாகியசேறுகூட்டி-நல்ல
கொழுமாமிசச்சுவலாநாட்டி
வரிஎன்புவிட்டங்கள்பூட்டி-கட்டும்
வடமாநரம்புகளைமாட்டி

இருகாலில்நவவாசல் உடல்மனையைவிக்கிறாய்
இன்பங்கள்நுகர இந்திரியமாக்கினாய்
அரியஆன்மா அங்கதுகுடியுறப்போக்கினாய்
அந்தஆன்மாவில்நல்லறிவினைத்தேக்கினாய் இந்த

உ. பூமியாகியவீடமைத்தாய்-பஞ்ச
பூதாதிகளுயிர்சமைத்தாய்
மாமதுரஉணவுகள்கொடுத்தாய்-அந்த
வானமாம்பந்தலும்எடுத்தாய்

சோமசூரியதாரகாதீபங்கள்ஏற்றினாய்
சுகவாயுவால்உஷ்ண சோகத்தைமாற்றினாய்
சேமஉணவாக்கவேதேயுவினை ஆற்றினாய்
சீதக்கடல்கொண்டுதண்ணீரைஊற்றினாய் இந்த

௩. கடலாறுகுளம்படைத்தாய்-மலர்க்
காவுகளும்உதவினாயெந்தாய்
தடமலைதருக்களும்வகுத்தாய்-வனம்
சார்மிருகபக்ஷிகள் பகுத்தாய்

திடமானநவமணிஉலோகாதிநீட்டினாய்
ஜெகஜோதியாகவேசிங்காரங்காட்டினாய்
அடமின்றிநானாவினோதங்கள்காட்டினாய்
ஐம்புலாதிகளுக்குமின்பங்களூட்டினாய் இந்த

௪. சிலபறவைகானஇசைபாடும்-வேறு
சிலபறவைதிருநடனமாடும்
பலமிருகங்கள்வேலைபுரியும்-நல்ல
பசுவாதிபாலினைச்சொரியும்

மலர்கனிகள்காய்கிழங்குமரமேலாய்நீட்டுமே
மண்ணன்னமவிளைவித்துவயிறாரஊட்டுமே
பலதரமுமெங்களைத்தலைமுழுக்காட்டுமே
சர்வபொருள்களுநல்லசந்தோஷமூட்டுமே இந்த

௫. பித்தர்க்குநீசெய்பாரகமே-வளம்
பெரிதெனினுமீதற்பசுகமே
சுத்தர்க்குநீசெய்பேரகமே-பரம
சுகமெனவிரும்புமென் அகமே

பக்தர் அநுகூலசற்பரமகாருண்ணியனே
பகிரண்டகோடிகள்பரிபாலிக்குந்திண்ணியனே
வித்தகசொரூபமேமேவு நற்புண்ணியனே
வேதநாயகன்உள்ளமீதுவளர் கண்ணியனே இந்த

௨௰-இ-ம-கேதாரகௌளம்-ஆதிதாளம்.

பல்லவி.

சிந்தைக்குள் உறைந்தும்நீ சிந்தைத்துயரந்தனைத்
தெரியாயோசொல்வாயே

அநுபல்லவி.

அந்தரம்புவியெங்கும் அரசாட்சியளிப்போனே
எந்தப்பொருளின்உள்ளும் இருந்தங்களிப்போனே சிந்தை

சரணங்கள்.

௧. பாலையும்விஷமாக்கும் பாம்புபோல்கொடுமனம்
பலசுகத்தையுந்துன்பம் ஆக்குமே
பூலோகமெல்லாமவசமாயினும்வேறொரு
புவனத்தையும்பிடிக்க நோக்குமே
காலமுழுதும் இந்தக் கருத்தேபாதகரூபம்
கலிபாணவிட்டிலும் கட்டுக்கொண்டாழ்ந்தேசாபம்
மேலவனேஎனக் கிதுவாய்க்கக்கென்னநியாயம்
வேதநாயகனேபாராய்பெரியவன்பரிதாபம் சிந்தை

௨. இருகலைக்கொள்ளிநடுவிருக்கும் எறும்புபோல
என்காலுந்தொலையா விசாரமே
ஒருசாணுதிய உதரக்குழிஅடைக்க
உலகில்படுங்கஷ்டம் அபாரமே
தரணியின்வாழ்வென்பது தானேவிஷவிருக்ஷம்
சார்வதா இதில்வரும் சங்கடங்கோடிலட்சம்
தருமபோகாந்தத்தில் சார்தல்உத்தமபட்சம்
சாவானுகூலாஉனக் கெல்லாம்பிரத்தியட்சம் சிந்தை

௩. போர்க்களத்திலே தடவிருப்பதுபோலப்
புலச்சத்துருக்களின்போராட்டமே
சேர்க்குந்தசைவடிவாந் தேகமதுபிணியுந்
தீவினைகளும்வளர் தோட்டமே

பார்க்குள் இதுவே ஆசா பாசகடனசாலே
பகலும் இரவும் இது படியுமே மோகவேலே
நிர்க்கவைத்தி பார்க்குத்தினமுங் கொடுக்கும்வேலே
தினம்வேதநாயகா சேர்ந்தேன் உன் திருக்காலே — சிந்தை

உக-இ-ம்-யமுனாகல்யாணி-ரூபகதாளம்.

பல்லவி,

சரணம்சரணம் நாதா-உன்
சரணம்தர ஒண்ணாதா

அநுபல்லவி.

இரணமாகியகாயமே-இதில்
தினம்அளாந்தம் அபாயமே
மரணம்வருமுன் னேயமே-பெற
மகிழ்ந்தருள சகாயமே கோடி — சரணம்

சரணங்கள்.

க. பாவியேன் இருதயமே-பவ
பாதகங்களின் மயமே
மேவிடுந்துர்விஷயமே வினை
விலக்கிஅருள்நன் னயமே
மாயவினைகளை மாற்றுவாய்-எதிர்
வந்தென் சிந்தையில் தோற்றுவாய்
சேவைதந்தெனைத் தேற்றுவாய்-இந்தத்
தியனைக்களை யேற்றுவாய் — சரணம்

உ. மதம்இராகது வேஷம்-பொய்
வஞ்சகம்பலதோஷம்
எதிலும்நான் விசேஷம்-எனக்
கில்லைபுண்ணிய விசேஷம்
மதனப்பேயை ஓட்டுவாய்-நல்ல
மார்க்கத்திலெனைக் கூட்டுவாய்
விதனநரகைப் பூட்டுவாய-உன்
வீட்டுக்குவழி காட்டுவாய் — சரணம்

௩. தாசர்கள்பரிபாலா-கன
சாத்விககுணசீலா
நீசர்கள்பிரதிகூலா-சத்ய
நீதியுறுசெங்கோலா

ஆசறுமுதல்நூலனே-அகி
லாண்டகோடிவிலாசனே
நாசரகிதமூலனே-வேத
நாயகன்அநுகூலனே சரணம்

உஉ-இ-ம்-கற்கடா-ஆதிதாளம்

பல்லவி.

சீலம்நீதா தேவநாதா
ஸ்ரீயன்மீது வாதா அபேதா

அநுபல்லவி.

மூலகாரண தயாபரவேதா
மோக்ஷசாம்பிராச் சியப்பிரதாதா சீலம்

சரணங்கள்.

௧. நன்மைதின்மைஇன்ன தென்பதுதெரியேன்
ஞானமார்க்கத்தையே அநுசரியேன்
சின்மயாநந்தனே ஜெபம்புரியேன்
தீபனைநான் பாபத்திற்பெரியேன் சீலம்

௨. தாயிருக்கப்பிள்ளை தயங்குதல்சரியோ
காசினிமனம் வாழ்வுமவரியோ
நீயிருக்கஎன்றன் துன்பம்உபரியோ
நீயேதாமசிக்க என்னுடல்கிரியோ சீலம்

௩. ஜீவசிஷ்டிஸ்திதி லயஅதிகாரா
ஜென்மசாபல்லியப்பிர தானஉதாரா
தேவதேவகண பூசிததீரா
ஸ்ரீயன்மெய்தா யகன்உபகாரா சீலம்

உங, இராகம்-உசேனி-ஆதிதாளம்

பல்லவி.

நின்பதமே துணையையா - மனத்
துன்பம்அகல அருள் செய்வாய்

அநுபல்லவி.

இன்பமகோததியே இனியதயாநிதியே
அன்பர்பரகதியே அமரர்க்கதிபதியே (நின்)

சரணங்கள்.

க. என்மனம்இளகாத பொருப்பே மாயை
என்றைக்கும்அதிற்குடியிருப்பே
தன்மமேஅதற்கருவருப்பே கெட்ட
தாமசகுணமென்றால் விருப்பே
கன்மைகெடுக்கும் இச்சை நாசக்கொடுநெருப்பே
தின்மையெல்லாம்அகலத் திருவருட்கண்திருப்பே. (நின்)

உ. ஏதும்அறியேன்ஞானசாஸ்திரம் புவ
னேசாஉனக்குநான் எம்மாத்திரம்
சோதனைக்கெளியேன் அபாத்திரம் அதி
தூயனேஎன்இன்னம் கூத்திரம்
வேதனைமிகக்கொண்டு மெலிவுற்றேன்அகோராத்திரம்
சாதகமுறவேநீ தருவாய்மெய்ஞ்ஞானநேத்திரம் (நின்)

ங. நீசனுன்வினைக்கெல்லாமூலம் என்தன்
நெஞ்சஞ்செய்வதும்பிரதி கூலம்
பாசபந்தஉலக ஜாலம் தன்னில்
படிந்துநொந்தேன்பலகாலம்
ஈசனேகேளாயோ ஏழைநானிடும்ஓலம்
தாசன்வேதநாயகன் தனக்குநீயருள்சீலம்

உச- இராகம்-முகாரி-ஆதிதாளம்.

பல்லவி.

ஆள்வாயெனதுள மூள்வாயெனக்குன்தன்
அடியிணையே துணையே.

அநுபல்லவி.

நீள்சுகக்கனியனே நேசருக்கினியனே
நாள்வளர்தனியனே நயமறைத்தொனியனே (ஆள்)

சரணங்கள்.

௧. பேதைநான்பயனில்லாப் பேச்சிற்சண்டப்பிரசண்டம்
பிறனைமயக்குவதிற் பெரியஉற்பாதபிண்டம்
வேதவினைஎனக்கு விளைசருக்கரைக்கண்டம்
விறைந்தருள்புரிஉனக் காயிரங்கோடிதண்டம்
வேதனே வரப்பிர சாதனே ஆசீர்
வாதனே சூர்புகழ்கொள் காதம்ன நாதனே எனை (ஆள்)

௨. மனமெனுங்குரங்குக்குக் கனஅறமேஉபேக்ஷை
வாதனைநீக்கிடாமல் எதின்னேம்பரீக்ஷை
திவாகரனுபமேன திவ்யமெய்ஞ்ஞானதீக்ஷை
திடமுடன்கொடுத்தருள் அதுவோஎனதபேக்ஷை
தேவனே மனோ பாவனே மறைசொல்
நாவனே தயைநிறை சுபாவனே ஜீவனே எனை (ஆள்)

௩. நிகரில்கனதெய்விக நின்மலசுலக்ஷண
நித்தியம்நினையும்பக்தர் நெஞ்சப்பிரதக்ஷண
சகலஜீவாத்மகோடி தாங்குசம்ரக்ஷண
சாஸ்திரம்புகலும்சார் ஸ்மிர்தாத்திராமிர்தபக்ஷண
தாங்குவாய் நெஞ்சில் ஓங்குவாய் துயரம்
நீங்கவே வேதநாயகன் பாங்காநின்றனுதினம் (ஆள்)

௨௬-இராகம்-ஆரபி-ஆதிதாளம்.

பல்லவி.

தேவநாயகனே என்மீதிலுன்
திருவுளம் இரங்குவையே.

அநுபல்லவி.

ஜீவன்முக்தியூர்ஜித சிலர்பிதுரார்ஜித
தாவில்அதிபூஜித சர்வசமயயோசித (தேவ)

சரணங்கள்.

௧. கரதலாமலகம்போல் உனக்குயாவுந்திர்ஷ்டாந்தம்
கர்த்தனை அறியயோ நீஎனதுவிசாந்தம்
பாவுப்பஞ்சென்றால் பாலகர்க்கு ஆனந்தம்
பலபதங்கேட்டுந்தயை பண்ணுயேதோசித்தாந்தம்
பற்பல நற்பல உற்பவ விற்பன
கற்பனை செப்பரும் அற்புத உற்பன (தேவ)

உ. தனமிகவேண்டுவோர்க்குச் சல்லியோடுதானமே
நாகமுள்ளோர்க்குக்கானல் ஜலமதுபானமோ
கனசுகந்தேடெனக் குக் கவலைசன்மானமோ
கதியருள்வாயுனக்கதுபயாதீனமோ

கர்த்த சமர்த்த பிரசித்த சம்வர்த்தன
பக்தர்கள் சுத்தஅகத்துறு நிர்த்தன (தேவ)

௩. தினமும்அனந்தம்பாவஞ் செய்வதென்சம்பிரதாயம்
சிந்தைக்கறங்கசப்புசேர் வேப்பிலைக்கஷாயம்
இனிவேதநாயகனென் றேற்றேன்உன்னாமதேயம்
எனக்கல்லாவிடினும்அப் பெயர்க்கேனுஞ்செய்சகாயம்

எம்பர உம்பரும் அன்பரும் நிரம்பிய
அம்பர சம்பிரம இன்பம் நிரம்பிய. (தேவ)

உகூ-இராகம்-அடாணா-ஆதிதாளம்-

பல்லவி.

ஈசாநின்பொற்பாதமலர்நம்பினேன் என்னை
இக்ஷணமேவந்து ரக்ஷணஞ்செய்தருள்

அநுபல்லவி.

தாசர்மனகம லாசனகேசா
சாசுவதயோக சாம்பிராஜ்யபிரகேசா
ஆசைக்கினிய அவாங்மனோகோசர
அண்டபிரமாண்ட அகண்டசாரபர (ஈசா)

சரணங்கள்.

க. எத்தனையோபேர் சுகித்தமர்வீட்டில்
எனக்கிடம்பூச்சியமா தலையை
சித்தங்கொள்வாயெனப் பித்தனெனக்குத்
தினமனோராச்சியமா கல்ல
நித்தனேஇன்பமிகுந்தமுத்திநலன்
நீதரில்வானவ ரோதுவரோகலன்
சத்தில்வழக்கவர் பேசினென்னபலன்
தாயேஉற்றதுணை நீயேபின்வேறிலேன் (ஈசா)

உ. மாகுணபாகனை யோகமின்றிப்புவி
வாழ்ந்தவர் தாமெவரோ-எங்கும்
ஏகும்நெஞ்சுன்னரு காகவாதிதற்
கேக்குறுக்குச்சுவரோ - விஷ
நாகமாமாயைக்கெங்குஞ் சர்வகொள்ளையோ
நான்பயனில்லாமற் பேசிடுங்கிள்ளையோ
ஆகிலுமென்புத்தி தான்சுத்தவெள்ளையோ
ஐயனேநானென்ன தாயில்லாப்பிள்ளையோ. (ஈசா)

ங. வந்துன் தரிசனந் தந்தருளிலென்
மனக்குறைதீரேனோ-உன்தன்
சுந்தரபாதமென் சிந்தனையூன்றிற்
சுகக்கடல்சாரேனோ-பெரும்
பந்தநெருப்புக்கென் சிந்தனைசெத்தையா
பாவியென்றென்னைக்கை நீவிடில்சத்தையா
விந்தைநலந்தந் திடல்பெருவித்தையா
வேதநாயகன் பங்கென்னசொத்தையா (ஈசா)

உஎ-இராகம்-துசாவந்தி-ஆதிதாளம்

பல்லவி.

ஆதிபரஞ்சோதியே - எனை
ஆதரித்தருள்வாயே.

அநுபல்லவி.

ஓதிஉணரவொண்ணு தோங்குங்குணாகர
நீதிவடிவமூனு நின்மலசாகர (ஆதியே)

சரணங்கள்.

க. உலககாரியத்தில் நான்வெகுதிராணி - உன்னை
உன்னுவதிற்கேவலம் அப்பிராணி
நலம்என்பதெனக் குண்டாமோகாணி - என்தன்
நவைஎற்றப்போதுமோ ஆயிரந்தோணி
மலவசமாகிச் சோர்ந்தேன்
தலைவாஉன்னடிசார்ந்தேன்
மதிக்கும்அடியர்கள் துதிக்கும்ஆரிய
குதிக்கநானென உதிக்கும்வீரிய (ஆதியே)

உ. கண்ணுள்ளபோதல்லவோ கண்காட்சி - சீவன்
கழியுமுன்னல்லவோ புண்ணியமாட்சி
மண்ணில்எனக்கு ஞானஅரசாட்சி - மிக
வாய்க்கும்படி ஐயனேகேட்டாட்சி
எண்ணரியபிரதாபா
நண்ணரும்சுப்பிரதீபா
இணங்கும்அமரர்கள் வணங்குபெருவர
மணங்குலாவு சுகுணங்கொள்குருபர (ஆதியே)

௩. தீதுபொறுத்தல் தெய்வகுலதர்மமே
செய்கைகளே மனுஷகுலதர்மமே
ஓதிவிட்டேனுனக்கென் உள்மர்மமே- என்மேல்
ஓகோஐயனே இன்னம்என்வர்மமே
பாதகமலம்அணி வேதநாயகன்பணி
படர்ந்ததிருவருள் அடர்ந்திடும்பிரம
கடந்தஞானியர் தொடர்ந்தசம்பிரம (ஆதியே)

உ -இராகம்-கேதாரம்-ஏகதாளம்

பல்லவி.

தேவனே உன்னைநம்பினேன்
அடியேனை ஆண்டருள்.

அநுபல்லவி.

தேவா துரித அபாவா சுகுண சுபாவா
மகானு பாவா வாவா (தேவனே)

சரணங்கள்.

௧. ஐயாநிலை அற பொய்யாம்உலகினில்
நையாவணம்அருள் செய்யாயோஉயர் (தேவனே)

உ. வாராயோமுகம் பாராயோஅருள்
கூராயோவினை தீராயோகன (தேவனே)

௩. பெரியாய்கைவிடல் சரியாநான்வினை
புவியாவிதம்அருள் சொரியாயோஉயர் (தேவனே)

௪. கொக்கேசன்வினைசுட வெந்தேன்உனதிடம்
வந்தேன்சுகநிலை தந்தேஅருள்புரி (தேவனே)

௫. காதாஅருள்ஞான காமனம்இரங்
காதாஅனுதினம் வேதநாயகன்பணி (தேவனே)

௨௧-இராகம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

பரனே அடியர்மனோ கரனேநிமலதின
கரனேநீஅருள்வாயே

அநுபல்லவி.

உரனேமிகும்புவன தரனேஅகண்டசரா
சரனேபரமசுக கரனேதிரனேஅரும் (பரனே)

சரணங்கள்.

௧. என்னைவந்திரக்கும்ஏழை தன்னைநான்தள்ளிவிடில்
ஈசனேகோபம்பண்ணுவாயோ-தந்தை
அன்னையேஉனையிரக்கும் என்னைநீதள்ளில்எனக்கும்
அவ்விதமென்றேஎண்ணுவாயோ
முன்னைநீஅனேகரைஉன் பொன்னடியிற்சேர்த்தனை
இன்னமும்பலபேர்தமைப் பின்னும்வினைதீர்த்தனை
என்னவேநான்கேட்டேன்மீது சொன்னேன்பலகீர்த்தனை
பின்னையொன்றும்வேண்டேன்அருள் உன்னையேதென்பிரார்த்த
[னை (பரனே)

௨. உத்தமனேநான்பெரிய பித்தனாயினும்உனை
அடுத்தவினைஉன்னுவாயோ - பாரில்
சித்தமிசைவைத்திய மிகுத்தபாலகனைக்கை
விடுத்தகலுவாள்தாயோ
முத்தொழிலில்முதல்தொழில் கொண்டுசெய்தாயென்சடம்
முத்தஞானம்அளித்தெனைக் காத்தருளாயென்னுடம்
அத்தனேஅவ்விரண்டாந் தொழிலில்என்னசங்கடம்
அதற்கேமூன்றாந்தொழிற் கஞ்சிடேன்இதுதிடம் (பரனே)

௩. பாடுகவியிற்கற்பனைநேடுவதல்லால்உன்னருள்
கூடும்வகைகுறியேனே-என்னை
நாடும்எவரோடுமேவா தாடுவதல்லால்என்வாயை
மூடும்வகை அறியேனே
வாடுதலிற்பாதமலர் சூடுபெரியோராக
வாசுபுவனேசவுபாசனைமாராக
வீடுதவுதியாக அலையாடுகேடற்பாராக
மீதுவேதநாயகன்எப்போதுமேசொல்தாரக. (பரனே)

௩௰-இராகம்-பியாகடை-திரிபுடைதாளம்.

பல்லவி.

அம்புயப்பதம்நம்பினேன்ஐயா - பரலோகசாதக
சம்பிரமத்தைவிரும்பினேன்மெய்யா
கனதியாகக்கையா

அநுபல்லவி.

தம்பமாம்அவலம்பம்வேறில்லையே தேவாதிதேவர்கள்
சகிதமாகியசுகிதமாமல்லையே மெய்ப்போதகில்லையே (அம்புய)

சரணங்கள்.

௧. தினமும்அலையுமென் மனமேகிசகமா-அடியேனும்பால்இஷ்ட
சித்திவேண்டியே நித்தியம்யாசகமா
கனஅநீதனென்மீதரோசகமா-என்சொல்உன்காதுக்குக்
கடினமாகிய கொடியவாசகமா
காமெனுமசகமா (அம்புய)

௨. மண்ணின்வாழ்க்கையில் எண்ணியாதனையே அதுநீங்கவேயருள்
மன்னிடாமலென் இன்னஞ்சோதனையே
திண்ணியம்பெறு புண்ணியசாதனையே-அடியேனுக்கேன்வா
தீனமாகச்செய் ஞானபோதனையே
செய்தேன்வந்தனையே (அம்புய)

௩. எண்ணிமகிழ்ந்திடு புண்ணியவிக்கிரகமே-பரிசுத்தசிலர்கள்
இஷ்டபூரண துஷ்டநிக்கிரகமே
விண்ணினோர்தினம் கண்ணுசுகக்கிரகமே-இனிப்புரிந்தருள்
வேதநாயகன் தனக்கனுக்கிரகமே
பணியார் உக்கிரகமே (அம்புய)

௩௧. இராகம்-ஆகிரி-திரிபுடைதாளம்.

பல்லவி.

சம்மதியெனக்குமெய்யனே - உனைநினைக்க
நன்மதிதந்திடிலையனே

அநுபல்லவி.

அம்மவென்றழ மேன்மேலும்
வெம்மனநோயே சூழ்ந்தாலும் (சம்மதி)

சரணங்கள்.

௧. தன்னைஉன்னவே கூடாதென்றே தடைசெய்வோன்தான்
இந்நிலத்துண்டோ குணக்குன்றே
நின்னையேதொழவிரதம்
நேர்ந்துனை அனவாதம்
உன்னவேஎன்மனோரதம்
உதவுவாய்கருணாமிர்தம்
ஓங்கிவளர்தனம் நீங்கியொழியினும்
வீங்கியுடல்பிணி தாங்கியழியினும் (சம்மதி)

௨. பதமலர்மேல்ஆசைகொண்டேனே உலகவாழ்வு
சதமலவென்றுண்மைகண்டேனே
நிதமுனைப்பணியுமதி
நீதாஇலையோவிதி
அதிற்குறையுமோஉன்நிதி
அண்டினேனுன்சந்நிதி
அடரும்வறுமையோ டிடர்கள்சூழினும்
படருமனந்துயர்க் கடலில்ஆழினும் (சம்மதி)

௩. உத்தமபிரமனைசதன்னியமே சௌஜன்னியமேமெய்ப்
பத்தர்கள்அல்லாதார்க் கன்னியமே
சுத்தமதுரபாஷணா
சோபனகுணபூஷணா
வித்தகசுவிசேஷணா
வேதநாயகன்போஷணா
விலகிபேனை உலகம்நகைக்கினும்
கலகமாகவே பலர்கள்பகைக்கினும் (சம்மதி)

௩௨. இராகம்-கேதாரம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஐயனே-உயர்-மெய்யனே.

அநுபல்லவி.

உய்யவே அருள்புரி செய்யபதந் தந்தெனை (ஐயனே)

சரணங்கள்.

௧. சுகமேனோநான் ஆத்ம இரக்ஷண்ணியமே-பெற
இரங்கியருள் கடாக்ஷ வீக்ஷண்ணியமே
தாசன்நானுனக்கென்னுந் தாக்ஷண்ணியமே-கொண்டு
தந்தருள்வாய் விவேக தீக்ஷண்ணியமே (ஐயனே)

௨. இகநிதிஅழிந்து போமில்லாது-அதை
சுந்தனம்போது மென்றால்செல்லாது
நிகழ்நித்தியசுகந் தந்தால்அல்லாது-சற்றும்
நில்லாமல்நச்சும் என்வாய்பொல்லாது (ஐயனே)

௩. கோதையர்மைந்தர் முதற்பரிஜனமே சந்தைக்
கூட்டம்அவர்மேற் கொள்ளேன்தரிசனமே
வேதைதரும்இது நிதரிசனமே-அருள்
வேதநாயகனுக்குன் தெரிசனமே (ஐயனே)

---

௩௩. இராகம்-ஜயந்தஸ்ரீ-ஏகதாளம்.

பல்லவி.

காதாதீந்தர விநோதா உன்றன்
பாதாரவிந்தமெனக் காதாரம் நாதா.

அநுபல்லவி.

வேதாந்தசார நயபோதா-பஞ்ச
பூதாந்தகால விபரீதா பிரக்கியாதா-ஜெக (நாதா)

சரணங்கள்.

௧. பேசருஞ்சர்வ புவனேசா-நல்ல
தாசர்மனாலயவாசா பாவநாசா-ஜெக (நாதா)

௫

௨. மாவரந்தரவல்ல நாதா-வினை
போவெனநீசொலிற் போகாதா-சாகாதா-புவி (நாதா)

௩. மடமையின்சப்தமேதிசமா-அந்தப்
பேயைக்கொல்வ துனக்கவசமா-தாமசமா-தெய்வ (நாதா)

௪. அடியன்மனங் கடினஇரும்பா-அருங்
கொடியவினை அதற்குக்கரும்பா-கானோர்துரும்பா-ஜெக (நாதா)

௫. ஆதிமத்திய அந்தரகிதா-சுயஞ்
சோதிமய அமரர்சகிதா-சனசுகிர்தா-மகி (நாதா)

௬. மயாந்தகாரம் அகில்இரணு-வேத
நாயகன்தொழுமலர்ச்சரணு-அந்தக்கரணு-தெய்வ (நாதா)

௩௪-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

காக்கவேண்டும் கடவுளே நீகாக்கவேண்டும்

அநுபல்லவி.

காக்கவேண்டும்எனை அன்பன் ஆக்கவேண்டும்என் கவலை
நீக்கவேண்டும்பாவமெலாம் போக்கவேண்டும் திடமெனைக் (காக்க)

சரணங்கள்.

௧. பண்ணியவினையுமனம் எண்ணியவினையும்வாக்கில்
நண்ணியவினையுந்தீரக் கண்ணியவரந்தந்தெனைக் (காக்க)

௨. ஆரணனேநீகொடுத்த தாரணிச்செல்வத்தின்மர்ம்
பூரணமானேன்பவரி வாரணசுந்தந்தெனைக் (காக்க)

௩. எந்தவேளைமரணமோ அந்தவேளைவந்துன்அர
விந்தமலரேசிகருஞ் சுந்தரஅடிதந்தெனைக் (காக்க)

௪. பூதமுதலானதீ ப [illegible] காரணனேநாரணனும்
வே[illegible]நாயகன்பணிபிரம் மொபரதபூரணமேயெனைக் (காக்க)

௧௫-ஆம்-கேதாரகௌளம்-திரிபுடை-தாளம்.

பல்லவி.

ஈசனேமல நாசனேமல வாசனேபிர காசனே.

அநுபல்லவி.

பாசஇருளினை நீக்குவாய்-உன்றன்
பதத்துக்கெனைஉற வாக்குவாய் (ஈசனே)

சரணங்கள்.

௧. சிறியன்மதிவெறும் ஸ்தூலமே-அதன்
செயலெல்லாம்அலங் கோலமே
குறிகொள்பாச நிர்மூலமே-செய்து
குணந்தந்திட இதுகாலமே
அறியநானிடும் ஓலமே-செவிப்
பொறிகொண்டுத வனுகூலமே (ஈசனே)

௨. அடருங்காமங்கொள பேழையே-நிகர்
ஆதம்உடலெனும் பாழையே
திடமென்றுன்னும்நான் ஏழையே-குறை
தீரக்கற்றறி மோழையே
தொடுசிலேட்டுமங் கோழையே-உயர்ந்
திடுமுன்தொலைப்பவப் பீழையே (ஈசனே)

௩. என்னைக்கெடுத்திடக் சச்சையே-இடை
இறுக்கிக்கட்டிக்கொண் டிச்சையே
முன்னைவருந்திடக் கொச்சையே-கொண்டேன்
முன்வந்திரந்தனன் பிச்சையே
உன்னுமாவரத தியாகமமைபொழி
பண்ணும்வேதநா யகன்வெவ்வினையொழி (ஈசனே)

௧௬-ஆம்-ஆனந்தபைரவி-ரூபகதாளம்.

பல்லவி.

நிரந்தரனே மா துரந்தரனே கன
நிர்மலத்துவ தர்மகர்த்தத்துவ

அநுபல்லவி.

பரந்தபேரருள் சுரந்துகாத்தருள்
வரந்தந்தென்வினை விரைந்துதீர்த்தருள் (நிரந்தரனே)

சரணங்கள்.

௧. சித்தமிரங்கிஎள் ளத்தனைநீதயை
செய்யிற்பிழையேனோ-கன
நித்தனேஎனபிழை எத்தனைஎன்னினும்
நீங்கித்தழையேனோ-நல்ல
உத்தமம்என்னிடம் சுத்தசரித்திரம்
ஒன்றேபலவிதம் என்துர்ச்சரித்திரம்
நித்தம்என்னெஞ்சம் உடுத்தமால்வஸ்திரம்
நீக்கியெனைச்சேர் சௌபாக்கியசமுத்திரம் (நிரந்தரனே)

௨. உதிமதிகதிர் முதலெல்லாஞ்செல்லும்
உன் ஆணைவழியே-என் தன்
கதியொன்றேஅந்த விதியைக்கடந்து
வளர்க்குமாபழியே-இந்தப்
பொதிமதிக்கேன் தனியாசாகழியே
புனிதஞ்செய்குவ துன்பெயர்மாகழியே
பதிதனாமென்பதற் கென்செய்கைசாகழியே
பாவன்னீயென ஈவாய்அத்தாகழியே (நிரந்தரனே)

௩. பாயிருள்நீக்காத சூரியனாலேஅப்
பாருக்கென்னசாரம்-ஞான
ஆரியனேஉன்முன் சாரலாமோ
அகத்தில்அந்தகாரம்-நாளும்
சாரமில்லாச் சமுசாரகோலாகலம்
சாருமெனக்கென்னுந் தீராவியாகூலம்
வீரனேநீயறிவா யென்பலாபலம்
வேதநாயகனே நீதருவாய்நலம் (நிரந்தரனே)

௧௭-இராகம்-ஆநந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

அப்போதுனைத்தொழல் அறிந்தையா-உனை
இப்போதேதொழ அருள்செய்யாய்.

அநுபல்லவி.

முப்போதும்உனை முதலேசுரர்தொழும்
அப்பாமரணம்உற் றடியேன்உடல்விழும் (அப்போ)

சரணங்கள்.

க. திடமாய்ப்பிறப்பாறைபோலே திரண்டிரோமைநகர்கட்டும்
சித்தாந்தபேசாசுவன்னைந் சேர்ந்திறுகிப்பலசிட்டும்
படர்ஜீவாயுவெளிப் படர்ந்துப் ஓடிமூட்டும்
பாரிதுவேலியெனப் படுமாயைவிகாடைதட்டும்
பலங்கொள்உணர்வது கலங்கிநிலைகெட
இலங்குடலைஉயிர் விலங்கியெவிவுறும் (அப்போ)

உ. மனைவிநேசர்கடன்காரர் பண்டிவார்த்தைதவிரிப்பார்
வனைகெமக்கென்றவென்று மனைகயிறுத்திரிப்பார்
மனையிற்பொருளையெல்லா மாவலைபோட்டரிப்பார்
வனைவொன்றுமின்றேநகையால் மனித்தொண்டையை நெரிப்
மடங்குகுழல்கா முடங்குசெயலோடு (பார்
இடங்கொள காணமும் அடங்கிமாறுறும் (அப்போ)

ஙு. அழுகைக்குரலும்பல முழக்கமும்நாறுபேதம்
ஆகப்பலபக்கத்தும் அடக்குமேகடறுகம்
விழுகையுறும்உடலின் வேதனையும்பிரமாதம்
வேதநாயகனே அப் போதுணைஉன்னவேதம்
விரிக்கும்இடர்பல தரித்துஉடலினை
புகுக்கும்இசிவொடு பரிக்குங்வேளையில் (அப்போ)

கஅ-இராகம்-காம்போதி-ஆதிதாளம்

பல்லவி.

எவ்வகையிலும் நானே-நல்வழிபற்றி
உய்வகை அருள் கோனே-

அநுபல்லவி.

செவ்வழிநிற்போர்மனந் தேன்கள்வளரும்பூவே
பொருளவமாகபேரின்பம் பழுக்குங்கற்பககாவே (எவ்வ)

சரணங்கள்.

க. வரியாகிக்கிடவென்றுவிலன் குரியன்களிற்றுலே
வாக்கட்டின்உருக்கும் வானமும் எங்குமேலே
பிறர்கோப்செய்யினைனக்குப் பெருந்தோ கினிக்ககவாவே
பொறுதனைபிழைஎழு திடவேண்டும்கொடியோலே (எவ்வ)

௨. நல்வழிநடக்கவென்றால் இருகாற்குங்களை
நாளுந்துர்வழிநடப் பதிலெனக்குண்டோகளை
புல்வினையேன்செவி பொய்கள்நுழையும்வளை
புண்ணியோபதேசமென்றால் புகஅதில்லை துளை (எவ்வ)

௩. உன்னைத்துதிக்கவென்றால் உட்கில்என்வாய்க்குநோயே
ஊர்வம்புபேசஎனக் குடம்புமுழுதும்வாயே
மின்னைநிகர்பிரபஞ்ச வேதனைநீக்குவாயே
வேதநாயனுக்குச் சாதகமானதாயே (எவ்வ)

௩௯-ஆம்-செஞ்சுருட்டி-ரூபகதாளம்.

பல்லவி,

கதியென்தன்முகம் பாரையா
கதிநீயன்றி ஆரையா.

அநுபல்லவி.

மதியுள்ளோர்கள் சிந்திக்கும் அமிர்த
வாரியேஅருள் மாரியே (கதி)

சரணங்கள்.

௧. உனக்கென்வண்ணம் அந்தரங்கமா
உதவிதான்செய்யிற் பங்கமா
எனக்கிங்ககஷ்ட அங்கமா
இன்னமென்ன ஆடங்கமா
தனக்குநிகரில்லாத ஞானசாகரா-குணாகரா (கதி)

௨. அதஞ்செய்யும்வினை கற்கண்டோ
அதைத்தொலைப்பதென் பலங்கொண்டோ
நிதம்நான்செய்வது வீண்தொண்டோ
நீயல்லாற்கதி வேறுண்டோ
பதகமலங்கள்பரவும்பத்தர்கள்-பாக்கியமே-மனோக்கியமே (கதி)

௩. அனைக்கேதுப்பிள்ளைமற் குரோதமா
அருள்செய்வது பிரமாதமா
வினைக்குநான்முதற் பாதமா
விலக்கஇன்னம் விவந்தமா
நினைக்கும்வேதநாயகன்பணி-நிதனே-பிரபோதனே (கதி)

௪௰. இராகம்-கமாஸ்-ரூபகதாளம்

பல்லவி.

ஜாலஞ்செய்வதேதோஐயா
சிலம்புமொன்றுந்தோமெய்யா.

அநுபல்லவி.

ஞாலமெல்லாந் தாங்குங்கையா
நற்குணமில்லார்க்குவெய்யா (ஜாலம்)

சரணங்கள்.

௧. பெண்டுபிள்ளை யோடினமே
பேய்சுரை படர்வனமே
அண்டும் இவரால்தினமே
ஐயையோ நொந்தன்மனமே (ஜாலம்)

௨. பாழுமனமே மற்கடம்
பண்ணும் அகடவிகடம்
ஊழ்விணைதரும் சங்கடம்
ஒழித்துநீ யருள்வாய்திடம் (ஜாலம்)

௩. நீதிவழுவாச் செங்கோலா
நித்தியசங்கீத லோலா
வேதியர் பரவுஞ்சீலா
வேதநாயகன் சேர்ஜாலா (ஜாலம்)

---

௪௧. இராகம்-சமா-திரிபுடைதாளம்.

பல்லவி.

வேதநயகனே எவ்விதமும்உன்
பதமலர் அருளே.

அநுபல்லவி.

போதநாயகனே பொயநீங்கிய
புனிதநாயகனே மெய்தாங்கிய (வேத)

சரணங்கள்.

௧. என்னுமனமேதுர்க் குணங்கொள்பாண்டம்
ஏதுமஅறிகிலன் ஞானகாண்டம்
பண்ணும்பாவங்களே பிரமாண்டம்
பதரும்வார்த்தைகளே அபாண்டம் (வேத)

௪. மண்ணில்அறு தினம்பூதநேகம்
வளர்ப்பதெனக் ககளாஉத்தியோகம்
புண்ணியஉடல் வளர்த்திடும்வைதிகம்
பூண்டிலேன் அருள்வாய் விவேகம். (வேத)

௫. விதநவிஷதருக்க சகஸ்ராச்சிரமம்
விரும்புவோர்க்கிதில் விலகிடச்சிரமம்
நிதங்கொண்டேன் இந்தவாழ்விலேபிரமம்
நீங்கவேதாநாயகனே அருள்கிரமம் (வேத)

௪௨. இராகம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி,

உனக்குகட்டியவீட்டை எனக்குக்கொடாதிருப்ப
தென்னஞாயம்ஸ்வாமி,

அநுபல்லவி.

இனிக்கும்அவ்வீடுசெய்யதெங்கள்நிமித்தமே
என்றுநீசெய்ய வில்லையோவாக்குதத்தமே
உனக்குநான்பிள்ளை யென்பதுலகப்பிரசித்தமே
உவந்துகேளாயோஎன்பிரலாபசத்தமே (எனக்கு)

சரணங்கள்.

௧. சித்தவிகாசமுறு நரர்க்குச்செய்யிவ்வுலகம்
சிறப்புள்ளதெனின் கோனே நல்ல
உத்தமர்க்கமைத்தநித்தி யானந்தமுத்தியின்பம்
உணர்வதெப்படிநானே
சுத்தமணிபொன் அம்மே துரும்புகள்சட்டமே
தொல்லுலகின்பமெல்லாந் துன்பம்போலோட்டமே
அத்தமியாநித்திய சூரியர்அன்பர்கூட்டமே
அநுதினம்எனக்கந்த வீட்டினில்நாட்டமே (எனக்கு)

௨. முகமுகமாகஉனைத் தரிசிக்கும்பாக்கியத்தை
மொழியநினைக்க ஒண்ணுமோ - இந்த
இகமிசைமனமொடு புலன்கட்கெட்டாத அந்த
இன்பம்எப்போது நண்ணுமோ

அநிமிசைஉன்னஉன்ன ஆனந்தம்பொங்குமே
ஆயிரங்கோடிசூரியர்ஒளிமயங்குமே
நிகரறுகீத விநோதங்கள் தங்குமே
நிரதிசயானந்தம் நிரந்தரம்தங்குமே. (எனக்கு)

௩, இதமனைகட்டிநார் தும்பபிரதிஷ்டைசெய்த
இனையறும்எந்தாயே-நித்திய
சுகமனை தன்னில் பிரவேசிக்கவேநல்ல
சுந்தரம் அருள்வாயே
அகிலலோகப்பிரபஞ்ச நாடகசூத்திரனே
அற்புதபராயகீத்தி யானந்தக்ஷேத்திரனே
நிகரறுசௌந்தர நிர்மலகாத்திரனே
நிதம்வேதநாயகன்தொழுங்குணபாத்திரனே. (எனக்கு)

---

௪௩. இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

ஐயனே உன் அழகைக்காண
ஆசைநான் கொண்டேனே. (ஐயனே)

அநுபல்லவி.

வையகமீதுபல அழகையும்
வகைவகையா வருத்திக்காட்டும். (ஐயனே)

சரணங்கள்.

௧. உதயசூரியன் சோமன் தாரகை
உன்முன்னே மின்மினியே
நிதிநவமணி யென்னும்குப்பைகள்
நிகருமோஉனை இனியே (ஐயனே)

௨. கனியுந்தேனும் பாலும்சீனியும்
கண்டும்கரும்பும் சிறுமை
இனியஉனது தரிசனத்தின்முன்
இவைகள்யாவும் வெறுமை. (ஐயனே)

௩. செழுமையாகிய வண்ணமலர்கொள்
சிங்கார வனக்காட்சி
அழகின்ஆலயமானஉன்முன்
அதற்கெத்தனையோ தாட்சி (ஐயனே)

௪. அதிசவுந்தர மயில்குயில்கிளி
யாதிபறவைக் கூட்டம்
விதியின் அவை செய்யுன்னழகின்முன்
வெட்கிப் பஞ்சுபோலோட்டம். (ஐயனே)

௫. சத்தஸ்பரி சரசரூபகந்தந்
தான் அல்லாதபொருளே
எத்தன்மைஉன துருவென்றறிய
இன்பக்காட்சி-அருளே. (ஐயனே)

௬. பதியில்நீசெய் பலபொருள்களைப்
பார்க்கப்பார்க்க வடிவே
அதிசயம்தரும் உன்தன் அற்புத
அழகினுக்குண்டோ முடிவே. (ஐயனே)

௭. பிறந்தநாள்முதல் தாயைக்காணுப்
பிள்ளை தன்னை ஒத்தனே
சிறந்தவேத நாயகாஉன்மேல்
சிந்தையாவும் வைத்தேனே. (ஐயனே)

---

௪௪. இ-ம்-மாஞ்சி-ரூபகதாளம்.

பல்லவி.

என்னைநீஆளுவாய்-ஏகனே-யோகனே-என்னை

அநுபல்லவி.

பொன்னைமாதப்பூவைஎண்ணம்
பூண்டுநான்கெடாத வண்ணம். (என்னை)

சரணங்கள்.

௧. யாதனுசரீரமே யாதுமில்லைசாரமே
வாதபித்தவிகாரமே வாதனைகள் அபாரமே
மலநிவாரணா-வடிவபூரணா
நலஉதாரணா ஞானகாரணா. (என்னை)

௨. எந்தநாளும்கிலேசமே என்னெஞ்சிற்பிரவேசமே
பந்தவினையைநாசமே பண்ணிநீவாசமே
பதிதபாவனா பரமஜீவனா
அதிகசோபனா அகிலஸ்தாபனா. (என்னை)

ங. அன்னை தந்தை நீ அல்லவோ ஆயிரந்தரஞ்சொல்லவோ
என்னை மாயைகொல்லவோ எங்குநான் இனிச்செல்லவோ
ஏதபேதகா இனியசாதகா
வேதநாயகா விமலதாயகா. (என்னை)

சரு. இ-ம்-சைந்தவி-திரிபுடை-தாளம்.

பல்லவி.

ஏழைக்கிரங்கவொண்ணுதா-இந்த-ஏழை

அநுபல்லவி.

ஆழக்கடல்உலகை ஆளும்விநோதா. (ஏழை)

சரணங்கள்.

க. சாடும்பிரசண்டக் காற்றுலேதிசையும்
தப்பியேஅலைபடும் கப்பலைப்போலே
நாடும்பிரபஞ்சமாலே என்னை
நைவிக்காவாடினே னுன்புவிமேலே. (ஏழை)

உ. நீசெய்வதெல்லாம் சகாயம்இங்கே
நிரந்தரம்என்செய்கை யாவும்அந்நியாயம்
ஈசனேநின்பத நேயம்எனக்
கெள்ளளவுமில்லை ஈதென்னமாயம். (ஏழை)

ங. அற்பசுகத்துக் குழைத்தேன்பாரில்
அநுதினம்ஆயிரம் பொய்சொல்லிபிழைத்தேன்
பற்பலதீவினை இழைத்தேன்துன்பப்
பாரம்பொறுமலே பரிந்துன்னை அழைத்தேன். (ஏழை)

ச. ஆன்மபத்தினிமணவாளா-அகி
லாண்டபிர்மாண்ட அகண்டக்கோளா
வான்மகிழ் தினதயாளா தினம்
மகிழ்வேதநாயகன் வணங்கும்பொற்றுளா. (ஏழை)

௯௬. இ-ம்-தன்னியாசி-ஆதிதாளம்.

பல்லவி.

கருணாகரப்பரம்பொருளே அடியனைக்
கண்பார்த்தருள்வாயே. (கருணா)

அநுபல்லவி.

இருணாசஞ்செயும் இரவிசமான
தெருணடியதேஜோபயம்ஆன. (கருணா)

சரணங்கள்.

௧. தோன்றினநாள்முதல் கருணையொன்றறியேன்
சொற்பனந்தன்னிலுந் துர்க்குணம்பிரியேன்
ஈன்றவனீயென என்றுமேகுறியேன்
என்னசெய்வாயோ வென்றேங்கினேன்சிறியேன். (கருணா)

௨. தாரணியில்நானொரு தருவெனமுளைத்தேன்
தமருணயாவுமே சாகையாய்க்கிளைத்தேன்
கருமமாகியவிஷக் கனிகளைவிளைத்தேன்
கண்டனைசெய்வையென் றஞ்சியேகளைத்தேன். (கருணா)

௩. நிகிலலோகங்கட் கெல்லாநீயதிகாரி
நிச்சயமாஎன் மனம்நினக்கொருபாரி
அகிலந்தனிலே அந்தமனம்அகங்காரி
அடக்கிஆளாவிட்டால் அழியாளோநாரி (கருணா)

௪. அழகுக்கல்யாணமான அமிர்தமேசுந்தரமே
அன்பருக்கண்மழை பொழியுங்கந்தரமே
தொழுதிடும்வேதநாயகன்சுதந்தரமே
துணைநீயென நம்பினேன்நிரந்தரமே. (கருணா)

௯௭. இ-ப்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஏனின்னம்தாமதமையா
என்னிடம் வர. (ஏனின்)

அநுபல்லவி.

தானேஉமக்குமுத்தித் தலமொன்றுமில்லையோ
வானமுத்தரைவிட்டு வரமனமில்லையோ (ஏனின்)

௧. சூரியனைத் தூண்டஅகன்றீரோ அந்தச்
சோமனுக்கொளிதரச் சென்றீரோ
பாரினைப்புரட்டியே நின்றீரோ-அதில்
பகல்இரவுண்டாக்க முயன்றீரோ
காரிலிருந்து கனமழை சொரிந்தீரோ
கற்பகத்தில் சுக்கனியே புரிந்தீரோ
சாரும்பல்லுயிர்க்குயிராய் விரிந்தீரோ
சர்வலோககாரியஞ் செய்துதிரிந்தீரோ. (ஏனின்)

௨. அண்டகோடிகளைத் தாக்கினீரோ-நலம்
ஆகச்சில அண்டம் ஆக்கினீரோ
கண்டகர்உலகை நீக்கினீரோ-கடல்
கரையைக்கடவாமல் தேக்கினீரோ
அண்டிப்பலுயிர்களை ஆட்டுகின்றீரோ
ஐம்பூதங்கட்கும் வேலைகாட்டுகின்றீரோ
மண்டுங்கனிக்குச் சுவைகூட்டுகின்றீரோ
மலருக்குப்பலவண்ணந் தீட்டுகின்றீரோ. (ஏனின்)

௩. மரஞ்செடிபயிர்கள் நிறைத்தீரோ-அவை
வளரவே தண்ணீரை இறைத்தீரோ
சுரர்கள் இசைகேட்டுக் களித்தீரோ நல்ல
தொண்டர் இதயத்தில் ஒளித்தீரோ
பரமகிருபாகர பரஹிதநேசரே
பரமதகண்டன பாபவிநாசரே
சருவவிநோத சராசரவாசரே
தாசன்வேதநாயகன் தன்பிராணேசரே. (ஏனின்)

௪அ. இ-ம்-மத்தியமாவதி-ரூபகதாளம்.

பல்லவி.

இவ்வளவுதான் ஐயனே-அதிகம்அல்ல
இரங்கி நீ யருள்மெய்யனே. (இவ்வளவு)

அநுபல்லவி.

அவனியில்வளரும் மூவாசையைப்பரிகரி
எவ்வளவுமேதுன்பம் இல்லாமலஆதரி
இதயமலர்தரி விதனமதுபிரி
நிதமும் அருள்புரி இதுவே சரிசரி. (இவ்வளவு)

சரணங்கள்.

௧. எனைத்தினாளும்நீ நீங்காதே-நான்போம்
இடமெங்குங்கூடவாயின் வாங்காதே
வினையினென்றென்மேற்கோபம் வீங்காதே-மன்
வேதனைசுமக்க என்னால்தாங்காதே
நினைவிலுந்நிந்தைநான் நினையாமற்பார்த்திரு
நித்திரைசெய்யும்போதென் பக்கத்தில்காத்திரு
நெடியபிணிபெற-கொடியபிழைபொறு
அடியன்மனமுற-கடியதுயர்அற. (இவ்வளவு)

௨. மாயையில்மனம்புக ஒட்டாதே-என்னை
வஞ்சனைக்காளென்று சுட்டாதே
ஆயிரம்தண்டம்என்சொல்தட்டாதே-உன்
அனுக்கிரகமின்றி நலங்கிட்டாதே
நாயேன்விரும்பியேநல்லவரங்கள்கொடு
நரகைஅடைத்துமோக்ஷ நாட்டைத்திறந்துவிடு
நனவுகொடுகொடு-சினமும்விடுவிடு
தினமுமகிழ்வொடு-கனசுகுணம்இடு. (இவ்வளவு)

௩. நலமன்றிக்குறையை ஆராயாதே-பெரு
நன்மைகள்கொடுப்பதில் ஓயாதே
பலவேலைஇட்டேனென்று சாயாதே-அற்ப
பாக்கியகரநான்கேட்கினும்-ஏயாதே
புலனில்வேதநாயகன் புகழுஞ்சுகுணசீலா
பூதபவிஷியவர்த்தமானமெனுந்திரிகாலா
போதமழைபொழி-மாதர்மயலழி
பாதகம்தொழி-ஏதமறவிழி. (இவ்வளவு)

சக. இ-ம்-சாரங்கா-அடதாளசாப்பு.

பல்லவி.

ஆதரித்திடநல்லதருணம்-என
தையாஉனக்கனந்தஞ்சரணம். (ஆதரி)

அநுபல்லவி.

பாதகநாசனே-பரமகிருபாசனே
சாதகமோசனே-தர்மப்பிரயோஜனே. (ஆதரி)

சரணங்கள்.

௧. என்பழிமறைப்பதில் யானையதப்பாதாளம்
இதரர்பழிதூற்றலில் என்வாய்பெரியமேளம்
அன்பின்மனப்பேராசை அம்புவியிலும்நீளம்
அண்டம்வசமானாலும் அடங்காப்பெருவேதாளம்
ஆட்டிமயல்வலை-பூட்டிஅநுதினம்
கோடிசெயும்வினை-ஓட்டிஅடியனை. (ஆதரி)

௨. ஓம் அலையநெஞ்சுக் குலைகுலையும்வாணும்அறுபம்
உன்னிடம்வரவென்றால் ஒழியாதஅசந்தர்ப்பம்
தேடிநற்கருமங்கள் செய்வதுங்கஜகர்ப்பம்
தீவினைசெய்வதேஎன் சிந்தனையின்சங்கற்பம்
திருத்தமுடனேஎன்-கருத்துநலமிசைப்
பொருத்தமுறச்செய்து-வருத்தந்தொலைத்தெனை. (ஆ)

௩. என்குறைகாணவென்றால் என்னிருகண்ணும்ஊனம்
இதரர்பிழைகாணக்கண் இரவிகோடிசமானம்
வன்கண்மொழிகளுக்கென் வாயேமுக்கியஸ்தானம்
மதுரச்சொல்பேசவென்றால் மாறாததிர்ககமோனம்
வாதமொடுபல-பூதகாரண
வேதநாயக-நீதனேஎனை. (ஆதரி)

ரு௰. இ-ம்-நாதநாமக்கிரியை-திரிபுடை-தாளம்.

பல்லவி.

உன்னைநம்பினேன்ஐயனே-எனையாதரி.

அநுபல்லவி.

உன்னைநம்பியஏழை-தன்னைமுகம்பாராயல்
அன்னைபிதாவேயினி-கைவிடலாமா
நான்கெடலாமா
துன்பப்படலாமா. (உன்னை)

சரணங்கள்.

௧. தனமுமின்னார்கள்புவனமும்உலகசௌக்கியமும்
கனமும்வேண்டிலன்இதுதேராயோ

இன்றும்உனைக்கருதுமனமும்உனதுதரி
சனமும்வேண்டினன்அருள்கூராயோ

மருள்தீராயோ
பொருள்தாராயோ. (உன்னை)

௨. படிமீதினிலெண்ணமுடியாஉதவிகள்
அடியேனுறச்செய்தபெரியானே
கொடியேன்உனைஅரைநொடியாகிலுமெந்நாளும்
படியேஅருள்நலம்புரியானே.

தூயர்க்கு குரியானே
தீயர்க் கரியானே. (உன்னை)

௩. அயமேபெருங்கல்லின் பயமேயெனும்இரு
தயமேமெழுகென உருகாதோ
ஸ்வயமேபரயாதி சயமேவேதநாயகன்
நயமேவிணைசெல்வம் பெருகாதோ

துன்பு கருகாதோ
இன்பு பெருகாதோ. (உன்னை)

௫௧. இ-ம்-பந்துவராளி-ரூபகதாளம்.

பல்லவி.

கடைக்கண்ணால் எனைப்பாராய்-உன்
தடைக்கலம் வினைதீராய்.

அநுபல்லவி.

கிடைக்கொண்ணாப் பதந்தாராய்-நலம்
படைக்கவே அருள்கூராய்-அருட்
கொடைக்குநாமென்னவேயவதரித்த
சோலாகல-மூலா அநு-கூலாகுண-சீலாமிர்தம். (கடைக்)

சரணங்கள்.

௧. வஞ்சகமாயையில் ஆழ்ந்தேன்-ஒரு
தஞ்சமென்றடி தாழ்ந்தேன்
அஞ்சலென்றெனை ஆதரித்தாளுவாய்
ஐயாமிக-பொய்யாய்மனப்-நையாதருள்-செய்யாஒரு (கடைக்)

௨. ஐயனேதீரா யென்பாவம்-அருள்
செய்யஉனக்கென்னலோபம்
வையகமதில்வளர் அண்டம்யாவினும்
வாசாபுவ-நேசாமற-நாசாபிர-காசாஒரு. (கடைக்)

௩. அஞ்சலெனில்உன்வாய்நோமோ-ஏழை
நெஞ்சம்வருந்திடலாமோ
பஞ்சமோசைப்பொருள்கொஞ்சமோபூபரி
பாலாஅநு-கூலாஒரு-மேலாமுதல்-நூலாஒரு. (கடைக்)

௪. இத்தரைமீதினில்நீயே-நல்ல
பத்தரைக்காக்கவந்தாயே
சித்தமுவந்தெனைநித்தமும்ஆளொளிர்
தேகாகன-யோகாஅதி-தியாகாதனி-ஏகாகுளிர். (கடைக்)

௫. பூதலம்போற்றும்பொற்பாதா-அரு
மாதவஞானப்பிரசாதா
வேதநாயகன்பாடுந்தமிழ்க்கருள்
வேதாஉயர்-நீதாகன-தாதாநய-போதாஉன் (கடைக்)

---

௫௨. இ-ம்-அசாவேரி-திரிபுடைதாளம்.

பல்லவி.

பாசத்தால்மனம்வாடினேன்-உந்தன்
வாசத்தால்மலர்சூடினேன்.

அநுபல்லவி.

நேசத்தோர்கள்கை வல்லியமே-உயர்
நிர்மலாதித்த துல்லியமே-கன
மாசற்றோருங்கும் பிரபல்லியமே-ஜெகம்
மகிழும்பக்தவாற் சல்லியமே-மல. (பாசத்)

சரணங்கள்.

௧. நினைவிலேன்பிழையாவுமேஎண்ண
நினைக்குந்தானென்ன சாத்தியமா
எனைவருத்தும் இந்திரியப்பேயதனக்
கித்தனை ஆகாத்தியமா
வினைஎனக்கு விரோதியா-என்றும்
விலகிடாக்கர்மவியாதியா-கொடு
மனமுமேபிரதிவாதியா-கெட்ட
மாயைஎன்ன தாயாதியா-ஐயா. (பாசத்)

௨. குதிரைக்கொள்ளி எறும்புபோலெனக்
   கிடைவிடாமன வாட்டமே
முழுவும்பக்தப்பசாசு தன்றேறி
   மாறிடாத போராட்டமே
கருமமாயா விகாரமே-செய்யும்
   கலகஞாலம் விஸ்தாரமே-கல்ல
தருமமெனக்குத் தூரமே-பின்னும்
   தப்புகள்கற்பக பாரமே-ஐயா. (பாசத்)

௩. வார்சல்லியாணத்தில் தாலிபூட்டிட
   மறக்குமூடர்கள் போலவே
தளாபிரபஞ்சவியாப்பாரத்தால்உன்தன்
   தாள்மறந்தனன் சாலவே
உளவியாதிக்காரோக்கியமே-நிதம்
   உன்னுவோர்கள்மனோக்கியமே-நலம்
விளையமாமறை வாக்கியமே-தொழும்
   வேதநாயகன் பாக்கியமே-பக்த. (பாசத்)

௯௩. இ-ம்-கன்னடகௌளை-ஆதிதாளம்.

பல்லவி.

ஆதிபரமநாதா-ஞான-ஜோதிநாதஜென்னநாதா

அநுபல்லவி.

பூதலம்பரவும் விநோதனேகன-அ
நீதமாய்இருள் பேதமாகவே. (ஆதி)

சரணங்கள்.

௧. காமக்குரோதம்தம் லோபம்-அகங்
காரம்பொய்மாற்சரியங் கோபம்-இன்னும்
பூமியிற்பலபலபாபம்-செய்யும்
புல்லன்மனம் அநித்தியரூபம்-நல்ல. (ஆதி)

௨. பெண்டுபிள்ளைகள்சமுசாரம்-மூதற்
பேசும்லௌகீக வியாபாரம்-தன்னில
மண்டுமேமோகாந்த காரம்-தூய
பார்த்திபருள்ளவை நிர்விகாரம்-நல்ல. (ஆதி)

ங. பாவக்கடல்கடக்குங் கலமே-தொண்டப்
பயிர்கள்வளருந்தெய்வ நிலமே-கன
நாவலர்போற்றிடும் நிர்மலமே-வேத
நாயகாநானுன் அடைக்கலமே. (ஆதி)

ருச. இ-ம்-கரகரப்பிரியை-ரூபகதாளம்.

பல்லவி.

இந்தவரந்தருவாய் எனக்
கெந்தவரங்களு மில்லையென்றாலும்.

அநுபல்லவி.

சுந்தரமாகத் துலங்குந்தெய்வீகனே
சந்ததமும்புவி தாங்குநிர்வாகனே. (இந்த)

சரணங்கள்.

க. காயநிமித்தங் கலங்கிநையாமல்
கண்டவர்க்கெல்லாம்நான் தொண்டுசெய்யாமல்
மாயாப்பிரபஞ்சத்தில் மாட்டிவையாமல்
மாதாகண்ணம்மென் மனதில்தையாமல். (இந்த)

உ. எங்கெங்குமேஉன் னுருவாய்மின்ன
எண்ணம்வேறின்றி உனைமன்றுன்ன
மங்களநாமமென் வாய்நிதம்பன்ன
வார்த்தைகள்யாவுமுன் வார்த்தையாய்மன்ன. (இந்த)

ங. சுத்தசைதன்னிய நிலைமையில்சார
தோஷகர்மானுபந் தங்களுந்தீர
அத்தனேநித்த முனக்கன்புகூர
ஆனந்தவீட்டிலே நான்வந்துசேர. (இந்த)

ச. சூதுபொறாமைபொய் கோபமில்லாமல்
சோரமுலோபந்துன் மார்க்கங்கல்லாமல்
வேதநெறியை விலகிநில்லாமல்
வேதநாயக விளம்பஞ்சொல்லாமல் (இந்த)

---

௫௫. இ-ம்-கமாஸ்-ரூபகதாளம்.

பல்லவி.

ஏகபராபரனே கருணைப்பிர
வாகமனோகரனே.

அநுபல்லவி.

தேகமுறும்பல மோகஉபாதிகள்-ஏகஎனக்கு
விவேகமருந்தருள். (ஏக)

சரணங்கள்.

௧. சஞ்சலமானேனே-மனம்நொந்து
தளர்ந்துபோனேனே
அஞ்சலெனத்தானே-அடியனை
ஆண்டருள்வாய்கோனே
பஞ்சபூதாதிபிர பஞ்சமெலாஞ்செய்து
அஞ்சம்செய்யும்நிஷ்பிர பஞ்சப்பொருளான். (ஏக)

௨. சங்கடமாற்றாயோ-எளியேன்
தன்முன்தோற்றாயோ
இங்கிதஞ்சாற்றாயோ-தமியனை
யேகரையேற்றாயோ
அங்குமிங்கும்புவி-எங்கும்உயிரெனத்
தங்கும்படிஅருள்-பொங்குங்குணாகர. (ஏக)

௩. நேயர்சகாயனே-அருமறை
நீதிசொல்வாயனே
தூயநிகாயனே-அமரர்கள்
சூழ்சமுதாயனே
மாயவிஷயாதி-நோயணுகாமலே
தாயெனவேவேத நாயகனை ஆளும். (ஏக)

௫௬. இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

கருணைகடாக்ஷஞ் செய்வாயோசுவாமி

அநுபல்லவி.

மருணைசமாகவே மகிழ்வாகநீயே. (கருணை)

சரணங்கள்.

க. அநியாயம் உலகனிர்த்தாந்தம்-இதில்
அழியாதவண்ணம்நீ அருள்வைஉபசாந்தம்
தனிஉன்றனேஜூமேகாந்தம்-கொள்ள
சார்வதாகாலமுமெனதுசித்தாந்தம். (கருணை)

உ. நாமரூபகமாம பிரபஞ்சம்-ஆன்ம
நன்மையை அழிக்கும் எந்நாளும்இதுநஞ்சம்
காமவிஷயாதிகளில் நெஞ்சம்-நாளும்
கலங்கினேனின்பாத கமலமேதஞ்சம். (கருணை)

ங. போதாந்தநிலைமை யுறுதேவே-நல்ல
புவனகோடிகள்செய் தளிக்கின்றகோவே
வேதாந்தரசமொழுகுகாவே-நிதம்
வேதநாயகன் இதயவண்டுவளர்பூவே! (கருணை)

ருஎ, இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

ஆதிபரமநாதா-நல்ல
அற்புதநற்பதம்பெறப் பொற்பதம்எனக்கருள்செய்

அநுபல்லவி.

ஓதரும்வுயிர்க்குயி ராகிஎங்கும்நிறையும்
பூதசராசரப் பொருள்கள்எல்லாம்உறையும். (ஆதி)

சரணங்கள்.

க. ஜீவன்பிழைக்கும்வழி அறியேனே-நான்
தெற்குவடக்கறியாச் சிறியேனே
பாவலகரிகொண்ட வெறியேனே-பந்த
பாசக்களையவெட்டி எறியேனே
ஆவலுடனேஎங்கும் அலைந்தகம்வெம்பினேன்
தேவநாயகனே உன்திருவடிநம்பினேன். (ஆதி)

உ. ஐயனேஎனக்கருள் ஊட்டாயோ-கெட்ட
அகங்காரமெனும்பேயை ஓட்டாயோ
உய்யவழியெனக்குக் காட்டாயோ-எந்தன்
உள்ளத்தில்உன்பதத்தை நாட்டாயோ
பொய்யுலகநடையைப் பொருளெனநாடினேன்
மெய்யறிவில்லாமலே மிகமிகவாடினேன். (ஆதி)

௩. அண்டங்கள்படைத்தளித்தழிப்போனே-கணம்
ஆகப்பல்கோடிகாலங்கழிப்போனே
தொண்டர்மனத்துயரம்ஒழிப்போனே-நல்ல
சுகமுத்தரோடுகூடிச்செழிப்போனே
அண்டும்வேதநாயகன் அகத்தொளிர்ஜோதியே
மண்டும்வினைகளெல்லாமாற்றுதல்நீதியே. (ஆதி)

௫௮. இ-ம்-பரசு-அடதாளசாப்பு.

பல்லவி.

ஜெகநாதா-வினை-அகலாதா.

அநுபல்லவி.

பகலோனென அரும் பவஇருள்நீக்கும். (ஜெக)

சரணங்கள்.

௧. பரிதாபம்பரிதாபம் ஐயா என்னிலைமை
பஞ்சப்புலாதியர்க் கார்தந்தார் தலைமை
தரைமிசைஎன்செய்கை யாவுமேபுலைமை
தந்தருளினிஞான சாஸ்திரப்புலைமை. (ஜெக)

௨. அநுகூலசத்துருவாகுமென் னுள்ளம்
அநுதினஞ்செய்வதெல்லாம் பெருங்கள்ளம்
தினமுமேபடிந்திடுந் தீவினைப்பள்ளம்
தீர்த்தெனையாட்டுவை திருவருள்வெள்ளம் (ஜெக)

௩. ஈசனே அறநெறி எனக்கென்றும்இலக்கம்
என்பிழைகளை எண்ண இல்லையே இலக்கம்
கூசியேநான்மிகக் கொண்டேன்கலக்கம்
குணவேதநாயகா கொடுத்தருள் துலக்கம். (ஜெக)

௫௯. இ-ம்-மத்தியமாவதி-திரிபுடைதாளம்.

பல்லவி.

இரக்கஞ்செய்வாயோ ஐயோஎன்மேல்

அநுபல்லவி.

இரக்கஞ்செய்வாயோ புரக்கும்எந்தாயே
ஏகமாகிய-யோகபூரண-பாகமேபெற-மோகமோஅற. (இரக்)

சரணங்கள்.

க. தேகநிமித்தம் செய்வதனர்த்தம்
ஏகப்பிரசித்தம் ஏங்கினேன்சித்தம்
இன்பமேவிய நின்பதாம்புய
அன்புதங்கிட துன்பமங்கிட. (இரக்)

உ. நானொருமூடன் நாயினுங்கேடன்
ஈனர்கள்சீடன் என்றுமபொய்வேடன்
ஈனமும்அவ மானமுங்கெட
ஞானமுமகன மோனமுந்தொட. (இரக்)

ந. உலகவியாபாரம் ஓயாவிசாரம்
கலகம்அபாரம் கர்மவிகாரம்
கஷ்டமுமகன நஷ்டமும்பெறு
துஷ்டனானுன் இஷ்டனாகவே. (இரக்)

ச. தாசர்கள்நேசா தர்மவிலாசா
பாசவிநாசா பாக்கியப்பிரதேசா
பாதமேதொழும் வேதநாயகன்
மீதருள்மற வாதநாதனே. (இரக்)

கூ, இ-ம்-சங்கராபரணம்-ரூபகதாளம்.

பல்லவி.

பரனேபக்தர்சுதந் தரனேநாளும்
பக்ஷம்வைத்தென்னைசம் ரக்ஷணைசெய்தருள்

அநுபல்லவி.

இரவிகோடியென ஒளிவீசிடும்
ஏகஅநேகவைபோகநிர்மேதகதற். (பர)

சரணங்கள்.

க. உன்னையல்லாற்கதி பின்னையிலையென்
றுனக்குத்தெரியாத-நாளும்
உற்றதன்பிள்ளையைப் பெற்றதாய்தள்ளின்
உலகஞ்சிறியாதா-மேகம்
தன்னைப்பயிர்வேண்டி முன்னேஅருமழை
தானேசொரியாதா-அந்தத்
தன்மைபோல்நீஉயா நன்மையுதவிலென்
தாபம்மரியாதா

இக்கலியிலெல்லோரும் பொய்யோர்களுடன்
இல்லையென்பவரின் சொல்லையுற்றுடன்
மனுஷரோக்கட்டைய தன்னிலிருக்கிடன
மாளுமுன்னுமும் வந்தானுலகங்கடன். (பல)

உ. ஈன்பதுண்டெனன் மேன்மூசாவத்தில
கர்ச்சிசெய்வதரப்ப்ரீயே வந்தன்
செஞ்சமடைந்தாவிலைக் கஞ்சம்பெருத்திட
கிலாமதவாயே உலக்
சோன்பமோ இது காவியக்கொண்டாரும்
உத்தமத்தர்மேனக
முன்னைத் திருப்பட்டிட நின்னை அவ்விட்ட
தொழுதிடுமோ வல்லாயே
இனிமே காசனைப் புகழ்வாரில்லையே
சொத்ததனக்கென்ன சாத்திரமேலையே
பாவிமென்பாலுண்டு வேலைப்பக்காலேயே
பட்டேனபொய்விட்டேன் தும்பிட்டேனுன்காலிலேயே, (பல)

௩. இத்தனும்பஞ்ச பூதங்களைச்சர்வ
சாதகமூயிலே விளை
நிர்த்திடமேவுமனக் காத்திசெய்யுஞ்
சர்வாத்தர்யாமியே என்றும்
வேதாயகன்மீ தருள்மறவாத
ஸ்வாமியே உன்மை
விடாமகமேவபல வனங்கள்சாருங்கிஷ்
...மேக்கியே
போதனேக்கரவென் பாதக்கெட்டடையே
பொய்யுருவசிய மெய்யெனுக்கட்டடையே
சாதனேக்குமுன் சாதகிட்டடையே
கல்விடப்பன்றுவய் புனைப்பிரதிஷ்டையே. (பல)

---

௧௧. இடம்பதநிலைமாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

இன்னம்பராமுகம் ஏதோ-வந்தன்
முன்னம்வந்தான் இன்றேதோ.

அநுபல்லவி.

தன்னவவராவிக்கத் தானேக்கணமே
தந்தனமேனெனை ஆதரித்தல்வங்கணமே, (இன்னம்)

க, பாரிலே சொல்வதுபோல் நீ அட்டை—செய்யில்
எப்படித் தப்பிப்பேன் என் கன்மக்கட்டை
பார்க்காமலேனே பெய்ஞ்ஞானவிருட்டை—தரும்
பட்டினத்தான்கிரியைவேறு என் அலட்டை
பூர்க்கவினைகளுக்கு காரணமுடையோ
முடமனமாயமையும் ஒழுகையோ
இக்கயாகமனை நான் அறிந்ததுபோய்யோ
தெய்வமே கைவிடல் என்செய்வேனையோ (இன்)

உ, இனருக்கு ஈவுவிதீ இயாகம்-பெருஞ்
செல்வருக்கிவது தார்மிகயோகம்
ஞானமுள்ளோர்க்குள் அருள் பிரகாசம்-மின்னும்
கலம் அவர்க்கிவதில் என்னபயோகம்
சனஞானைக்கு ஞானசையோகம்
பவதுர்லவகள்ளு பாகப்பிரயோகம்
நாயன் சக்தி அறிவென்ன சந்தேகம்
நான்விடேன்விடேன் பூர்வாறிதயாகம் (இன்)

ங, பிள்ளைக்கும் தாய்க்கும் உண்டோ பிணக்கு-மிகப்
பெருகும் உன் கருணைக்குண்டோ கணக்கு
கள்ளமயமனது மென்மனக்கணக்கு-சக்தி
கனங்கொள் சன்மார்க்கத்தில் எனை இழுக்கு
தன்னரிதாகிய பரமசத்துவமே
சாஷ்டாங்கமாக விளங்குந்தத்துவமே
விள்ளரிதாகிய சர்வஞ்ஞத்துவமே
வேதநாயகன் தனக்குரியசொத்துவமே (இன்)

௩௨, இ-ம்-ஸ்ரீராகம்-அடதாளசாப்பு

பல்லவி.

வேதநாயகா நம்பினேன் உனை

அநுபல்லவி.

ஏதமுமவிபரீதமுங்கெட
நீதமுங்கன போதமுங்கொடு (வேத)

௪

சரணங்கள்.

க, தினமும்உன்பணிவிடையே-நான்மறவாமல்
செயஅருள் நன்னடையே
இனமாகும் அருட்கொடையே-வழங்கிட
ஏனின்னமுந் தடையே
கனமுமேலவர்-தினமும்நிர்மல
மனமும்உன்தரி-சனமுமேயருள் (வேத)

உ, பொய்வளர்மெய்க்கும்பமே-உடையமுன
போதிபுண்ணியாரம்பமே
தெய்வநிராலம்பமே-என்கவிகளைச்
செவிகொண்டுசிறக்கப்பமே
செய்குவாயுளம்-வைகுவாயருள்
பெய்குவாய்வினை-எய்குவாயுயர் (வேத)

ங, தயைசெய்யிற்பொல்லாங்கா-என்தனையாளத்
தாமசஞ்செயல்பாங்கா
பயன்உதவிடில்தீங்கா-வேதநாயகன்
பரவுங்குணதாங்கா
நயமும்ஆனவ-ஜெபமும்நாளும்அ
பயமும்பாதபங்-கயமுமேயருள் (வேத)

சுங,இ-ம்-ஆகிரி-ரூபகதாளம்.

பல்லவி.

நாதனேதயைபுரிவாய் எனக்குமெய்ப்
போதமாமழைசொரிவாய்

அநுபல்லவி.

ஈதகல்பரம்பர திவ்யதுரைடம்பர
ஓதருஞ்சுயம்பர உலகமுடன்அம்பர (நாத)

சரணங்கள்.

க, நண்ணிநல்வினைகளைப் பண்ணியறிவிலாத
நான்நரன் போலியா-இந்த
மண்ணின்மிசைஎனக்கும்-புண்ணியமென்பதற்கும்
மத்தியில்வேலியா எந்தன்
எண்ணமெல்லாங் கறுப்பே
எனக்குன் னடிவெறுப்பே
பண்ணுதே நீமறுப்பே
புரிந்தாள்வதுன்பொறுப்பே (நாத)

உ, என்பாட்டில்இரங்காமல் உன்பாட்டில்நீசும்மா
இருந்திடல்அதுதகுமா என்றும்
தன்பாட்டில்மகிழ்ந்தோனே இன்பூட்டுங்கதியுந்தன்
தயையின்றிகைகூடுமா எந்தன்
அன்பெல்லாம் வெறும்பேச்சு
அறமென்பதுமேற் பூச்சே
துன்பப்பிரளயம் நீச்சே
தொல்புவி எங்குமுவச்சே (நாத)

ந, தினையளவும்நன்னெறி தனையறியாதநான்
இனிக்கேயிலக்கா பாரில்
நினையன்றிமற்றெவையும் நினையும்என்னெஞ்சுக்கு
நீமாத்திரம்விலக்கா நன்மை
புனையும்நீதிப்பிரமாண
புவனகோடிநிர்மாண
வினயநித்தியகல்யாண
வேதநாயகன்பிராண (நாத)

கூச, இ-ம்-பியாகு-ஆதிதாளம்.

பல்லவி.

தஞ்சம்நீயே தயைபுரிவாயே-தஞ்சம்

அநுபல்லவி.

அஞ்சலென்றேதினம் ஆளும்என்தாயே (தஞ்)

சரணங்கள்.

க, தினம்வேதை சேர்ந்தநான்பேதை
உனதடிப்போதை உறஅருள்பாதை (தஞ்)

உ, பாதகபஞ்சன பண்டிதரஞ்சன
போதககஞ்சன புண்ணியநிரஞ்சன (தஞ்)

ந, தருமசிங்காரா சருவசங்காரா
வரும்வேதநாயகன்மன அலங்காரா (தஞ்)

சுருடி, இ-ம்-பரசு-ஆதிதாளம்.

பல்லவி.

நீயேகதிஎனக்குன்-அருள்கூரே-தந்தை
தாயேநினை அல்லது துணையாரே

அநுபல்லவி.

தூய்கருணைமழைசொரிகாரே
சொலஅரு-நலமுறு-தலமிசை-நிலவென்
மலஇருள்-செலஅருள்-அலரும்உதாரா (நீயே)

சரணங்கள்.

௧, முத்தியென்பதிவர்க்குஞ் சமுதாயம்-அது
முத்தர்மட்டுக்கும்என்ப தென்னஞாயம்
நித்தியனேவிடுவேனே என் தாயம்-நீ
நீதியின்படிசெய்குவாய் விதாயம்
சத்தியனேஏதோ உன் அபிப்பிராயம்
தகவென்-தகமிசை-மிகமதி-புகஅரும்
இகபர-சுகமருள்-அகல்ஜகநாதா (நீயே)

௨, வாழ்மனை தந்திடில் வேண்டாமே-என்று
மாநிலத்துண்டோ மறுப்பவர்தாமே
ஆழவேநீயெனது மனப்பூமேல்-குடி
ஆதிடின்உனக்கென்ன குறைவாமே
சூழ்சீகுடியுறில் வினைபோமே
துதிபுரி-விதியினர்-சதியெனும்-நிதிபெற
அதிதயை-பதிவுறும்-அதிசயயோகா (நீயே)

௩, சாகனென்துயர் தெரியாயோ-நல்ல
சர்வாந்தர்யாமியெனும் பெரியாயோ
பாதகம்அறஅருள் புரியாயோ-பரி
பக்குவஞானமழை சொரியாயோ
வேதநாயகன்மனந்தரியாயோ
மிடலுறு-சுடரவன்-உடுபதி-தடவரை
கடலிட-முடன்இடர்-கெடஅடர்-தேவா. (நீயே)

௬௬. இ-ம்-பூபாளம்-ரூபகதாளம்.

பல்லவி.

தேவாதிதேவே-திருவருள்
செய்தென்னை நீகாவே. தேவா

அநுபல்லவி.

ஜீவசம்ரக்ஷணை செய்யுங்கிருபாநிதியே
தினந்துஷ்டர்கள்-இனஞ்சுட்டர்
முனஞ்சிஷ்டர்கள்-இனஞ்சுட்டமர். தேவா

சரணங்கள்.

௧. பாழும்மனமேசுத்த பாஷாணம்-பெரும்
பாபமென்றால் அதற்குக்கலியாணம்
வாழும்இந்நாளொழிந்து நிரியாணம்-கிட்டி
வருமுன்னம்அருள் புண்ணியப் பிரமாணம்
ஏழையென்செய்கையுன்னில் எனக்குமேவரும்நாணம்
இழைக்குஞ்சுகம் அழைக்குந்தகை
தழைக்கும்படி பிழைக்கும்படி. தேவா

௨. அருள்செய்யின் அலதுன்னை விடுவேனோ-உனை
அன்றிமற்றோரைக் கும்பிடுவேனோ
மருவுமயலிற்சிக்கிக் கெடுவேனோ-உன்பால்
வழக்கிட்டிரக்கப்பயப் படுவேனோ
மருள்செயும்பொருளை நீ-வழங்கினுந்தொடுவேனோ
மனந்தநிடும்-அனந்தந்துயர்
முனஞ்சிக்கிடு-கனந்தங்கிட. தேவா

௩. சிஷ்டபாலகங்கண தாரணனே-பெரும்
தீயபசாசகண மாரணனே
துஷ்டகண்டன் மந்திரோகசாரணனே-நாளுஞ்
சுயம்பிரகாச நிஷ்காரணனே
இஷ்டன்வேதநாயகன்-ஏதநிவாரணனே
இணங்கண்டர்கள்-கணங்கண்டடி
வணங்கும்படி-குணங்கொண்டுயர். தேவா

௬௭. இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்.

பல்லவி.

ஏகாதிபரனே-அருள்புரி-யோகாதிகரனே.

அநுபல்லவி.

ஆகாமியமுறும்-யாகாமியம்அறும்
அகணிதசிற்பர-அதிகுண தற்பர
இசுபரநற்பத-இணையிலும்அற்புத. ஏகாதி

சரணங்கள்.

௧. பழிக்குநான்குருபீடம்-பத்தனைப்போல் நான்
பரிப்பது வெளிவேடம்
அழிக்கும்பொய்வாய்ப்பாடம்-சொருமாயைக்கென்
அகமேநடனகூடம்
செழிக்கும்வரங்கள் ஈவாய்
சிந்தையிற்குடியாவாய்
தினகரசுந்தர-திருவளர்மந்தர
அனகநிரந்தர-அகிலதுரந்தர. ஏகாதி

௨. படியாக்கொடுநெஞ்சமா-ஐயனேஅது
படருந்துற்குணபுஞ்சமா
அடியேன்துயர்கொஞ்சமா-வரப்பிரசாதம்
அருள் எனக்குப்பஞ்சமோ
படியெல்லாம்ஈன்றதாயே
பாரில்நற்கதிநீயே
பரமபவித்திர-பதிதஉபத்திர
தருமசமுத்திர-சகலவிசித்திர. ஏகாதி

௩. சுரசேவிதபாதா மலரகித
சுஜநவற்சலதாதா
வரதாயகநாதா-வேதநாயகன்
வனவாலயகியாதா
நரபரிபாலன-நயகுணலாலன்
நாகரிகத்துவ-நாமமகத்துவ
போகபிரபுத்துவ-புண்ணியதத்துவ. ஏகாதி

௬௮. இ-ம்-சன்னியாசி-ரூபகதாளம்.

பல்லவி.

நிச்சயம்இதுதானே-மதி-நீருள்கோனே.

அநுபல்லவி.

நச்சுமரம்போம்-நாளும்வளர்ந்தேன்
இச்சகந்தனில் இதயந்தளர்ந்தேன். நிச்சயம்

சரணங்கள்.

௧. அல்லும்பகலும்பொருளில்ஏக்கம்
அநித்தியசுகங்களைஎன்றேக்கம்
நல்லவர்சபைஎனக்குநீக்கம்
ஞானவழியில்நாளுந்தூக்கம். நிச்சயம்

௨. துஷ்டர்களுடனேஅன்யோன்யம்
துர்க்குணமெல்லாம்சர்வமான்யம்
இஷ்டம்வைப்பதுவேதனதான்யம்
ஈசனேஎனக்கறிவுசூன்யம். நிச்சயம்

௩. தீதும்எனக்குனதுவேதம்
செவிடன்காதில்சங்குநாதம்
வேதநாயகனேஎன்பாதம்
விரும்பிவாழ்தவலேபிரமாதம். நிச்சயம்

---

௬௯. இ-ம்-அடாணா-ஆதிதாளம்.

பல்லவி.

கருணைசாகரா-கனஉபகாரா
காத்தருள்வாய்-கோவே. கருணை

அநுபல்லவி.

அருணைதயமென-அடியர்க்குக்காட்டும்
ஆத்மகோடிகள்உஜ்ஜீவநஅமுதூட்டும். கருணை

சரணங்கள்.

௧. நிச்சயஞானமேநினதுஸ்வாதீனம்
நீதராவிடில்எனக்கேதுமெய்ஞ்ஞானம்
அச்சமில்லாமலேஅபயப்பிரதானம்
அருள்செயின்அடியனுக்கில்லைசமானம். கருணை

௨. சிஷ்டன்போல்யாவர்க்குந்திவ்யப்பிரசங்கம்
செய்வதிலேஎனைப்போலெவர்சிங்கம்
சட்டமாய்நடப்பதேதுசர்வலிங்கம்
சாமிநீஅறியாயோதமியன்அந்தரங்கம். கருணை
௩. எத்தனையோசெய்வதேன்உனக்கபராதம்
இதுநிமித்தம்உனக்கென்மேல்விரோதம்
அத்தனேபிழைபொறுத்தாள்வதேநீதம
அருள்புரியஇனிவேண்டாம்விகாதம். கருணை
௪. தலைவனைஇல்லாவிடில்தழைக்குமோராஜ்யம்
தரையிலேநீயல்லால் சகலமும்பூஜ்யம்
விலகிடாதருள்உயர்விமலசாம்பிராஜ்யம்
வேதநாயகாஇன்னந் தானென்னவியாஜ்யம். கருணை

௭௰. இ-ம்-தோடி-ஏகதாளம்.

பல்லவி.

தயைபுரியஇன்னந்தாமசமே. தயை

அநுபல்லவி.

பயநிவாரணா-பாக்கியபூரணா
உபருந்தூரணா-உலகர்கரணா. தயை

சரணங்கள்.

௧. அத்தனேஒருசாணகியகுக்ஷிக்
காகநான்ஊரெல்லாம்அலைந்திடும்பக்ஷி
நித்தமும்பசுவேன்உயிரக்கக்ஷி
நீதிநெறியில்நாண்ரக்ஷாகுக்ஷி. தயை
௨. தத்துவஞானத்தைத்தள்ளியேபோட்டேன்
சாமிநான்இந்திரியவாசலைப்பூட்டேன்
உத்தமம்எனக்கருள்பலதரங்கேட்டேன்
உதவிசெயயாவிடில்உனைவிடமாட்டேன். தயை
௩. சர்வவிநோதவிசித்திரநிர்மாணா
சாசுவதமங்களசத்தகல்யாணா
பரம்நித்தியாநந்தபாக்கியஉக்கிராணா
பாலவேதநாயகபிரமாணா. தயை

௭௧ இராகம் மூகாரி-ரூபகதாளம்

பல்லவி.

காத்தருள்வாய் எனைக்-காத்தருள்வாய்

அநுபல்லவி.

சாஸ்திரம்வேதம் ஸ்தோத்திரமேசெய்யப்
பாத்திரனேதயை செய்திரனேதினம் காத்தருள்

சரணங்கள்

௧, ஆறுலுமுன்பாபம் அநியாயம்அநியாயம்
ஞானிகளைப்போலநான்காட்டும் நடைமேலுமூமாயம்
ஈனமுறுந்தமகுணங்கள் என்தனக்கேகந்தாயம்
தீனனென்மேல்கோபஞ்செய்யிலென்னஆதாயம் காத்தரு

௨. மாதாநீஉன்மகனுன்மன்னவநீகுடிநானே
தாதாநீயாசகனுன்ஸ்வாமிநீஅடியேனே
சாதகஞ்செய்தருகுருநீதமியேன்சிஷன்தானே
ஆதாரமாகஉனை அத்துலங்கேசுபரகோனே காத்தரு

௩, வாக்குமனமெட்டாததயாசாகரனே
பாக்கியபலந்தாணடிபாலபரமேசுரனே
தேக்குமலவிருள்நாசஞ்செய்யும் [illegible]ஸ்காரனே
ஆக்குமவேதநாயகனுக்கு [illegible]னே காத்தரு

௭௨-இராகம் தோடி-ரூபகதாளம்

பல்லவி

வாவாஜகநாதா வாவாஜகநாதா வாவா

அநுபல்லவி.

பாவங்களைநிர்மூலமாக்கப்
பரமார்த்தங்கள்கொடுத்துக்காக்க வாவா

சரணங்கள்

௧, தர்மாதர்மந்தெரியேன்ஜெப
தபசாதிகள்புரியேன்
கர்மஅநுசரியேன்உனைக்
கண்டால்இனிப்பிரியேன் வாவா

௨. என்னைநீவிடலாமா புல
இடர்நான்படலாமா
வினையேதொடலாமா ஏழை
வீணேகெடலாமா — வாவா

௩. வர்மஞ்செய்தல்முறையா என்தன்
வாழ்நாள்வளர்பிறையா
தர்மந்தரிற்குறையா இன்னுஞ்
சலஞ்சாதித்தல்பொறையா — வாவா

௪. ஆலோலிதமுகனே நித்திய
அமலானந்தசுகனே
மேலோர்கள்சமுகனே தவய
மிகுப்பேதைநாயகனே — வாவா

௭௬. இராகம் சஹானா ஆதிதாளம்

பல்லவி

கருணைநீசெய்யவேண்டுமே சுவாமி — கருணை

அநுபல்லவி

சரணாகதியென உனையடைந்தேனே
சாதம்வேண்டியே உனைத்தொடர்ந்தேனே — கருணை

சரணங்கள்

௧. மாயவாழ்வெனும்பெருவாரிதிச்சுழலே
மாட்டியேயலைபடுமனைஞ்சுழலே
காயமாகிய சிறுகாற்றசைக்குழலே
கழியும்போதுநற்கதியலர்க்கழலே — கருணை

௨. சலத்தையல்லாதுதாமரைக்குண்டோநிலையே
தரையிலுனன்றுப்பயிரெங்குமோதலையே
நிலத்திலேகீயலாள்நிலையெனக்கிலையே
நீகமும்பார்த்தருள்நிரஞ்சனமலையே — கருணை

௩. சந்திரசூரியர்உள்ளமட்டும்வாழ்க வா
சாவையேஜெயித்திட என்உயிர்வாளா
தந்தையேயுன்னதுசோதனைக்குநான்ஆளா
சர்வசாதகபரமதயாளா — கருணை

௪, அகணிதகுண அகிலாண்டவிலாசா
அபரிமிதானந்த கரபரமேசா
ஏகசகிருபாகர விமலபிரகாசா
வேதநாயகன் இதயநிவேசா (கருணை)

௭௬. இராகம்-ஈசமனோகரி ரூபகதாளம்

பல்லவி

அபயம்நீயருள்வாய்-ஆதியே-அநுதினம்

அநுபல்லவி,

உபயபாதம்நம்பினேன்-ஓ அநாதியே அநுதினம் (அபய)

சரணங்கள்.

௧, அலைகடற்சிறு துரும்புபோலே அலைந்துவாடினேன்
உலகின் மூடரைஉள்ளமுருகி உன்னைநாடினேன் தினமும் அப

௨. நீர்க்குமிழியை நிகரும் வாழ்வைநிலையென்றெண்ணினேன்
மூர்க்கமாகக்கொடியபாவமுழுதும்பண்ணினேன் தினமும் அப

௩, பாசக்காற்றிற்பஞ்சுபோலப் பறந்துதயங்கினேன்
ஆசைக்கடலில்மூழ்கிமூழ்கி அறிவுமயங்கினேன் தினமும் அப

௪. ஆண்டவநீஅடிமைநானெனை ஆளவொண்ணாதோ
நீண்டஉலகம்ஏழையென்றெனை நிந்தைப்பண்ணுதே தினமும

௫. புவனரக்ஷணகாரணார்த்தபுருஷவேதனே
பவவிமோசனவேதநாயகபலவிசேஷனே தினமும் அபய

௭௭ இராகம்-பியாகடை ஆதிதாளம்

பல்லவி

ஏகோசோதனே இன்னமேன்சோதனை
ஏகாதிபதியே நீதியே எளியேன்மேல்

அநுபல்லவி

போதோபசார பூர்த்தபாதா
பூதபேத காரணசுகதாதா ஏகோ

சரணங்கள்

௧. தந்தைதாயொடு பலதளையைாபெரி[illegible]ய்
தாரங்கள்புலர்க்குச் சா[illegible]ய்
சொந்தமாகிறஉடல் சுக[illegible]ய்
ஸ்வாமியீமிர்த்த வாழ்வைகளி[illegible] — ஏதோ

௨. ஒருவையாக்அடிப்பாய ஒருகையாற்பிடிப்பாய்
உருவியில்லாமலே உன்னொன்றாடிப்பாய்
பெருவிகளையும் பிக்[illegible]ப்பாய்
பிரமமாண்டங்களைப் பிளந்திட இடிப்பாய் — ஏதோ

௩. துன்பஞ்செய்வதுபோல் சுக[illegible]ப்பாய்
துஷ்டர்கள்மீதில் எப்போதுங்[illegible]
அன்புள்ளதாயைப்போல் அடியவ[illegible]டிப்ப[illegible]
அவர்களைத்துயரறுசம்[illegible]ப்ப[illegible] — ஏதோ

௪. அதுல அக்ஷயகருபாகரவேஷ
[illegible]மிர்தவாருஷ துல்லியமிருது[illegible]ஷா
விசிரவிர்தோஷ நிர்விகற்பவிசேஷா
வேதநாயகவங் திதகுண்பூஷா — ஏதோ

---

௭௬ இராகம்தோடி ஆதிதாளம்

பல்லவி

ஏதுபாராமுகம் ஏழையென்மீது
ஏகனே யோகனே மாகனதியாகனே
வேதபோதக அநாதரக்ஷணனே
மேகவாகன தெய்விசலக்ஷணனே — ஏது

சரணங்கள்

௧ அநித்தியசகத்தந்தாய் அனைதாள்கேட்டேனே
ஆளைத்தரித்தல்-அநுபவிக்கமாட்டேனே
இனித்தஉன்பாதத்தில் இசைபாட்டேனே
ஏனமாரம்பையை எதிர்த்துவாட்டேனே — ஏது

௨ ஐயனே என்னைக்கேளாமல்முன்நீயே
அரியமானிடஜன்மந்தந்தாயே
வையகந்தனில்நான் உனக்கொருசேயே
மெய்யருள்வாய்ப்பெற்றுவளர்த்திடுந்தாயே ஏது

௩ முந்திநீபலருக்குக்காட்டினையுனையே
[illegible]க்கு கொடுத்தனை மோக்ஷமாமனையே
பந்தியிலாருமோ ஓரவஞ்சனையே
பக்ஷமாயெனக்கருள் பரசுகந்தனையே ஏது

௪ அகடநாடகசாமர்த்தியப்பிரதாபா
அச்சுதஜநவாற்சல்லியநிஷ்கோகா
சகலசுலக்ஷண தத்துவசொரூபா
தாசன்வேதநாயகனமனோதீபா ஏது

௭௭ இராகம் கமாஸ் ஆதிதாளம்

பல்லவி

ஆரணமயாநயபூரணனே
உனதமலஅடிசரணம்

அநுபல்லவி

பாரகோரபரிகாரகுணாகர
வீரதீரஉபகாரமனோகர ஆரண

சரணங்கள்

௧ உனைநிதம்நினைவுறும் எனைஅடர்வினை அகலாதாநாதா
உலகசகலகமயல்விலக இலகருளைநீதா
கனஉலகஜநக அநகதிநகரமெய்
காவலா அடியர் ஆவலா அருள்செய் ஆரண

௨ துரிதரஹிதகுணசரிதசுகிர்தபுரமேசா நேசா
சுஜனபஜனமிர்துவசனரசன இதிகாசா
சாதவாத அனவரதவிரதகர
சாபமோசனபிர தாபவிலாசன ஆரண

௩ கனககனபுவனபவனகவன ரியாலா மூலா
கரணசரணகுணகிரணபரண அநுகூலா
விநயநிலயபஸ்மய விஜயபயஅபய
வேதநாயகன்மனோதயஅதிசய ஆரண

௭௮-இராகம்-ரீதிகௌளை ரூபகதாளம்

பல்லவி

சரணஞ்சர்வேசா எனைரக்ஷிக்கத்
தருணமிதுபிரகாசா

அநுபல்லவி

கருணாலயப்பரகாயப்பிரவேசா
பரமசுகோதயபாபவிநாசா — சரணஞ்

சரணங்கள்

௧ நீயேகுருமூர்த்தி உனக்குச்சிறு
நாயேன்விர்த்தியாத்தி
தூயஉபதேசஞ்சொலிஇஷ்டபூர்த்தி
ஈயிற்குருசிஷர்இருவர்க்குங்கீர்த்தி — சரணஞ்

௨ நீதான்பரஞ்சோதி எனஉலகின்
மீதேபெருங்கியாதி
வேதாமலவிருள்விலக்குகல்நீதி
ஆதாரமாகஎன்னைருளப்பிரசாதி — சரணஞ்

௩ ஆதிகாரணநாதா பரம்ஞான
ஜோதிமயஅபேதா
பாதகமோசனபாக்கியப்பிரசாதா
நீதவேதநாயகநித்தியசங்கீதா — சரணஞ்

—*—

௭௯ இராகம் லலிதா ரூபகதாளம்

பல்லவி

இன்னந்தாமசமேது ஜகநாதா

அநுபல்லவி

நன்னயமதாக உனைநம்பினவனென் அலவோ — இன்னந்

சரணங்கள்

௧ சீலம்அருளிச்செலவோ]
நசேயுனக்குத்தான்அலவோ
மேலுமென்னதான்சொலவோ
வேலையுனக்குப்பலவோ — இன்னந்

உ சா[illegible] ஜனரக்ஷகனே
தாசர்கள்பிரதக்ஷனே
ஈராயிர[illegible]
நி[illegible]லக்ஷணனே (இன்னைக்)
௩ ஈசனே[illegible] உன்னடிமை
எ[illegible] உ[illegible]டைய
கேசவுடன்ஏன்பட்டமை
தீர்க்[illegible]கட்டமை (இன்னைக்)
௪ சாரகருணாபரனே
சர்வபுவனாதரனே
வேதநாயகன்ஸ்மரனே
வேகதுரிதஹரனே (இன்னைக்)

அடு-இராகம்-கெங்காதரங்கணி-ஆதிதாளம்

பல்லவி

உனைநானே-தொழுவோம்-அருள்கோனே

அநுபல்லவி

விநயசஜ்ஜனசேவிதபெருமானே
வேதமுடிவில்நடனம்புரிவோனே (உனை)

சரணங்கள்.

௧ சிந்தையீதுனதுபாதமேதியானம்
செய்யநீயருள்வாய்திவ்வியஞானம்
தந்தைநீயறியுமேசமஸ்தானம்
தநயன்நீயில்லையோஅபிமானம் (உனை

௨ ராசனென்னதுவார்த்தைகள்பொய்யே
இந்தவார்த்தையொன்றுமாத்திரம்மெய்யே
பாசமுடையனைப்பெயிலுறு[illegible]யே
பாவமாக்கும்படிக்கையெசெய்யே

௩ அட[illegible]லாலா[illegible]ப்பறை
[illegible]யேபெண்ழ
[illegible]ன்றென்னரி[illegible]பேன்அதிற்கூடிழ
[illegible]செய்யாதேநான்மிகஎழ (உனை)

௪ சகலலோகம் அடங்காதுயர்காத்ரா
சமமிலாகக்கபட நாடகசூத்ரா
சுகப்பிரதாயக கிருபாகரநேத்ரா
துதிவேதநாயகன்மனக்ஷேத்ரா (உனை)

அக இராகம் பூரிகல்யாணி-ரூபகதாளம்

பல்லவி

கருணாகரமூர்த்தி-காப்பதுவே கீர்த்தி

அநுபல்லவி

அருணோதயமாசரீர
அற்புதநராவதார (கரு

சரணங்கள்

க தேகம்வளர்ப்பதேஎன்விர்த்தி
தினந்துர்க்குணமேபிரவர்த்தி
ஏகமானசக்ரவர்த்தி
எனக்குநீ அருள் பாவநிவர்த்தி

உ அற்பமானமோகபோக்கியம்
அழிந்துபோம் இதுவேதவாக்கியம்
தற்பரானைக்காணும் பாக்கியம்
தந்திடில்அதுசர்வசிலாக்கியம் (கரு)

ந பாதகந்தனைச்சர்வநாசம்
பண்ணுவதில்உண்டோ பிரயாசம்
வேதநாயகா நின்னேசம்
விளங்கிட அருள்வாய் பிரகாசம் (கரு)

அஉ-இராகம்-பரச-திரிபுடைதாளம்

பல்லவி

சித்தம்எப்படியோ-ஐயா நின்-சித்தம்எப்படியோ

அநுபல்லவி

உத்தமனுகனன்னை உயர்த்திடுவாயோ
கர்த்தனே நீயென்னைக கைவிடுவாயோ (சித்த)

சரணங்கள்

க. அருள்புரிவாயே அருந்தவப்
பொருள்சொரிவாயோ
தருமவானும்படிதான்தெரிவாயோ
இருள்மூடும்பாவியென்மனைப்பிரிவாயோ சித்

உ. பாதஞ்சேர்ப்பாயோ என்தன்மனக்
கேதந்தீர்ப்பாயோ
ஆதன்செய்வினை அடியோடேபேர்ப்பாயோ
ஏதுங்கதியில்லானென்றிரங்கிப்பார்ப்பாயோ சித்

௩. வாடிநொந்தேனே மெய்ஞ்ஞானக்கண்
மூடிநைந்தேனே
நாடியாள்வாயென்று நம்பிவந்தேனே
பாடும்வேதநாயகன் பருகுஞ்செந்தேனே

௮௫. இராகம் சஹானா அடதாளச்சாப்பு

பல்லவி

எப்படியும்பரமே நலம்பெற
ஈந்தருள்வாயவரமே

அநுபல்லவி

செப்பருமாணிக்க தீபசொரூபனே
தேவேமனமேநொந்தேன் காவேயெனவேவந்தேன் எப்

சரணங்கள்

க. கேவலம்வாடினேன்கேள்விமுறையில்லையோ என்தன்
சீவன்பிழைக்கச்செய்ய வல்லவனில்லையோ
பாவனாவெனைப்பண்ணுதல்பாரமோ
பாசகேகனியேசத்தே ஓங்காதனியவித்தே எப்

உ. அற்பன்ஆனாலும் அன்னைக்குப்பிள்ளை அல்லவோ
பற்பலவாய்படித்தப்படித்துச்சொல்லவோ
கற்பகோடிகாலங்கண்டுமுடிவில்லாக்
கண்ணேமணியேபொன்னே
விண்ணேஅணியேசொன்னேன் எப்

௩ இன்பதுன்பங்கள் இரண்டிற்சமசித்தமேதந்து
நின்பதசேவைநிலைக்கநீ செய்வாய்நித்தமே
அன்பன்வேதநாயகன் அகத்தேயணி
ஆணிப்பொருளேமுத்தே காணப்பெறுவோர்சொத்தே எப்

௮௪ இராகம்-கல்யாணி-அடதாள சாப்பு

பல்லவி

உன்னையெனக்குக்காட்டையா காட்டாமல்சும்ம
ஒளித்தென்னவிளையாட்டையா

அநுபல்லவி

தன்னைப்பாராமலேதன்பிள்ளைகண்மூடி
தனம்ஊட்டுந்தாயுண்டோசாமிநீதயைகூடி உன்னை

சரணங்கள்

௧ கறவைதனைப்பிரிந்த கன்றுகதறல்போலும்
கணவன்தனைப்பிரிந்து கலங்கும்உத்தமிபோலும்
இறகுகள்பறிகொடு தேங்கும்பறவைபோலும்
இருகண்ணுந்தெரியாத ஈனக்குருடர்போலும்
ஏங்கினேன்சுகம் நீங்கினேன் துயர்
தாங்கினேன்மனம வீங்கினேன்நீ உன்னை

௨ நினைக்கநினைக்க என்றனெஞ்சமெல்லாம்ருசிக்கும்
நின்னைப்புகழுவும்வாயே நித்தியாமிர்தம்புசிக்கும்
களிக்கும்நின்னடிகாணக்கண்கள்தினம்பசிக்கும்
கர்த்தனேஉனைக்காணாதகவலையெல்லாம்நசிக்கும்
கனத்திலேனுங் கனத்திலேனுமெனீ
மனத்திலேனும்சொப்பனத்திலேனும்நீ உன்னை

௩ விண்ணேநினையல்லாமல் வேறொன்றைத்தொடுவேனோ
மேதினியெங்குந்தேடி வேதனைபடுவேனோ
கண்ணேமணியேநினைக் கண்டால்நான்விடுவேனோ
கட்டிக்கொண்டானந்தங் கலக்கப்பின்னிடுவேனோ
கருத்தில்மூடுவேன் வருத்தம்போடுவேன்
திருமாத்தடுவேன் விருத்தம்பாடுவேன்

௪ தேவனே உனைக்கண்டால் திட்டிதோன்றுமோ
திவ்யதேஜோமயம் என்தேகந்தனைச்சுடுமோ
கூவுங்கோழியிதிக்கார் குஞ்சுமுடம்படுமோ
கொல்லுஞ்சிங்கமானாலும் குட்டிகள் அஞ்சிடுமோ

கோலனே அநுகூலனே பரி
பாலனே கன மூலனே நீ உன்னை

௫ ஆணல்லபெண்ணல்ல ஐம்பூதஞ்சுடரல்ல
அரியயன்சிவனல்ல அதுவல்லஇதுவல்ல
காணருமுன் திவ்ய காந்திவிரியுநல்ல
கனவடிவினைக்காணக் காதல்கொண்டேன்வல்ல

காரணசுக பூரணகுண
தாரணகன ஆரணநீ உன்னை

௬ தேனேகனியே தெவிட்டாததெள்ளமுர்தமே
சீனியேகரும்பே தித்திக்கும்இரதமே
வானேபுவியசுகவாழ்வேபெரும்பதமே
மதிக்கும்வேதநாயகன்மகிழுமனோரதமே

வாடினேன் கவி பாடினேன் உனை
நாடினேன்தினந்தேடினேன்நீ

அ௫ இராகமபங்களா ஆதிதாளம்

பல்லவி

சஞ்சலமாய்நெஞ்சமிகஉடைந்தேனே இனித்
தஞ்சமெனஉன்சகுணம்அடைந்தேனேஸ்வாமி

அநுபல்லவி,

வஞ்சகப்பிரபஞ்சமெனும்
நஞ்சநதிமூழ்கியே சஞ்

சரணங்கள்

௧ இட்டவலைபட்டயருமான்போலெ வெயில்
சுட்டசலம்விட்டகலும்மீன்போலேஸ்வாமி சஞ்

௨ பொய்யுலகைமெய்யெனவே தடுமாறினாலும்
ஐயகோகோமையலெனுங்கடுமீறிஸ்வாமி சஞ்

௩, கொட்டுமெத்திற்பட்டுடையுங்கயிர்போலே சலத்
தட்டுவாக்கெட்டுவரும்பயிர்போலேஸ்வாமி சந்

௪ பாய்புலியின்வாயிலூறுபசுப்போலேபெற்ற
தாய்காம்விட்டே அலறுஞ்சிசுபோலே ஸ்வாமி சந்

௫- சபவேசகாயமொன்றுங்கிடையாதோநல்ல
தூயமனம்நீயருளத்தடையேதோஸ்வாமி சந்

௬ மாயமலநோயகலும்விசுவேசா வேத
நாயகனன்னேயமனக்குகைவாசாஸ்வாமி சந்

அசு இராகம் சுத்தசாவேரி ரூபகதாளம்

பல்லவி

கருணங்கருணங்கயைசெய்வாயையா ஓ
தேவதேவா

அநுபல்லவி

ஒருவனே ஜன்மலய அபாவா
ஓஓ மகாநுபாவா கருணம்

சரணங்கள்

௧ சித்தஞ்சேற்றில்கட்டகம்பம்
ஜெகதலத்தில் இதற்குத்தினமும்கம்பம்
நித்தங்கவலைநிறைந்தசொரூபம்
நீயேயினியெனக்கவலம்பம் கருணம்

௨. சோதனைக்குநான்பாத்திரவானே
துன்பமூட்டைசுமக்கநானே
சாதகஞ்செய்யிற்பழுதுதானே
தள்ளினாலும்நான்போவேனோ கருணம்

௩. வயிறுவளப்பதேஎன்வேலை
மற்றநேரம்விஷயலீலை
உயிருக்குயிரேஞானபாலை
ஊட்டுவேய்தொழுதேன்உன்காலை கருணம்

௪ சப்தஸ்பரிசரசகந்தா
தர்மரூபபிர்மாநந்தா
வித்தகசுஜ்ஞானுபந்தா
வேதநாயகப்பிரபந்தா கருணம்

௮௭ இராகம் தேவமனோகரி ஏகதாளம்

பல்லவி

இன்னமும்தாமதமேன் என்ஸ்வாமி　　　　　இன்ன

அநுபல்லவி

உன்னதமர்கிய துரியாதீதா
உலகாதிசர்வகாரணபூதா

சரணங்கள்

௧. மழைமுகங்காணுப் பயிர்போல்வாடி
மாதாதனைவிட்ட சேய்போலோடி
தழையும் உன்குணசரித்திரந்தனைப்பாடி
சாமினானுனையடைந்தேன் கதிதேடி　　　　　இன்ன

௨. பந்தனைப்போலநான் போடுவேன்வெளிச்சம்
பாவத்தின்கடலுக்கு நானொருமச்சம்
அந்தனேமுனிபாதே கொண்டேன்அச்சம்
அருவினைபோக்கிநீ அருள்வாயஸ்வச்சம்　　　　　இன்னம்

௩. அரசே நீயெனைக்கைவிடலாமா
அருளேசெயில் உன்கைப்பொருளேபேர்மா
இருவரம்மையா விடில்வினைசாமா
தேவமனோகரதிவ்வியசோமா　　　　　இன்ன

௪. அனவரதசுகிர்த ஆத்மசொரூபா
அனந்தலையானகுண அனகப்பிரதாபா
தினகரதினகர னாகியதீபா
சிறியன் வேதநாயகன் இதயசல்லாபா　　　　　இன்ன

௮௮ இராகம் சாமா ஆதிதாளம்

பல்லவி

உன்னைத்தவிர வேறென்னைத்தாங்கிடப்
பின்னைத்துணையில்லை மன்னர்க்கரசே　　　　　உன்னை

அநுபல்லவி

அன்னைக்கிணையாகிய கனபிரபுவே
உன்னற்கரிதாகிய மாவிபுவே　　　　　உன்னை

சரணங்கள்.

௧ நீமுகம்பார்த்திடில் அணுவும்பர்வதமே
நீமுனிந்தால்பெருமலைகளும் அதமே
தாமதம்நீசெயிற் பிழைப்பதெவ்விதமே
தயைநீபுரிய இச்சமயம்உசிதமே — உன்னை

௨ நீரைஅடுத்தவர்க்கில்லைசல நஷ்டம்
நின்னைஅடுத்தவர்க் குண்டோநஷ்டம்
ஆரையடுக்கினும் உண்டோ அதிஷ்டம்
ஐயாநினக்கன்பனாகை என்னிஷ்டம் — உன்னை

௩ ஊரார்மெச்சிடப்பாடுவேன்பாட்டு
உன்புகழ்பாட்டென்றால் வாய்ப்பூட்டு
சீராகியபெரியோர்சபைதீட்டு
தீயோருடன்எனக்கனுதினங் கூட்டு — உன்னை

௪ ஆதிமத்தியாந்த அபாவப்பிரகாரா
அண்டசராசர அகிலாதாரா
பூதநிர்மாண நிர்வாகசங்கரா
போதவேதநாயகர் புண்ணியசரீரா — உன்னை

⁂

௮௧ இராகம் சுத்தசாவேரி ஆதிதாளம்

பல்லவி

நானேஉனைநம்பினேனேநலம்
தானேஅருள்கனவானே — நானே

அநுபல்லவி.

வானே என்சுகத்தேனே பொழிந்திடும்
மன்னுபிர சன்ன தினம்என்னுவுறும் முன்னுநீதம் — நா

சரணங்கள்

௧ காயம்பலதுவாரக் கந்தல்அதைக்
காக்கநான்போடுவேன் வாய்ப்பந்தல்
மாயவலையிற்பட்டு மதியும்விதியும்கெட்டு
மண்டுவினைகொண்டு மிகஅண்டுதுயருண்டுதினம் — நா

௨ அருணகோடிப் பிரகாசகாத்திரா அதி
அற்புதவேதாகம் சாஸ்திரா
கருணாநந்த நேத்திரா பணபக்தஜனஸ்தோத்திரா (நம்): நா
காப்பாய்முகம் - பார்ப்பாய் - வினை தீர்ப்பாய அடி சேர்ப்பாய் நி
௩ வியுதகணவதிந்தச்-சரணா நாளும்
வேதநாயகன் ஆந்தக்கரணு
சபமங்கள தரணு சுஜநகுலாதரணு
தூயாகன நேயாபுவித்தாயான சகாயநிதம் (நானே)

௯௰ இராகம் சஹானா ஆதிதாளம்

பல்லவி

இந்தவேளை வந்துன்அருள் தந்தருளுவாய் இந்த

அநுபல்லவி.

வந்தனை நிரந்தரம் புரிந்தேன்ஐயனே இந்த

சரணங்கள்

௧ அன்னைபிதா உன்னையன்றிப் பின்னையாரையா
என்னைநிதந்தின்னும் வினைதன்னைத்தீரையா
மின்னுகின்ற பொன்னுலகந்தன்னில் வாழ்மெய்யா இந்த
௨ பூதலத்தில் ஆதரவுன்பாத இணையே
பேதகமாயே துனங்கிங்கோத இணையே
தீததலுஞ்சாதகர்க்கபேத துணையே இந்த
௩ தீயநெஞ்சில் தூய அறச்சேர்ய இலையே
மாயையெனும் பேய் செய் அநியாயமலையே
நேயன் வேதநாயகனுக்காய நிலையே (இந்த)

---

௯௧ இராகம்சாமந்தா ஆதிதாளம்

பல்லவி

மெய்ஞ்ஞானங்கொடுப்பாய்ஸ் வாமி
அஞ்ஞானந்தடுப்பாய் ஸ்வாமி மெய்ஞ்

அனுபல்லவி

பொய்ஞ்ஞானியர் அல்லார்மேற்கருணை
பூண்டவனேஎன் ஆண்டவனே நீ மெய்ஞ்

சரணங்கள்

௧ ஆஸ்திகள்பாஸ்திகள் யாவையும்வேண்டேன்
அநித்தியப்பொருள் நீ அருளினும்தீண்டேன்
சாஸ்திரஞ்சொல்லும் வழி இனிச்சேர்ண்டேன்
தருவென நீண்டேன்திருவடிபூண்டேன் (மெய்ஞ்)

௨ அகமேகட்டுக் கடங்கரக்காளை
ஐயோவீணே அழித்ததுநாளை
இகமேலேநம்பினேன் மலர்த்தாளை
என்னவோநாளை இதுநல்லவேளை (மெய்ஞ்)

௩ அந்நியர்க்குரைப்பேன் உபதேசம்
அடியேன்செய்கைகளே ஆபாசம
என்னசொல்வேன்என் இதயப்பசாசம்
இதற்குமேல்நேசம் இல்லைலவலேசம் மெய்ஞ்

௪ அத்தனேஎளியர்க்கன்னமும் ஊட்டேன்
அறுத்தகைக்குச் சுண்ணாம்புமேநீட்டேன்
உத்தமமார்க்கத்தில் உள்ளத்தில்நாட்டேன்
உனைவாங்கேட்டேன் இனிவிடமாட்டேன் மெய்ஞ்

௫ அவன்அவள் அதுவென அடங்காமூலா
அகண்டாதீத அபேதவிசாலா
சிவன்முறுவேநாயகன் -அநுகூலா
ஜெகபரிபாலா சுகமுறுசீலா (மெய்ஞ்)

௯௨ இராகம் பரசு ஆதிதாளம்.

பல்லவி.

தேவாதிதேவபவ ஜீவாதிகாரணா உன்
சேவடியை நம்பினேனே ஓ தேவா

அநுபல்லவி

நாவாரநானேபல தேவாரம்பாடவே
ராம்அவாதநீதாகன தேவா

௧. அகத்திருள்மூடினேன் மிகமிகவாடினேன்
அஞ்சாதேயென்றுசொல்லி ஆளொண்ணாதோ
இகம்பரநாடினேன் சுகநிலைதேடினேன்
என்றமலிரக்கம் உனக்கொண்ணாதோ
பகவானேநீயெனது முகம்நோக்கியேதயை
பண்ணியருள்புண்ணியர்தொழும் (தேவா)

௨. அன்னையும்பிதாவும்நீ ஆவியும்உடலும்நீ
ஆசாரியன்கடவுள் யாவும்நீயே
முன்னும்நீபின்னும் நீமுத்திநீசித்திநீ
மூலாதிகாரணமும் மூர்த்திநீயே
நின்னேசவாரியில் நான்எந்நேரமும்படிய
நித்தியம்பல சித்தியருள் (தேவா)

௩. ஏழைநான்அல்லவோ என்னதான்சொல்லவோ
ஈசாயென்மீது தயைஎண்ணுவாயே
பாழுமுடலைநம்பினேன் தாழுமனம்வெம்பினேன்
பாசந்தகாரம் அறப்பண்ணுவாயோ
சூழும்அடியார்கள் மனம்வாழும்வேதநாயகா
சுத்தமுறுசித்தம்அருள் (தேவா)

௯௩. இராகம்-பலஹம்சர-ஆதிதாளம்

பல்லவி.

ஞானமார்க்கம் நானேசேர
நல்வரம்அருளையனே

அநுபல்லவி.

ஈனஅசேதன இருள்வழிநீங்கத்
தானமுமோனமுந் தர்மமும்ஓங்க (ஞான)

சரணங்கள்.

௧. நீசனானாலும் உன்தாசனான் அல்லவோ
நின்னைஅல்லால்தெய்வம் இன்னமும்பலவோ
ஈசனேஎன்குறை எவரிடஞ்சொல்வோ
என்மொழிகாட்டிலே எரித்திடுநிலவோ

௨. கர்த்தனேஒழியாக்கவலைப்பிரபஞ்சம்
கண்ணிமிற்பறவைபோற்கலங்கினேன்நெஞ்சம்
உத்தமகுணந்தரஉனக்குண்டேபஞ்சம்
உன்னையல்லால்இனிவேறிலைதஞ்சம் (ஞான)

௩. அமரர்நரர்சோபனஅமிர்தபக்ஷணனே
அனந்தபேதகஜீவாதமங்க்ஷணனே
சமரசஞானசற்குணசுலக்ஷணனே
தாசன்வேதநாயகன்பிரதக்ஷணனே (ஞான)

---

௯௪. இராகம்-சஹானா-ரூபகதாளம்.

பல்லவி.

உதவிசெய்யலாகாத-ஓ-ஜகநாதா

அநுபல்லவி,

நிதம்நிதம்உனதினையடிகளை
நெஞ்சில்நினைந்திடவரம்நீ (உதவி)

சரணங்கள்.

௧. அடியேன்துயர்படவேதகுமா
யுடர்முன்இருள்தானேபுகுமா
கொடியாகியவினையால்நிலை
குலைந்தேன்மனம்மலைந்தேன் (உதவி)

௨. மனைவாழ்வுறுதுயர்தான்மலையே
உனையல்லதுகதிவேறிலையே
அனையேகொடுவினையால்மனம்
அயர்ந்தேன்தினம்பயந்தேன் (உதவி)

௩. சுரசேவிதபரமேயுரனே
கரபோஷகருணாகரனே
வரவேதநாயகனேகுண
வரனேபரம்பரனே (உதவி)

சுரு. இராகம்-சாளங்கபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

உனைமறவாமல் எனக்கருள்வரமே
பரமே சுகபரமே

அநுபல்லவி,

பொன்னைநாடொளியர்போலும்எக்காலும்
அன்னைதன்னைமறவாப்பிள்ளைபோலும் (உன்)

சரணங்கள்.

க. மங்களமாகப்பெருவாழ்வுவந்தாலும்
சங்கடமுடன்கனதாழ்வுவந்தாலும் (உன்)

உ. பூமண்டலமெங்கும்புகழச்சிவந்தாலும்
ஈமங்கொள்மாலையெனஇகழ்ச்சிவந்தாலும் (உன்)

ந. மகிழ்வுறவேவெகுமானம்வந்தாலும்
இகழ்வுறவேகனஈனம்வந்தாலும் (உன்)

ச. தலைகீழாகஇத்தரைபுரண்டாலும்
அலைகடல்பெயர்ந்ததன்கரைபுரண்டாலும் (உன்)

ரு, அருமையாகியசதானந்தநிலையே
மருவும்வேதநாயகன்மகிழ்கலையே (உன்)

சுசு. இராகம்கண்டா-ஆதிதாளம்.

பல்லவி

வாவாவாதேவே வந்தெனைக்
காவாயோகோவே

அநுபல்லவி,

காவார்பூவே கலையோர்பாவே
ஓஒவேதாவே (வாவா)

சரணங்கள்,

க. வனவேடன்வலையே-மாட்டி-மனநோயுறுங்கலையே
எனவேதுயர்அலையே-சார்ந்தஎன்-இடர்யாவையுந்தொலையே
வனமார்நிலையே-மதியோர்கலையே
கனமார்குணமலையே (வாவா)

௨, உடல்விழுந்திடுமுனமே பாலே-உனையேஅநுதினமே
திடமாஎன்மனமே-நினைந்தராம்-செய்வேஅருள்கனமே
அடியார்தனமே-அயலார்சினமே
படியார்தமக்கினமே. (வாவா)

௩, நினையாஎன்மதியே-உலகில்-நிதமும்செயும்சதியே
வினைதீர்இதுகதியே-பாரும்-வேதநாயகன்நிதியே
அனைவோர்திதியே-அருள்வாரிதியே
தனைநேர்பரகதியே (வாவா)

௯௭. இராகம்-உசேனி-ஏகதாளம்.

பல்லவி.

தருணம்ஈதையா-இக்கால-ஊரணம்ஏதையா

அநுபல்லவி.

கருணையால்உலகனைத்துந் தாங்குபகாரா-தீரா-உதாரா
காணும்பிரபஞ்சம்-தனில்சிக்கிக்
கோணும்என்னெஞ்சம்-அநுதினம்
பேணும்பொய்வஞ்சம்-இனிஉன்தன்
மாண்டிதஞ்சம்-எனைத்தொடர்
கருமந்தனையேநீக்க-தருமந்தனைநிலையாக்க (கரு)

சரணங்கள்.

௧. ஆண்டான்அடிமையைவேண்டாமெனத்தள்ளின்
ஐபாபுகலினிஏது-மிக
நீண்டநின்கால்களைப் பூண்டுகொண்டேன்விடேன்
நீஎங்கினிச்செல்வதோது-சற்றும்
ஈண்டாதெனைத்தள்ளினுலும்விடுவேனோ
திருவே-தருவே-குருவே
தீனன்என்மீது-நின்கடி
மாணம்விடாது-தினமதி
யீனன்செய்தீது-தொலையமெய்ஞ்
ஞானம்நீஓது பழுதறு
சித்தந்தமருமேயோவே-கர்த்தத்துவமுறுதேமே (கரு)

௨. நீயெனைநீங்கிடில் எருக்குள்ளோனெனும்
நின்பெயர்க்குக்குறைவாமே-அழுந்
சேயர்தமக்கமுதீயாதிருப்பரோ
சிறந்தஅன்னையர்தாமே-வரம்
ஆயிரந்தரங்கேட்டுங்கொடாயிது
அழகா-குழகா-பழகா
தற்றபொன்போளே-நடையின்றி
முற்றமேன்மேலே-பலகலை
கற்றும்பொய்மாலை கொண்டேன்என்தன்
சிற்றறிவாலே-எனைநிதம்
ஆளாய்ப்பலபுவிநாதா-மாளரகல்முறுநீதா (தருணம்)

௩. எத்தனைசொல்லினுஞ்சித்தசும்மன்மார்க்கத்தில்
என்றும்பதித்திட இல்லை-மிக
இத்தனைபெங்கும்பிரசித்தனேநீசற்
றிளகச்செய்வாயிந்தக்கல்லை-உயர்
வித்தகனேவேதநாயகன்போற்றிடும்
வேதா-நாதா-அபேதா
மின்னும்பிரக்கியாதா-அடியேன்மேல்
இன்னமும்வாத-எனை அஞ்சல்
என்னஒண்ணாதா-நின்காதில்அன்
சொன்னுழையாதா-அநுதினம்
வேதத்தமர்சர்வேசா-தீதற்றவர்மனவாசா (தருணம்)

(*)

௬௫. இராகம்-பூரிகல்யாணி-அடதாளச்சாப்பு

பல்லவி.

நம்பினேன்உனையே-தற்காத்தருள்

வெம்பிபனையே-அநுதினம்-நம்பினேன்

அநுபல்லவி.

அம்புவியெங்கும்-நிரம்பும்பலஉயிர்க்
கின்பம்பொழிபுயலே-உன்தன்செயலே
உண்டோஅயலே-அநுதினம் (நம்பினேன்)

சரணங்கள்.

௧. புலனகாரண-பவநிவாரண-நல்உதாரணனே
சம்பூரணனே-மெய்பாரணனே-அநுதினம் (நம்பினேன்)

௨. கோரவினைப்பரி-கார அகிலவிஸ்தார அதிகாரா
உபகாரா-அதிதீரா-அநுதினம் (நம்பினேன்)

௩. சுகுணசேகர-மிருதயனேகர-சுகிர்தசாகரனே
ப்ராபரனே-தயாபரனே-அநுதினம் (நம்பினேன்)

௪. பஜிக்கும்தொண்டர்கள்-புசிக்கப்புசிக்க-ருசிக்கும்
தேன்மயமே-அதிசயமே அருள்நயமே-அநுதினம் (நம்பினேன்)

௫ வேதநாயகன்-போதமுறப்பிர-சாதம்அருள்பொருளே
மணஇருளே-தொலைத்தருளே-அநுதினம் (நம்பினேன்)

—(*)—

௬௯. இராகம்-நாகதொனி-பதிசிரம்-திரிபுடைதாளம்

பல்லவி.

தேவாதிதேவனே-ஜீவனேபிரபாவனே (தேவாதி)

அநுபல்லவி.

ஜீவாதிகாரனே-தீரனே-சூரனே
ஜெகத்திலேமனம்வாடிநொந்தேன்
மகத்துவேஉனைநாடிவந்தேன் (தேவாதி)

சரணங்கள்.

௧. எங்கும்நிறையும்நீஎனக்குன்னைக்காட்டாய்
ஈதென்னகண்கட்டுமாயமோ
அங்கும்இங்குமே உனைத்தேடி
அலையவைத்தாயிதுஞாயமோ
தங்குபதேசம்செய்யாயின்னம்
தான்அடியேன்சிறுபிராயமோ
எங்குலதெய்வமேதாயேதந்தையே
இதுதான்புத்திரநேயமோ-கன (தேவாதி)

௨. எத்தனையோபிழைசெய்தேன்அப்பிழை
எண்ணஉன்றலும்கூடுமோ
கர்த்தனேநீஅருள்செய்தால்என்னொடு
கருமப்பேய்போராடுமோ
அத்தனேஎன்பால்நீவரில்உன்றன்
அடிகள்வருந்திவாடுமோ
இத்தலநீவரில்முத்தர்கள்சமூகம்
எங்கேஎன்றுனைத்தேடுமோ-உயர் (தேவாதி)

ரு, அருளிற்பெரியனீமருளிற்பெரியனுன்
ஆதரிப்பதுன்பாரமோ
பொருளிற்பிரியனுயிருளுக்குரினுய்ப்
புரிந்தேன் துர்வியாநரமோ
ஒருணமைப்பாடறுமன் துக்கேதினம்
உலகெல்லாம்சஞ்சாரமே
திருஅருற்புதனேவேதநாயனே.
செய்வாய்நீஉபகாரமே ஒரு (தேவாதி)

க. இராகம்- குந்தளவராளி, ஆதிதாளம்,

பல்லவி,

நிதம்நிதம்உனேயேதொழுதேனே
பதமலர் அருள்கோனே. (நிதம்)

அநுபல்லவி

சத்தவைபோகா-சகலநிர்வாகா
மதுரப்பிரவாகா-வரகுணயோகா. (நிதம்)

சரணங்கள்

க, அறம்வறஇலேயேஅகம்அறவிலேயே
மறம்ஒருமலேயே-மனமொருசிலேயே
புற யல்வலேயே-புகுமதிகலேயே
துறவறநிலேயே-துயர்வினைதொலேயே (நிதம்)

உ, மலம்வளர்தீயே-வணமொருபேயே
புலமொருநாயே புலிகொடுமாயை
பலவிதமாயே-படர்வுறும்நோயே
தலமிசைநீயே-தயைபுரிவாயே (நிதம்)

ரு, அடியவர்இனமே-அருள்மலர்வனமே
கொடியவர்சினமே குறையுறுதணமே
முடிவறுதினமே-முறையுறுகனமே
அடிதொழும்வேத நாயகன்தரிசனமே, (நிதம்)

௱க. இராகம்-சாமா- ஆதிதாளம்.

பல்லவி.

என்னசொன்னாலும்நீ-இரங்காதிருப்பது
ஏதோகுணக்கடலே, (என்ன)

அநுபல்லவி.

உன்னதவேகனே-உலகநிர்வாகனே, (என்ன)

சரணங்கள்.

க, இகசுகம்அநுசிதம் என்பதென்அபிமதம்
தகவுறும்உயர்பதம்-தாவெனவேநிதம் (என்ன)

உ, இன்னமும்ஏன்சினம் எனக்குநின தரிசனம்
மன்னஎன்கண்மனம்-வாவெனவேதினம், (என்ன)

ங, மாயைப்பார்க்கிரம்மாயதந்திரம்
நீருட்சுதந்தரம்-நீட்டெனநிரந்தரம் (என்ன)

ச, உலகவியாபாரமே-ஒழியாதவிசாரமே
கலகசம்சாரமே-கவலைஅபாரமே (என்ன)

ரு, அருமறைவாசகா-அடியர்பிரயோசகா
தருமப்பிரதாயகா-தனிவேதநாயகா (என்ன)

கஉ. இராகம்-இந்துஸ்தான்காபிதாளம்.

பல்லவி.

நாதா அடியேன்-மீதேன்கோபம் (நாதா)

அநுபல்லவி.

ஆதாரமாகவேஅகிலத்தைத்தாங்கும் (நாதா)

சரணங்கள்.

க, தாரம்சுதர்இல்லாச்சந்நியாசிஎன்றோநீ
சீருறில்லாப்பரதேசிஎன்றோ (நாதா)

உ, தந்தைதாயில்லாததனியர்என்றோநீ
எந்தஉயிரும்பெற்றஇனியர்என்றோநீ (நாதா)

ங, மன்னும்கைப்பொருள் இல்லாவறியர்என்றோநீ
சின்னஅணுவும்நுழைசிறியர்என்றோநீ (நாதா)

௩. [illegible] ஆண்பெண்ணல்லா ஒருத்தர்என்றேனே
விரிபலயுகங்கண்டவிருத்தர்என்றேனே (நாதா)
௪. ஆதிஅந்தமுமில்லா அநாதிஎன்றேனே
ஜாதிகுலமில்லாநிர்ஜாதிஎன்றேனே (நாதா)
௫. வீடுவாசல்இல்லாதனிவெளியர்என்றேனே
ஈடன்னம்துணியில்லாஎளியர்என்றேனே (நாதா)
௭. மனம்புகுந்தொளிக்கின்றமாயர்என்றேனே
உறும்வினைநீக்கக்கொண்டாடஉபாயர்என்றேனே (நாதா)
௮. சகலஉலகச்சுமைதாங்கிஎன்றேனே
மிகநரர்அன்புக்குவீங்கிஎன்றேனே (நாதா
௯. மற்றோர்கண்ணிற்படாதமானியென்றேனே
முற்றும்வாய்பேசாதேமோனிஎன்றேனே (நாதா)
௰. குணமில்லார்களைக்காயுங்கோபிஎன்றேனே
அணிஅங்கமில்லஅரூபிஎன்றேனே (நாதா)
௰௧. சீர்பேர்இல்லாஅநாமதேயர்என்றேனே
அருந்துணைஇல்லாஅபாயர்என்றேனே (நாதா)
௰௨. மாதின்றிஉலகீன்றமாயம்சொன்னேனே
வேதநாயகாஇன்னம் வேறென்சொன்னேனே (நாதா)

௫௨, இராகம்-பியாகு-ஆதிதாளம்.

பல்லவி.

உன்னைப்போலஎனக்குற்றபேர்கள்-இந்த
உலகந்தன்னில் உண்டோ

அநுபல்லவி,

அன்பாதங்கக்குருதேவே-இந்த-அகிலகாரணபிதாவே (உன்)

சரணங்கள்.

௧, தந்தைதாய்க்குமனஸ்தாபம்-வரில்
சாற்றுவார்கள்பலசாபம்-மண்ணில்
எந்தநேரமுமேபாவம்-செய்யும
எனக்குநீசெய்வதுலாபம் (உன்)

௨, அண்ணன்தம்பிக்குண்டுபோகம்-அதை
அடையுமட்டும்அவான்நேகம்-பின்பு
எண்ணுவார்கள்பல-துரோகம்நீ
ஈனைவன்மைகள் அநேகம் (உன்)

௩. மனைவிபாலர்க்கன்னவஸ்திரம்-தரும்
மட்டுமேஅவர்கள்மித்திரம்-பின்பு
நினைவர்செய்வர்பலசூத்திரம்-என்றும்
நீடும்உன்னருள்சமுத்திரம் (உன்)

௪. எவல்மன்னர்க்குண்டுதிறையே-அதை
ஈந்திடாதவர்க்குச்சிறையே தொழும்
மேவினோருக்கில்லைகுறையே-தொழும்
வேதநாயகன்தன் இறையே (உன்)

௱௪. இராகம்-காப்பி-ரூபகதாளம்.

பல்லவி

நாளேநல்லநாள்-புண்ணியம்செய்யும்

அநுபல்லவி,

ஆளும்வேதநாயகன்தாளிணைபூசிக்கும் (நாளே)

சரணங்கள்.

௧. பாபமில்லாதகால-க்ஷேமமும்சுஜனசல்
லாபமுமேபரம-லாபமாகக்கொள்ளும் (நாளே)
௨. வேதமும்பெரியவர்-போதமும்தேவசங்
கீதமும்முதலான-நாதங்களுடன்செல்லும் (நாளே)
௩. ஞானமும்ஜீவாபி-மானமும்பரன்பத
தியானமுமேசெய்து-மோனநிலையிற்நிற்கும் (நாளே)
௪. பத்தினிசுதாகுடும்-பத்தவர்யாவரும்
சித்தநிர்மலமுடன்-பக்திபுரிந்திடும் (நாளே)
௫. கூனர்குருடர் அங்க-ஈனர்பிணிஉடையோர்
தீனர்முதலியோர்க்குத்-தானதருமஞ்செய்யும் (நாளே)

௩௫, இராகம்-சாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

ஏதோஇன்னம்வாதோ இரங்காதோஉன்மனமே

அநுபல்லவி.

வேதவரோதய விமலச்சந்திரோதய
வித்தகநயகுண உத்தமசிரேஷ்டா
பத்தர்கள்பழுதறு சித்தஅபீஷ்டா (ஏதோ)

சரணங்கள்.

௧, ஐம்புலவேடர்வேட்டை ஆடித்திரியுங்காட்டை
வெம்பாசப்பேய்வாழவீட்டை விரும்பியேதுன்பமூட்டை
மேவிமனம்அயர்ந்தேன் நிலைமையில்லாப்
பூவின்சுகம்வியந்தேன் அநுதினமும்
பாவவழிநயந்தேன் இனிமேல்வரும்
சாவைஎண்ணிப்பயந்தேன் நிரந்தரமும்
தனாமுதலாகஎங்கும் விரியுலசந்தரமே
அரியகருணைமழை சொரியுங்கந்தரமே (ஏதோ)

௨. தீயமனோவியாபாரம் தீர்ந்திடவேஇந்நேரம்
நீயருள்பரிகாரம் நின்பதமேஆதாரம்
நேசஅபிமானம் சற்றும்இல்லாமல்
பேசுவேன்ஞானம் எனக்குலவ
லேசம்அநுஷ்டானம் இலையேஉப
தேசசன்மானம் கொடுத்தருள்செய்
தினமஙளமகிழ்வுறு கனதிரவியமே
அனவரதமும்ஒளி தினகரமயமே (ஏதோ)

௩. நீர்குமிழிஎனவே-நிலையாவாழ்வுகனவே
பார்க்குள்உனைஉனவே பரிந்தருள்வாய்நனவே
பாசமகுலையாதா எனக்குமோகா
வேசம்கலையாதா உலகம்செய்யும்
மோசம்தொலையாதா உன்மீதுகன
நேசம்நிலையாதா நிலைமைபெறு
நீதநிரஞ்சன அபேதசுகுணமே
வேதநாயகன்மனப் போதமாயணமே (ஏதோ)

—(*)—

௱௯. இராகம்-பந்து-ஆதிதாளம்.

பல்லவி.

நீயேசர்வசக்தன்-நல்ல
நிச்சயனேகன அக்ஷயனே

அநுபல்லவி,

தாயுந்தந்தையுந் தமரும்அற்றாயே
மாயுந்தொழிலறு வாழ்வுபெற்றாயே (நீயே)

சரணங்கள்,

௧. பல்லாயிரம்அண்டப் படைப்பாய்உடைப்பாய்
எல்லாஉலகமும் எள்ளிளுள் அடைப்பாய் (நீயே)

௨. அஸ்திவாரந்தான் அருஞ்சுவரிலேயே
பத்தியாநீசெய்த பகிரண்டமிலேயே (நீயே)

௩. பலபொருள்தாங்கிடும் பர்வதம்போலே
தலையண்டகோடிகள் தாங்குவாய்மேலே (நீயே)

௪. திரிநெய்செப்பில்லாத் தீபங்கள்போலே
பரிதிசந்திரன்மீன் பலசெய்ததாலே (நீயே)

௫. அண்டம்அகண்டம் அடங்காதசரீரம்
தொண்டர்கள்மணமலர் சுமக்குமேபாரம் (நீயே)

௬. பாரபூதங்கள்உன் பணிசெய்யுஞ்சரியே
சூரியன்உனதுடன் சோதிமுன்கரியே (நீயே)

௭. யுகம்பலகோடிகள் உனக்கொருக்ஷணமே
நிகழுமுக்காலமு நினக்குக்கிரகணமே (நீயே)

௮. சகலர்க்கும்ஊட்டிநீ தானென்றும்உண்ணாய்
நிகழ்பெருங்காவலால் நித்திரைபண்ணாய் (நீயே)

௯. தினகரசந்திர தீபமேற்றிவாய்
வனமுகிற்கடத்தால் மழையூற்றிடுவாய (நீயே)

௰. மடவாய்பறவாய் நாடெங்கும்இருப்பாய்
உடலாய்உயிராய் உயர்வாய்பெருப்பாய் (நீயே)

௰௧. மரங்களிநுழைந்தே மலர்வாய்கிளைப்பாய்
கரங்களில்லாமே கருமங்கள் விளைப்பாய்

௰உ. கண்ணுயைப்பொருள்களைக்காட்டுவாய்பார்ப்பாய
அண்ணுசகலமும்ஆட்டியேதீர்ப்பாய் (நீயே)

௰௩. கிணைகடல்உனதருட்கடலிலோர்தில்லை
இனிவேதநாயகாஎன்கவென்னகவலை (நீயே)

௱எ-இராகம்-தோடி-ரூபகதாளம்

பல்லவி,

ஞானகுருபரவடிவே-அருமறையின்முடிவே (ஞான)

அநுபல்லவி

மோனசுகாசனசம்பிரம-முத்தியளித்திடும் நித்தியபரப்பிரம (ஞான)

சரணங்கள்.

க. பாமரனுனைஎன்மீதுனக்குக்கிருபை இல்லையா எந்தப்
பாவம்தொலைத்தெனை ஆள்வதுனக்கொருமலையா
தாமதம்நீசெய்யதேகம்எனக்கென்னநிலையா-நிதம்
தஞ்சம்பத-கஞ்சம்பிர-பஞ்சம்தரு-நஞ்சம்தொலை (ஞான)

உ, தீனகிருபாநிதிஎன்றுபேர்கொண்டநீ அலவர-அருள்
செய்தெனை ஆள்வதினுல்உனக்கியாதொருசெலவா
ஆனமலர்ப்பதம்அண்டும்நான்கிள்ளைநீ இவர் புவி
அஞ்சம்புலன் அஞ்சும்பகை-நெஞ்சும்செயும்-வஞ்சம்தொலை

௩, நின்மலநித்தியநிரஞ்சனநீதவிரேதா-நானும்
நீயகிலசராசரம்யாவையும்தாக்கும்பிரக்கியாதா
தன்மவிலாசசுக்ரனுபவானந்தநீதா-எனைச்
சாடும்வினை-வாடும்வழிபாம்பர-வீடும்கொடு

ச, நம்பும்அடியவர்துன்பம்அதற்றுங்குணளா-பவ
நாசம்நேசபிரகாசவிலாசதயாளா
அம்புவியில்வேதநாயகன்போற்றும்பொற்றளா இங்கும்
அங்கும்புவி-எங்கும்புகழ்-தங்கும்பதி-ரங்கம்பெறு

—(*)—

௱அ-இராகம்-ஈசமனோகரி-ஏகதாளம்:

பல்லவி.

மெய்யிது மெய்யிது மெய்யிது தேவே.

அநுபல்லவி.

ஐயையோஎன்செய்வேன்அருள்புரிகோவே (மெய்)

சரணங்கள்.

௧, மலர்த்துணைப்போற்றாதவாயனும்நானே
மலர்த்துநின்பணிசெய்யாதகாயனும்நானே (மெய்)
௨. கண்டுநீர்பெருகாதகண்ணனும்நானே
அண்டிவாழுயிர்க்கெல்லாமன்னனும்நானே (மெய்)
௩. நிதம்உனைநினையாதநெஞ்சனும்நானே
மதங்கொண்டுதிரிகின்றவஞ்சனும்நானே (மெய்)
௪, களித்துனைச்சேவியாக்கரத்தனும்நானே
தினந்தினம்வணங்காதசிரத்தனும்நானே (மெய்)
௫, கருதிஉன்புகழ்கேளாக்காதனும்நானே
கருதியையமறக்கநிற்குதனும்நானே (மெய்)
௬, கடுகஆலயம்செல்லாக்காலனும்நானே
முடுகியவினைக்கெல்லாம்மூலனும்நானே (மெய்)
௭, போதஅபேதபுநிதநிஷ்கோபா
வேதநாயகன்தொழும்விமலசொரூபா (மெய்)

—— (*) ——

௱கூ-இராகம்-சாமா-ரூபகதாளம்.

பல்லவி.

பரபிரமமே-திருவருள்-தரல்கிரமமே-அருணமும்

அநுபல்லவி.

சரணாகத வத்சல
சுரகணபூஜித னவபல (பரபிரம)

சரணங்கள்.

௧, செய்வதெல்லாம் நினையேயே
நினையளவும்உனை நினையேன்
தெய்வமேநம்பினேன் உனையே
தீர்த்தருள்வாய்துயர் தனையே (பரபிரம)

௨. அறியேன்மேற்குக் கிழக்கு
அன்புமில்லேனின் கழற்கு
சிறியேன்மேல்ஏன் வழக்கு
ஜெபதபத்தில்லையும பழக்கு (பரம)

௩. பாழுமனமோவல் விரும்பு
பாவம்அதற்குக் கரும்பு
தாழ்வுறுநான்சிறு துரும்பு
சாமிஎன்மேல்மனந் திரும்பு (வரம)

௪. நினையேன்தர்மம் அதர்மம்
நிலமிசைநான்மூட ஜென்மம்
அனையேஏதின்னம் வர்மம்
அகற்றிடுவாய்எனது கர்மம் (பரம)

௫. அகண்டமண்டலாதி பத்திய
ஆதியந்தரகித நித்திய
மிகுந்தகுணபூரண சத்திய
வேதநாயகன் ஸ்துதிநித்திய (பரம)

௫௰. இராகம்-பியாகு-ஆதிதாளம்.

பல்லவி.

பாதம்நம்பினேன்-போதம்அருள்கோனே

அநுபல்லவி,

வேதமுதலோனே-மாதவர்பிரானே (பாதம்)

சரணங்கள்.

௧. ஆதரவுநீயே-ஐயனேஎன்தாயே
வாதைமலநோயே-மாற்றிஅருள்வாயே (பாதம்)

௨. தீங்குகள்அநேகம்-செய்திடும்என்றுரோகம்
நீங்கிடவிவேகம்-நீஅருள்நேகம் (பாதம்)

௩. முத்தர்கள்சமுகனே-முக்கியபிரமுகனே
உத்தமசுமுகனே-ஓவேதநாயகனே (பாதம்)

௱௰௧. இராகம்-கனகவசந்தம் ஆதிதாளம்.

பல்லவி.

நீயே துணைபரனே-துன்பம்
நீங்கிட அருள்பரனே

அநுபல்லவி.

மாயாதிமிரவிஜயதினகரனே
தாயாகியசர்வசாதகரனே (நீயே)

சரணங்கள்.

௧. அடியேன்செய்வதெல்லாம்அரும்பாவம்
கொடியேன்மீதுகொள்ளாதேகோபம் (நீயே)

௨. பண்ணேன்துதியேபடியேன்நிதியே
கண்ணேமணியேசதியேசதியேநிதியே (நீயே)

௩. உனையேநம்பிடில்உண்டோபயமே
அனையேவினைதீர்த்தருள்வாய்ஜெயமே (நீயே)

௪. மாதவம்உடையவர்மகிழ்மலரகிதா
வேதநாயகன்தொழும்விபுதர்கள்சகிதா (நீயே)

௱௰௨. இராகம்-பைரவி-திரியுடைதாளம்.

பல்லவி.

நாதாகண-வேதாதினம்-நீதாவரமே

அநுபல்லவி.

போதாசுக-தாதாஅதி-கியாதாபிரசாதாபுவி. (நாதா)

சரணங்கள்.

௧. நித்தியம்அநித்தியம்சுகர்த்தினைமதித்திடு
வைத்தியம்விடுத்தினிபசத்தியம்உதித்திடவே (நாதா)

௨. சுந்தரமடைந்தையர்கள்சந்திரமுகந்தனை
நினைந்தெனதுசிந்தனைசெய்தந்திரம்ஒழிந்திடவே (நாதா)

௩. சொப்பெனவேஒப்பனைகொள் அற்ப உடலைப்பொருள்
எனப்பிரியமவைப்பதறநற்பலன் உற்புவன (நாதா)

௪. சாத்திர பூதலமேல்-ஆதாரமுற்றபடி
சாதகம்பிர-போதமருள்-வேதநாயகன்புகழும் (நாதா)

௩௰௩. இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

வேதநாடகனே-மெய்-மெய்-மெய்-மெய்

அநுபல்லவி.

பாதகம்செய் தூறலும்பார்மதியே-ஐயன்
பாதங்கள் அன்றி நமக்காரகதியே
பூதலவாழ்வினெடு புகழ்நிதியே-வெறும்
பொய்-பொய்-பொய்-பொய் (வேத)

சரணங்கள்.

௧. அந்தமியாதொளிர்திவாகரனே-அதி
அற்புதமானசிவாகரனே
சிந்தமிசைஒளிசுதாகரனைத்-துதி
செய்-செய்-செய்-செய் (வேத)

௨. பூதலம்எங்கும்இசைபோனவனே-அதி
புனிதனேஉயிர்க்குயிர் ஆனவனே
மாதவர்காணுகின்றமானவனே-உன்றன்
கை-கை-கை-கை (வேத)

௩. நாகபூதபௌதிகஸ்தாபகனே-வேத
நாயகன்பீதில்லென்றும்ஞாபகனே
ஓதரிதானசர்வவியாபகனேப்பணிந்
து-உய்-உய்-உய் (வேத)

௩௰௪. இராகம்-கௌளிபந்து-ஆதிதாளம்.

பல்லவி.

ஓதிஜகநாதா-ஒருவராம் உதவிடல்-ஆகாதா

அநுபல்லவி

தேவேதினம்பல பாவேடாடிஎன்
…வேணித்தேனே (ஓதி)

சரணங்கள்.

க, மனம்விஷயப்பிரியம்-சகலமும்
வாசாகைங்கிரியம்
சினம்மதம்மாற்சரியம்-பூண்டஎன்
செயகைகள் ஆச்சரியம்
இனமாகியபக்தஜனமுடன்ஐக்கியம்
கனவினும்நீங்காமல் (ஓஓ)

உ. பொய்யைமெய்யெனநாடி-அநித்தியப்
பொருள்களையேதேடி
வையகம்எங்கும்ஓடி-நான்செய்த
வஞ்சகம்பலகோடி
மையற்கரிஇடர்கள்-செய்யவேதொடருதே
ஐயோ-கூ-கூ-கூ- (ஓஓ)

ந, நேசசிந்தாமணியே-அடியேன்
நெஞ்சகம்பூண்அணியே
ஆசையில்வரும்பிணியே-தொலைத்துநல்
அறமேவிடப்பணியே
ஜசனேஉனைத்தொழும்தாசன்வேதநாயகன்
பாசவலைஉறாமல் (ஓஓ)

௱௰௫. இராகம்-தேசமுகாரி-ஆதிதாளம்.

பல்லவி,

போதம்தரஎன்னவிவாதம்
எனக்கமல
போதம்தரஎன்னவிவாதம்

அநுபல்லவி,

வேதம்உணர்ந்தொழுகும்
நீதம்உடையவர்க்குப்
பேதம்அறவரப்பிர
சாதம்அருள்தெய்வமே (போத)

சரணங்கள்.

க. மோகம்பெருகியலௌ
கிகமெனும்பெரும்பிர
வாகந்தனில்அழுந்தி
ஆகம்மெலிந்தேன்ஐயா (போத)

௨. நெஞ்சோர்புறம்புலன்கள்
அஞ்சோர்புறம்பின்னுர்கள்
வஞ்சோர்புறம்வருத்தும்
என்கோர்வெல்லாம்அகலப் (போத)

௩, பெண்ணுசையாலும்வளர்
மண்ணுசையாலும்நிதி
எண்ணுசையாலும்மனம்
புண்ணுகிவாடினேனே (போத)

௪, ஏதும்அறிவில்லாஎன்
மீதுவர்மஞ்செய்தல்த
காதுபரமபக்கர்
ஓதும்வேதநாயகா (போத)

௱௰௬. இராகம்-கௌளிபந்து-ஆதிதாளம்,

பல்லவி.

சருவேசாசரணம்-எக்குண-தாளே ஆபரணம்

அநுபல்லவி.

இரவும்பகலும்உனேயேஅநுசரணம்
இசைந்திடச்செய்யிதுநல்லபிரகரணம் (சரு)

சரணங்கள்.

௧, தீயேசெய்வதெல்லாம் உபகாரம்
நின்மேற்சொல்லஉண்டோ விவகாரம்
தீயேன்புரிந்திடும்பிழைகள் அபகாரம்
தேவர்செய்இதற்கோர் பரிகாரம்(சரு)

௨, புண்ணியம்செய்திலன்கடுகுப் பிரமாணம்
பொய்பான்நான்ஆயினும்இது பிரமாணம்
எண்ணிடில்எனக்குமின்னுர் விழிபாணம்
என்சரித்திரம்பெருங்கதா புராணம் (சரு)

௩, பேசுவதெல்லாம்வாசா ஞானம்
பெரும்பாவியர்க்கெல்லாம்நான்பிர தானம்
நேசாசகலமும்உனேதா தீனம்
நீயருள்எனக்குக்கிருபாரச பானம் (சரு)

ச, ஈமேல்தொடுக்கின்றபாணப் பிரயோகம்
எனநீமுனிந்திடில்யாது நிர்வாகம்
மாமோரெதியில்மயங்கி னேன்ஆகம்
வரவேதநாயகா அருள் பரிபாகம் (சரு)

—(*)—

௫௰௭. இராகம்-நாதநாமக்கிரியை-ரூபகதாளம்.

பல்லவி.

சமயம்ஈதையா-நலம்எனக்-கமையலைதையா

அநுபல்லவி.

அமர்செய்தீவினைச்-சுமைதொலைத்தெனை
அமலன்ஆக்கிடல்நேர்த்தி-ஒரு
சமமிலாஅருட்பூர்த்தி-உறு
நிமலகாரணமூர்த்தி (சம)

சரணங்கள்.

க, இன்னம்தாமசமோ-வினைசுமந்
திடஎன்னால்வசமோ எனக்
கின்னம்சகசமோ-உனக்கருள்
ஈயஅவசமோ
அன்னமென்னடை-மின்னல்நேரிடைக்
கன்னியர்விழிஇணையே-மனம்
தன்னில்பாய்ந்திடும்கணையே-இனி
என்னசெய்வேன்துணையே (சம)

உ. கருணைகூறாயோ-எனதுளக்
கவலைதீராயோ இந்தத்
தருணம்வாராயோ-எளியேன்
தன்முகம்பாராயோ
இரணியம்பெண்கள்-தரணிமிதந்தக்
கரணமேவமெய்துறந்தேன்-கடல்
சரணபங்கயம்-மறந்தேன்-உன்றன்
சரணபங்கயம்-மறந்தேன் (சம)

௩, மாயைநீக்காயோ-எனைமுகம்
மலர்ந்துநோக்காயோ-வினைத்
தீயைப்போக்காயோ-எனைஅதி
சீலன்ஆக்காயோ

நீயலா துசகாயமெவ ரினித்
தீயவர்பயங்கரனே.வல
நோய்அற அருள்வரனே-வேத
நாயகன்தொழும்பரனே (சம)

௱௮, இராகம்-இந்துஸ்தான்காபி-ஆதிதாளம்

பல்லவி

வாவா-வாவா-என் இதயந் தனில்
வந்தே மலரடி தந்தே ஆண்டிட (வாவா)

அநுபல்லவி.

சாவால்வருந்துமுன்-காவாகாத்திடல்
தவா-பூவார்-ஜீவா-தேவா (வாவா)

சரணங்கள்.

௧, மின்னார்கள்விழிவலை-தன்னால்தயங்கினேன்
உன்னாதரவில்லாமல் பன்னாள்மயங்கினேன் (வாவா)

௨, பொய்யானவாழ்வுதன்னைமெய்யாகநம்பினேன்
ஐயாநின்னடிக்கன்பு-செய்யாமல்வெம்பினேன் (வாவா)

௩, சிந்தாகுலங்கெட-விசைந்தாளிலதின்மையா
எந்தாயேநீயெனை-முனிந்தேகல்நன்மையா (வாவா)

௪, வேதநாயகன்தொழும்-சீதமலர்ப்பாகனே
ஆதவன்எனப்புவிமீதில்வரும்நாதனே (வாவா)

———(*)———

௱௯, இராகம்-இந்துஸ்தான்காபி-ஆதிதாளம்.

பல்லவி.

இன்னமும்என்மீதுனக்கேன்பராக்கு
நின்னருள் தந்தேயெனை நீகைதூக்கு (இன்ன)

அநுபல்லவி.

பன்னரியபுவனமனோகரா
உன்னதப்பிரதாபகிருபாகரா (இன்ன)

சரணங்கள்

க, ஏதுங்கதியில்லா ஏழைநானே
என்னசெய்யுஞ்சலம்நீங்குமீனே
பாதவன்பதமலரோநம்பினேனே
பாகேஅமுதேதபசுந்தேனே (இன்ன)

உ, கானலெனும்காயசுகபோகம்நாடிக்
கர்த்தனேசெய்தேன்வினைகோடிகோடி
வேனில்வெயிலுற்றபுழுப்போலவாடி
வேதனேவந்தேன்உன்தன்பாதந்தேடி (இன்ன)

ங, அண்டபகிரண்டசர்வாதிகாரா
அவ்வியக்தமயஅசகாயசூரா
தொண்டன்வேதநாயகன்மனோசஞ்சார
தோஷபரிகாரஉதாரதீரா (இன்ன)

௱உ௫, இராகம்-சுருட்டி-சாப்புதாளம்.

பல்லவி.

இப்படிப்பட்டநான்-எப்படிஉன்முகத்
தேவந்துவிழிப்பேன்ஐயா (இப்ப)

அநுபல்லவி.

நப்பறியாதவர்-தமதறிவினைத்தூண்டும்
தாயேதந்தையேஎன்மேல்-நீயேஇரங்கவேண்டும் (இப்ப)

சரணங்கள்

க, பதாதிகேசபரியந்தமும்நான்விடம்
பகலும்இரவும்மாயைபண்ணும்என்நெஞ்சில்கூடம்
ஏதமஅறஅந்நெஞ்சம்ஏகாஇடம்எவ்விடம்
எனினும்உன்னிடம்வரவெனில்அதுமுழுபயம் (இப்ப)

உ, கர்த்தனேஎன்மேல்அற்பக்காற்றடிக்கினும்பொறேன்
காசினியெல்லாங்கேட்டுங்கலங்கினும்துயருறேன்
எந்தனைபொருள்பிறர்எனக்கீந்திடினுமறேன்
எச்சிற்கையாலுங்காயங்கூட்டிநான்இழிவுறேன்

௬, இகபிணைநான்சுமந்திடுவதுபாழிச்சுமை
எனினும்பிறர்செய்யற்பருக்கும்செய்யேன்கஷ்டமை
மிகஅப்பர்தமைச்சேர்வதல்லாற்மேலெவர்தமை
வேதநாயகனேநான்மேவிஅறியேன்இமை (இப்ப)

௱௨௧, இராகம் மோகனம்-திரிபுடைதாளம்.

பல்லவி.

எந்தவிதமும்உன்-சுந்தமலர்ப்பதமே-அடியேன்அடைந்திடச்
சிந்தைமகிழ்ந்துநீ-தந்தருள்வாயிதமே (எந்த)

அநுபல்லவி.

அந்தரமெங்கும்-அமர்சர்வசாக்ஷியே
வந்தனைசெய்பவர்-மானசக்காக்ஷியே (எந்த)

சரணங்கள்.

௧, சகமானிடர்தமக்குப்பாவமே-பிழையாவும்பொறுத்துந்
தயைசெய்தாள்வதுநின்சுபாவமே
நகவேஉன்சரித்திரப்பிரபாவமே-அநுதினமும்பாடிச்
சாதகம்பெறஎன்மனோபாவமே
தந்தைநீதானே-உனக்கொரு
மைந்தனும்நானே-இவ்வாறுநான்
சொந்தமானேனே-தரிசனம்
தந்தருள்கோனே-புவிதனில்
நிகரில்லாதநியாயம்பிரசித்தனே
சகலலோகசராசரகர்த்தனே (எந்த)

௨, மணல்அன்னத்திற்கல்லாய்த்திடுவகையே எனைச்சோதித்திடில்என்
மனதில்வுள்ளதெல்லாம்வினைத்தொகையே
குணம்உண்டோபுவிவாழ்வுவெறுப்புகையே அதைவிரும்பி என்
குரங்கும்ஐம்புலன்களும்செயும்பகையே (மனக்)
கோதையர்மோகம்-தனில்வரும்
வாதைஅநேகம்-எவர்க்குமே
ஈதநுபோகம்-எனக்கினிப்
போதும்இப்போகம்அநுதினம்
புணரும்ஆனந்தபொக்கிஷசாலையே
மணமிகுந்தருள்மலரும்சோலையே (எந்த)

௩. தாதைபிள்ளையைத்தள்ளல்பாந்தமா-இறுநாள்குபேரும்
சரியென்றொப்புக்கொள்ளுஞ்சித்தாந்தமா
நாதனை எனைமுனிதல்சாந்தமா எனதுள இரும்பையெந்
நாளும்இழக்கும்விஷயம்காந்தமா உனையேகதியென
நண்ணியசித்தர் பெருந்தவம்
புண்ணியசுத்தர்-நிகரறு
புண்ணியநீதர்முதலிய
எண்ணிலாமுத்தர்-அடையுமுன்
பாதநிதிஅவர்க்கேபிராஸ்தியா
வேதநாயகன்பங்கென்னநாஸ்தியா (எந்த)

௱௨௨, இராகம்-பைரவி-ஆதிதாளம்

பல்லவி.

ஏகாகனயோகா அநுதினம்எனையாண்டருள்வாயே

அநுபல்லவி.

சேகரகுணதிவ்வியதேஜோமயகாந்திர
பாகநித்தியானந்தபாக்யபரமக்ஷேத்திர

சரணங்கள்.

௧, கண்டுநிகர்மொழியும்-வண்டுநிகர்விழியும்
தண்டுநிகர்புயமும்-கொண்டுமபக்குமந்தப்
பெண்டுபிள்ளைகட்குழைத்-துண்டுறங்கிநிதமும்
மண்டுவினையலானன்-தொண்டுசெய்தறிகிலன் (ஏகா)

௨, நாடேன்பெரியரொடு-கூடேன்புண்ணியந்தன்னில்
நீடேன்உனதருளைத்-தேடேன்உனதுபுகழ்
பாடேன்அனுதினங்கொண்டாடேன்பதமலரைச்
சூடேன்அருவினையைச்சாடேன்சுரர்புகழும் (ஏகா)

௩, நாதாதிவ்யவரப்பிர-சாதாஅகண்டசமு
நீதாநினைவினுக்க-தீதாஅடியர்கள்ச
மேதாநிலைகொள்பஞ்ச-பூதாதிரிகர்மவி
நோதாதினந்தினமும்-வேதநாயகன்புகழ் (ஏகா)

௩௨௩. இராகம்-மோகனம்-ரூபகதாளம்.

பல்லவி.

இன்னம்பராமுகமாமோ-வினை
நின்னருள்தானின்றிப்போமோ

அநுபல்லவி.

மின்னல்உறுபுகழ்-நன்னலம்மவிய
வேதார்த்தா-கள-போதார்த்தா ஓ (இன்)

சரணங்கள்

௧. வன்பிழைஒப்புக்கொண்டாலே-க்ஷமை
மன்னர்செய்வார்புவிமேலே
என்பிழையைப்பலகாலே-ஒப்பி
னேனேமுனிவேதென்பாலே
அன்பேனும்தெப்பம் இல்லாமல்வினைக்கடல்
ஆழ்ந்தேனே-துயர்-சூழ்ந்தேனே-ஓ (இன்)

௨. தன்பதியைப்பகையோரே-கொள்ளத்
தான்பார்த்திருப்பவன்யாரோ
நின்பதிஎன்மதிதேரே-அதில்
நீங்காமல்உன்கண்முன்னேரோ
என்பகையோரெனும் காமக்குரோதாதிகள்
உற்றாரே ஜெயம்-பெற்றாரோஓ (இன்)

௩. நெஞ்சங்கவலைக்குவிடாஐயா
நின்சோதனைக்குநான்ஈடா
அஞ்சாதேநீ இங்குவாடா-என்
றருளாதின்னம் வேறுபாடா
தஞ்சமெனவேதநாயகன்போற்றிடும்
தாதாவே-பெற்ற-மாதாவே-ஓ (இன்)

———)()()(*)()()(———

௩௨௪-இராகம்-உசேனி-திரிபுடைதாளம்

பல்லவி.

ஏகநாதா அரும்பர-போகம்நீதா

அநுபல்லவி.

பாகவிகசிதநற்பகாரண்ணிய
பதிதபாவன பரமகாருண்ணிய
தேகம்நிறைஅதி ரூபலாவண்ணிய
தீர்த்தமைச்சிரக்ஷை செய்யும்கீர்த்தாக்ஷண்ணிய (ஏக)

சரணங்கள்

௧. நாளுமூழ்கின்னபாபஅங்கணம்
  நாடினேன்பெரியோர்கள்வங்கணம்
ஆளும்படிதரித்தனைநீகங்கணம்
  அன்போடெனைச்சேர்நல்லோர்கள்தங்கணம்
நீளும்அகண்டிதமாகியோங்கிய
  மாளுந்தொழிறுமாசுநீக்கிய (ஏக)

௨. அடியன்மீதுனக்கென்னபிணக்கமே
  அகற்றுவாயெனதகங்கள்உணக்கமே
நெடியநின்பதமலர்க்குவணக்கமே
  நிதமும்நான்செய்ய அருள்நல்லிணக்கமே
கடியதுயர்கடல்கடக்கஉனதினை
அடியலாதினி அயலுண்டோபுனை (ஏக)

௩. உதிக்கும்பலகதிர் நிகரும்விதுரனே
  உயர்நித்தியானந்த நகரச்சதுரனே
துதிக்கத்துதிக்கவே இனிக்கும்மதுரனே
  சூழும்சீவராசிகள் தம்பிதிரனே
குதிக்குமாயையைக்கொன்றுதாழ்விக்கும்
மதிக்கும்வேதநாயகனைவாழ்விக்கும் (ஏக)

௯௨௫-இராகம்-புன்னாகவராளி-ரூபகதாளம்.

பல்லவி.

தயைபுரியே-எனதுளத்-துயர்பிரியே (தயை)

அநுபல்லவி.

உயரும்தாமசம்வர்த்தனை
  உகிதமர்தம்மனநிர்த்தனை
கயவர்இழிகுலமர்த்தனை
  கருதரும்புண்ணியயத்தனை (தயை)

சரணங்கள்.

௧. புண்ணியம்நாயேனுக்கெட்டி
பொய்களெல்லாம்வெல்லக்கட்டி
திண்ணியமெய்ஞ்ஞானதிட்டி
சிறிதீயில்லென்னகட்டி
சின்மயமெ-வெய்வேத-நன்மயமே-எனையுறு
தின்மைப்பழியோடே-நன்மைப்பலன்நீட
உண்மெய்ப்பதம்நாட-கன்மப்பயிர்வாட (தயை)

௨. என்குறைபாராட்டாதே
இன்னம்என்னைவாட்டாதே
நின்கோபங்காட்டாதே
நிபங்கள்என்மேற்சாட்டாதே
நிச்சயமே நிலைபெறும்-அக்ஷயமேகனமுறு
நேசத்திடம்ஓங்க-பாசத்திடம்நீங்க
மாசற்றம்வீங்க-வாசத்தகைதாங்க (தயை)

௩. அண்டசராசரரூபா
அதிகளுக்கநுதாபா
விண்டலமண்டலபூபா
வேதநாயகன்லாபா
விண்மணியே-எனதிரு-கண்மணியே.பழிசெயும்
வேகப்பவமோட்டி மோகப்பகைவீட்டி
பாகப்பறம்நீட்டி-யேகப்பதிநாட்டி (தயை)

௱௨௬. இராகம்-ஜங்கலா யீபகதாளம்.

பல்லவி.

நல்வரந்தந்தாளுவாய்
நாதனேஅபேதனே (நல்வ)

அநுபல்லவி.

அல்லும்பகலும்உன்னைநாட்
அற்புதபரமார்த்தந்தேட (நல்வ)

சரணங்கள்.

௧. அன்பருடனேகூடவும்-அநுதினம்துதிபாடவும்
இன்பசாகரம்ஆடவும்-ஈனரைக்கண்டால்ஓடவும் (நல்வ)

௨. பஞ்சபுலனை அடக்கவும்-பாவக்கடலைக்கடக்கவும்
நெஞ்சம்ஒடுங்கிக்கிடக்கவும்-நீதிநெறியில்நடக்கவும் (நல்ல)

௩. தினைகளையேதாங்கவும்சிந்தைத்துயரம்நீங்கவும்
ஞானவழியில்ஓங்கவும்-நானுன் அடியில்தூங்கவும் (நல்ல)

௪. பத்தர்பரவுந்தேவனே-பரமதிவ்வியசுபாவனே
வித்தகமெனும்பாவனேவேதநாயகன்ஜீவனே (நல்ல)

---(*)---

௱௨௭. இராகம் பூரணச்சந்திரிகை ஆதிதாளம்

பல்லவி-

இன்னம்தான்-பராமுகமோ-இதுதகுமோ-ஸ்வாமி

அநுபல்லவி.

சந்நிதானதரிசனம்அருளாமல் (இன்னம்)

சரணங்கள்.

செந்தாமரைப்பதமேசேரேன்நானிதமே
கொந்தேன்பலவிதமே கொய்தீர்த்தருள்ஹிதமே
சிந்தைதனிற்பிரமைகொண்டேன்
தீமைகள்செய்துகைகண்டேன்
சந்ததமும்நலம்விண்டேன்
சஜ்ஜனசங்கமும்அண்டேன் (இன்னம்)

௨. பூண்டேன்அபசரிதம-புகழேனின்சரிதம
ஆண்டோய்என்துரிதம்-அறவேசெய்துரிதம்
நீண்டபெருந்தகைபூணேன்
நீதிதனையுமேபேணேன்
மூண்டபெரும்பழிநாணேன்
முத்திபெறும்வழிகாணேன் (இன்னம்)

௩. அடியார்திரவியமே-அமலோதஸ்வயமே
வடிவார்ஆலயமேவளர்தேஜோமயமே
திடமுறுபுவனதாரா
தினகரகோடிசரீரா
விடபமுறு அதிகாரா
வேதநாயகன்உபகாரா (இன்னம்)

൩உ൮ இராகம் பிலகரி-ரூபகதாளம்,

பல்லவி.

கருணாலயநிதியே - தினமுஉன்
சரணம்புயம்கதியே கருணாலய

அநுபல்லவி.

சருவபேதவிநோதகாரண
பரமசாதகபவநிவாரண கருணாலய

சரணங்கள்;

க. நிதம்வெளுக்கவெளுக்கவெண்தூசு
நிமிஷந்தோறும்நிறையுமேமாசு
அதுபோல்என்தன்அகமுறும்ஆசு
அகலகோடிவிசாலகற்பித
சகலஜீவதயாள அற்புத கருணாலய

உ. இங்கென்செய்கைகள்யாவும்நிகிர்ஷ்டம்
எனக்குப்புண்ணியம்என்றும்அநிஷ்டம்
பங்கம்தீர்க்கில் உனக்குண்டோநஷ்டம்
பரமனேஅருளாயோஉதகிரிஷ்டம்
யாரமாகவேபண்ணும்பாதகம்
தீரவேநீசெய்வைசாதகம் கருணாலய

௩. அமலபாஷ்கரகோடிசொரூபா
அகண்டசச்சிதானந்தபிரதாபா
நிமலவேதவேதாந்தநிரூபா
நிர்விகற்பநிரஞ்சனதீபா
நீறபூரணறலயமஞ்சித
வேதநாயன்இதயரஞ்சித கருணாலய

൩உ൯ இராகம் அமீர்கல்யாணி-ரூபதாளம்

பல்லவி,

நாதாகிடையாதாவரமே-ஜெக-நாதா,

அநுபல்லவி,

பாதாரவிந்தம்நம்பும்பா வியைமேதாவியாக்க நாதா

சரணங்கள்.

௧. என்னாளுமுடைவிர்த்தி-இல்லையேதிரிகரணசுத்தி
மந்தமானஎன்துர்ப்புத்தி-மாறவேஅருளாயோசித்தி
௨. அகமெனுமதயானைஎன்வசம்-ஆகவேஅருள்ஞானஅங்குசம்
சுகதுக்காதிகளில்சமரசம்-தோன்றவேஅருள்வாய்தயாரசம்நாதா
௩. அபயவரதகாநிர்வாக ஆபத்பாந்தவஅருட்பிரவாகா.
விபவசார்வபௌமயோக-வேதநாயகன்ஸ்வாநுபோக நாதா

௱௨௰ இராகம்-அபூர்வம்

பல்லவி.

சருவவிநோதா திருவருள்-தாதாசருவ

அநுபல்லவி.

இரவும்பகல்உனதிணையடிநாடவும்
தருமநாமலசுகசாகரஆடவு சருவ

சரணங்கள்.

௧. பசிதாகசோகபாபசரீரம்
கசிவுறுமலஜலகாமபண்டாரம்
சுசிஅறும்இதில்வினைதோஷம்அபாரம்
நீசமயனேஅருள் நீபரிகாரம்
௨. கடல்நடுவேகனாசாஞ்தகாகம்
இடர்உறல்போலவேஎன்றுநிர்வாகம்
மடம்அறஅருள்செய்நிர்மறபரியாதம்
கடவுளேநாடினேன்கருணைப்பிரவாகம்
௩. சுரகண்சேவிததுரிதவியாயன்
சருவதயாபரசாபவிமோசன
கருமநிவாரணகருணவிலோசன
வரவேதநாயகன்மனகமலாசன

---

௧௩௧ இராகம்சரசாங்கி ரூபகதாளம்

பலலவி,

எத்தனைகவிபாடினும்பலன்எதுமில்லையே எத்தனை

அநுபல்லவி.

நித்யம்வாக்குக்கிரியை அத்தனையும்தினம்
உத்தமமார்க்கத்தில்-ஒத்துநில்லாமல் எத்தனை

சரணங்கள்.

க. சந்ததமும்பரன்சுந்தரபாதத்தை
அந்தரங்கமதனில்சிந்தனைசெய்யாமல் எத்தனை

உ. மோசஞ்செயும்ஆசாபாசங்களென்னும்பி
சாசந்தனைச்சர்வநாசஞ்செய்யாமல் எத்தனை

ங. கோபம்பொறாமைபொய்லோபம்முகமுதம்
பாபங்கட்கேமனஸ்தாபங்கொள்ளாமல் எத்தனை

ச. மும்மலபாசத்தைநிர்மூலமேசெய்து
நிர்மலசித்தனாய்தர்மம்செய்யாமல் எத்தனை

ரு, தாயகனும்வேதநாயகன்தினர்ச
காயன்தனைநெஞ்சுள்நேயம்பண்ணாமல் எத்தனை

ஈகஉ-இராகம் ஹம்சதொனி-ஆதிதாளம்

பல்லவி.

ஞானோதயவரம் அருளே

அநுபல்லவி.

பானோதயபரம்பொருளே (ஞானோ)

சரணங்கள்.

க. மாயாவிகாரசெகமே தோயாமல்அருள்சுபமே
தூயர்நேசனே-ஸ்வயம்பிரகாசனே
நீயர்நேசனேசித்விலாசனே (ஞானோ)

உ. தேகாபிமானம்அறவே-யோகாநுசாரம்உறவே
பாகம்ஊட்டுவாய்பாதம்நாட்டுவாய்
மோகம்ஓட்டுவாய்முத்திகாட்டுவாய் (ஞானோ)

ந. ஆதாரமேதுமிலேயேபாதாரவிந்தம்நிலேயே
போததாயகாபுண்ணியஆயகா
வேதநாயகாவிமலதூயகா (ஞானோ)

௩௨௩-இராகம் தீனசங்கராபரணம் ரூபகதாளம்.

பல்லவி

ஆதிமூலனேநீதிநூலனே-நித்ய (ஆதி)

அநுபல்லவி

வேதபோதசாதகம்பெறநீதயைபுரிவாய் (ஆதி)

சரணங்கள்.

க. திட்டமாகமாயைக்கேஷ்டமிக்கும்விஜயமா-நான்
துஷ்டன் ஆதலால்எனக்கும்என்கிட்டவரப்போமா
கெட்டஇதயமே அதில்-கஷ்டம்,உதயமே
சிஷ்டரோடெனைக்கூட்டிஞானநிஷ்டன் ஆக்குவாய்-நித்ய ஆதி

உ. துணைஉன்பாதஇணையலாது சொல்லவேறுண்டோ
இணையிலாபொருநினையிலாய்தெய்வம்எனக்குத்தான்இரண்டோ
குணம் தருவாயேஅருள் மருணம்தருவாயே
உணரொண்ணாத நினதுசேவைபுரணவேஅருள்வாய்நித்ய ஆதி

௩, மனையைச்சுத்தஞ்செய்தினிதுநல்மனிதர்க்குமசகசமே
நிணதகமெனும்எனதுநெஞ்சம்நீதமலவசமே
புனிதம்செய்வாயே-அதில்இனிதமாவாயே
தநயன்வேதநாயகனுக்குன்தரிசனமருள்வாய்நித்ய (ஆதி)

௩௨௪ இராகம்-பியாகு-ரூபகதாளம்.

பல்லவி.

பிக்ஷைஅருளாயோஞான (பிக்ஷை)

அநுபல்லவி.

அக்ஷயநிர்மல லக்ஷணனேஜீவ
ரக்ஷகனேஅதி-பக்ஷமுடன்ஞான (பிக்ஷை)

சரணங்கள்.

க. சத்தியமாருதபுத்தியும்ஓயாத
பத்தியுமைந்துஞானசித்தியுமுத்தியும் (பிக்ஷை)

உ. நேசருடன்சக்ரவாசமுஞ்ஞானப்பிர
காசமும்உன்விசுவாசமும்நேசமும் (பிக்ஷை)

௩. தானம்பொறைஅருள்-மானம்-இதராபி
மானம்சிநானமும்-மோனமுந்தியானமும் (பிசைகூ)

௪. பூதமெல்லாம்விட-நீதம்உருமலே
ஆதரவுசெய்யும்-வேதநாயகனே (பிசைகூ)

(*)

௧௰௫. இராகம்-சௌராஷ்டிரம்-சாப்புதாளம்.

பல்லவி.

இந்தமனம்கெட்டதையா
பந்தவலைப்பட்டதையா

அநுபல்லவி.

சந்ததம்புண்ணியந்திரண்ட
சுந்தரதேகாநான்கொண்ட (இந்த)

சரணங்கள்.

௧. சொன்னபடிகேளாச்சண்டி
தோஷமூட்டைதூக்கும்பண்டி
உன்னிடம்வரவெநொண்டி
ஓடும்விஷத்தைஅண்டி (இந்த)

௨. இதரர்வாழக்கண்டால்வாட்டம்
எவருங்கெட்டாலோகொண்டாட்டம்
மதனநெருப்புககுக்காஷ்டம்
வாயுவினும்வேகம்ஓட்டம், (இந்த)

௩. சுகதுக்கபேதம்போதிக்கும்
சூள்நலமெல்லாம்போதிக்கும்
பகல்இரவென்றுசாதிக்கும்
படுவிஷம்உண்டுசோதிக்கும் (இந்த)

௪. காடுங்கனாயும்சஞ்சாரம்
காமப்பசாசுக்காகாரம்
நாடும்பிரபஞ்சவியாபாரம்
ஞானமஇதற்கெட்டாத்தூரம (இந்த)

௫. பாதகங்கட்கெல்லாங்குரு
பாசம்விளைவிக்கும்ஒரு
ஏதுவில்லாவிஷதரு (இந்த)

௬. பஞ்சபூதாதிநிர்மாணு
பக்தர்கள் இதயவாணு
விஞ்சையாம்சாஸ்திரபுராணு
வேதநாயகப்பிரமாணு (இந்த)

௧௩௬. இராகம்-மனோகரம்-திரிபுடை-தாளம்.

பல்லவி.

எந்தையேஉனக்கும்அடியேனுக்கும்
எத்தனைபேதம்ஐயா (எந்தை)

அநுபல்லவி.

சந்தசர்வசாம்பிராஜ்யபிரபுத்துவ
சாசுவத்தேவதேவமகத்தும் (எந்தை)

சரணங்கள்.

௧. தேவன்நீசலபுவனேசன்
சிறியனான்உன்தன்தாசானுதாசன்
காவலனானநீஸ்வயம்பிரகாசன்
கசடனான்அந்தகாரப்பிரவேசன் (எந்தை)

௨. சத்தியமாகநீதர்மசொரூபி
தாரணிமீதிலேநான்பெரும்பாவி
நித்தியனானநீசுத்தஅரூபி
நிச்சயமாகநான்மெத்தக்குரூபி (எந்தை)

௩. சமமில்லாதநீயேமலரகிதன்
கசடன்உலகில்மலசகிதன்
காமிகாகல்லபிகையாணிகள்விகிதன்
விமலனேநீயும்எனர்க்குமேஅதிதன் (எந்தை)

காலைஸ்தோத்திரம்.

(*)

௱௨௭. இராகம்-தேசிகதோடி-ஆதிதாளம்.

பல்லவி.

உனக்கே நமஸ்காரனமையா-இடர்
ஒன்றும்வராமலே நன்றுசெய்தாயே (உனக்கே)

அநுபல்லவி.

தனக்கோர்நிகர் என்றுமிலாத
தயாகரனை பராபரனே. (உனக்கே)

சரணங்கள்.

௧. நேத்திரங்களைநீயெம்-மாத்திரமுமூடாமற்
காத்திருந்தாயெனை-இராத்திரிமுழுதும்
௨. சத்துருபயமின்றி-நித்திரைசெயவெனைப்
பத்திரமாயுன்கையில்-வைத்திருந்தாயே (உனக்கே)
௩. மூந்தும்அரவம்விஷ ஜெந்துக்களால்அபாயம்
வந்துகெடாமலேகர்-பந்துசெய்தாயே (உனக்கே)
௪. தீயும்வெள்ளமுங்காற்றும்பேயுமவிலங்குபல
நோயும்வராமற்காத்தாய் தாயும்தந்தையும்போல் (உனக்கே)
௫. ஏங்கவோரார்தடையின்றித் தூங்கஇராஇராமுழுதும்
வீங்கிருட்பேர்வைதனைத்தாங்கிநின்றாயே (உனக்கே)
௬. இருட்மொழிவிடியும்பொருட்டுநீபுவிதனை
உருட்டிஇராமுழுதும் புரட்டிநொந்தாயே (உனக்கே)
௭. பூதநாயகனேபிர-போதநாயகனேசங்
கீதநாயகனே-வேதநாயகனே (உனக்கே)

௯௰அ, இராகம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

ஆளாயோஎன்னையேம்பினேன்நெடு
நாளாகஉன்னையே

அநுபல்லவி.

நீளம்புவனத்தாராநேயருக்குபகாரா
நிசாரும்-இகபர-சுகமருள்-வாதா
அகம்அறுசுகுணர்கள்-புகழ்-அந-வரதா (ஆளா)

சரணங்கள்.

க. எத்தனைபதங்களுக்கெடுப்பேன்கற்பனைநிதம்
எல்லாஞ்செல்லாப்பாட்டுக்கினிமேல்இலைஆஸ்பதம்
அத்தனேஇரங்கிநீஅருள்வாய்பதம்பதம்
அன்றேநம்பழம்பாட்டனறிஆதியோநான்புதுப்பதம்
அல்லல்வினையகலநல்லவரந்தனைஆளுவாய்அஃ
நல்லவெளிப்பதங்கள்சொல்லநல்வாக்குதவிமூளுவாய்-சன
அசனித-கருணைபிர-புகபரமேசா
செகமயல்-அலகமெய்திகழ்உபதேசா (ஆளா)

உ. கனியிலும்மாத்துக்குப்பலனுண்டோஅதுபோலே
காசிலேயீ-டியேன்பேசினானீதிநாலே
இனியபயன்பிறருக்கீயினும்அதனாலே
என்னளவுநலந்தானெனக்குண்டோபுவிமேலே
இலக்கஅந்நாலின்மிசைவிலக்கியதுர்க்குணங்கள்யாவுமே-வெகு
உலக்கமுறஎன்மனமலர்க்கன்அநுதினமுமேவுமே-எந்தன்
இதய மதமயலே-முதல்-அறநீக்கி
நிதம்நிதம்.உன்திரு-பதமலர்தேக்கி (ஆளா)

௩. ஒங்கலெண்டகோடிதாங்கிடும்பரிசன்னியா
உத்தமருர்த்திகரசத்தபிரமசைதன்னியா
நீங்கருமாமகிமைவீங்கிவளர்செளஜன்னியா
நிர்குருந்துதிபுரிபக்தர்மக்கன்னிபோன்னியா
நீநெறிவிலகுபாதமஅறஅருளுட்டுவாய்-பெருங்
கோரசல்லிகபரசாதகஞானநிலைகாட்டிடுவாய்-அரு
நிதிபர-சதியெனும்விதிஉபதேசா
துதிசெய்-வேதநாயகன்-மதிஅமர்நேசா (ஆளா)

௯௩ வருட—த்துப்பஞ்சத்தைப்பற்றிப்.

பாடியது.

—(*)—

௧௩௬. இராகம்-உசேனி-திம்ராஜாதி-மட்டியதாளம்.

பல்லவி.

பஞ்சம்தீர்ஐயா-உனையன்றித்
தஞ்சம்ஆர்ஐயா. (பஞ்சம்)

அநுபல்லவி.

வஞ்சகமேநம்உலோபர்கள்போலே
மண்ணிலாமைழபொழியாமையினலே
சஞ்சலமாகித்தளர்ந்தேமென்மேலே
சாமிகதிஉந்தன்தாமரைக்காலே (பஞ்சம்)

சரணங்கள்.

௧. எட்டுநாள்பத்துநாள்பட்டினியோடே
இடையிலேகந்தைஇருகையில்ஓடே
ஒட்டிஉலர்ந்தஉடல்என்புக்கூடே
ஒருகோடிபேர்பகல்வசிப்பதுகாடே
ஊரும்இல்லாமல்-குடிக்கத்தண்
ணீரும்இல்லாமல்-அன்னமெனும்
பேருஇல்லாமல்-பசிதீர்க்க
ஆரும்இல்லாமல்
பாரில்அனேகர்பரதேசிஆனரே
ஊரில்அனேகர்உயிர்மாண்டுபோனரே (பஞ்சம்)

௨. தாரங்களையேபுருஷர்கைவிட்டார்
தந்தைதாய்பிள்ளைகளைவிலையிட்டார்
வேரும்இலையுங்கிழங்கும்சாப்பிட்டார்
வெறுங்கையராய்வெளியேபுறப்பட்டார்
வேலியும்அற்றார்-பெண்சாதிகள்
தாலியும்விற்றார்-வேலைசெய்து
கூலியும்பற்றார் பலபல
கோலிகள்-உற்றார்
தோலும்எலும்புமாய்த்தோன்றியேசோப்பினர்
பாலரும்தாயமுலைப்பால்அற்றுத்தேம்பினர் (பஞ்சம்)

௩. பஞ்சம்இதுபோலக்கண்டதிலையே
பலபேர்ஆடுமாடில்லையார்கள்உலையே
கஞ்சாம்போல்நாட்டுக்காள்ளனறும்விலையே
நாங்கள்படுந்துன்பம்நானுறுமலையே
நாங்கள்மெய்வாடி-மனமிக
உருகித்தள்ளாடிக்கண்ணீர்ஆறாய்ப்
பெருகியேஓடிப்-பிச்சைக்குக்கேட்க
வருபவர்கோடி
இரவுபகல்எங்குமோலமிடுஞ்சத்தமே
பரனேகலியொடுபண்ணினார்யுத்தமே (பஞ்சம்)

௪. ஏரிகுளம்நதியாவும்நீர்சுண்ட
எருமைக்கோடைகளெல்லாங்குமண்ட
சேரிமாடாடுகள்செத்துப்போய்வெண்ட
ஜெகமுழுதும்உக்கிராக்கினிஉண்ட
தீனர்கள்நாட-அவர்களை
ஈனர்கள்ஜாட-தங்கள்கத
வானதைமூட-அதுகண்டு
மாளிகைப்பாட
மேலிருந்திலைத்துமேலிந்தாதேறிப்பட்டடி
கோன்உலையன்றிக்குடியாவுங்கெட்டடி (பஞ்சம்)

௫. மண்ணில்அநேகர்என்கண்ணின்முன்மாய்ந்தார்
மரஞ்செடிபுல்லையுமாடுபோல்மேய்ந்தார்
எண்ணில்லாப்பேர்கள்சருகுபோற்காய்ந்தார்
இளைத்துக்களைத்துதவித்திடல்ஓய்ந்தார்
ஏங்கிடுவாரும்-களைகொண்டு
தூங்கிடுவாரும்-அன்னமுண்ணா
வாங்கிடுவாரும்-உடன்உயிர்
நீங்கிடுவாரும்
ஈங்கிந்தவண்ணம்இருண்டதுமேதினி
தாங்குமோ[illegible] (பஞ்சம்)

ஹிதோபதேசக்கீர்த்தனைகள்,

கடவுளைத்தியானிக்கும்படி வற்புறுத்தல்

கசயி, இராகம்-குந்தளவராளி-ஆதிதாளம்

பல்லவி.

மனமேநீ-ஈசனுமத்தைவாழ்த்துவாய்-தினம்
வாழ்த்துவாய்

அநுபல்லவி,

அனவரதமும்நீ-அரும்பதம்பாடிக்
கனசுகமேவிடக் கலந்துகொண்டாடி (மனமே)

சரணங்கள்.

க, வம்புவார்த்தைகளேபெரும்பாவம்
வாய்க்குச்சேதமல்லால்என்னலாபம்
எம்பிரான்திருமகிமைப்பிரதாபம்
எடுத்துப்பேசுவதுசதகாலக்ஷேபம் (மனமே)

உ, ஏகமாகஉள்ளுருகியேபரிய
இருகண்ணானந்தபாஷ்பங்கள்சொரிய
தேகபரவசமதாயன்புவிரிய
சிரகராதிகள்அஞ்சலிபுரிய (மனமே)

ங. கரும்புதின்னக்கைக்கூலியும்ஏனே
கற்கண்டோஅமுதோபசுந்தேனே
விரும்பும்பிரமானந்தமேயதுதானே
வேதநாயகன்பேர்க்கிணைசொல்லநானே (மனமே)

இதுவும் அது,

கசக, இராகம்-அடாணா-ஆதிதாளம்.

பல்லவி

மனமேநீமறவாதே-ஐயன்பதத்தை

அநுபல்லவி,

கனவிலும்-நிதமுமறு-நனவிலும்பலபல
நினைவிலும்-ஒழியாமல்-அனவரதமுமே (மனமே)

சரணங்கள்.

க. மண்ணுஞ்சராசரமும்விண்ணும்படைத்தளித்துநீக்கும்
பராபரன்தன்
வண்ணமலர்ப்படத்தைக்கண்ணும்பொழுதில்இன்பந்தேக்கும்
ஆசையிலே
உண்ணும்பொழுதும்வேலை பண்ணும்பொழுதும்-ஒன்றை
எண்ணும்பொழுதுந்துன்பம்-நண்ணும்பொழுதுமே (மனமே)

உ. கல்லும்பெருமாமும்-புல்லும்புனமுமேசஞ்சாரம்
செய்யுமந்திபோல்
தில்லும்புல்லும்திரியாவரமுஞ் செய்தென்னசாரம்
வெளியிலேதான்
செல்லும்பொழுதும்-வார்த்தை-சொல்லும்பொழுதும் பகை
வெல்லும்பொழுதும்-பின்னும்-அல்லும்பகலுமே (மனமே)

ங. அஷ்டதிசையும்ஓடிக்கெட்டலைந்தோம்புவோம்சரீரம்
இருப்பிடத்தை
விட்டகலாமல்தியானநிஷ்டைசெய்வதில்என்னபாரம்
பலவியாதி
குஷ்டம்வந்தாலுந்-துரைப்-பட்டம்வந்தாலும்-பெரும்
கஷ்டம்வந்தாலும்-பிறர்-வெட்டவந்தாலுமே (மனமே)

ச. கெடுக்கும்பவவினையை-ஒடுக்கும்வேதநாயகனுமம்
துயர்வராமல்
தடுக்கும்இகபரமுங்கொடுக்குந்தினமும்-உண்டுக்ஷேமம்
நித்திரைசெய்யப்
படுக்கும்பொழுதுந்-துகில்-உடுக்கும்பொழுதும்ஒன்றைத்
தொடுக்கும்பொழுதும்சுகம்அடுக்கும்பொழுதும். (மனமே)

இதுவும் அது.

கசஉ, இராகம்-கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

இனியாகிலுமனமே-ஐயனைநீநினையாயோதினமே
இகபெறசித்திபெறவே. (இனி)

அநுபல்லவி,

தனியிளம்பருவமுந்தாண்டிப்போனோமே
பனிபோல்வளர்ந்துகிழப்பருவமானோமே. (மனமே)

சரணங்கள்

௧. ஆசைக்கொருகறுப்புமயிரேனுமிலையே
ஐயையோகொக்குப்போல்நரைத்ததுதலையே
காசுக்குதவாக்கிழமென்பதுநிலையே
கன்னியர்க்கும்இனிநாம்கசக்கும்வேப்பிலையே (இனி)

௨. கண்கள்இரண்டும்மூக்குக்கண்ணாடிதேடும்
காலூசலாடும்ஓர்கழியைக்கைநாடும்
தண்கொள்ளும்வேரற்றுத்தந்தங்கள் ஆடும்
தடித்தாலும்நில்லாமல்யௌவனம்ஓடும் (இனி)

௩, பசிவந்தபின்னெல்லைவிதைப்பதுமதியோ
படுந்தாகம்வந்தபின்வெட்டுதல்நதியோ
விசயஞ்செய்திடச்சாகுங்காலமேததியோ
வீணேயுனக்குக்கெட்டுப்போகச்சம்மதியோ (இனி)

௪. காலந்தனக்கென்னசெய்தோம்அபசாரம்
கனத்தஆசைஅநுதினஞ்செய்யுஞ்சோரம்
மேலுமேலும்உடலில்விளைக்கும்விகாரம்
வேதநாயனைசொல்லேவேதாந்தசாரம் (இனி)

———o———

நற்குணங்களை வெளியிடல்.

———o———

௱௨௭. இராகம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி

நெஞ்சே இந்தநாடெங்குந்தேடினும்
நீசர்நமைப்போலுண்டோ

அநுபல்லவி,

அஞ்சாமல்நாளும் அகந்தைகள்நீடுவோம்
சஞ்சலப்பேயால் தலைசுற்றியாடுவோம் (நெஞ்)

சரணங்கள்.

க. தேகம்உயிர்முதல்யாவையுமே தந்த
தேவுன்தனைமறப்போம்-கரு
மேகநிழல்போல்மறையும்பொய்வாழ்வை
விரும்பிநலந்துறப்போம
மோகவிகாரத்திலேதடுமாறுவோம்
முன்ஒன்றும்பின்ஒன்றுமாகப்பொய்கூறுவோம்
ஏகமாய்எங்கும்பிறர்களைத்தூறுவோம்
எப்படிஐயையோநாங்கரைஏறுவோம் (நெஞ்சே)

உ. கோயில்குருக்கள்ஜெபதபம்யாவும்
கொடுவிஷம்போல்வெறுப்போம்-இனம்
நேயமதாகவேதூயமறைசொல்லும்
நீதிகளைமறுப்போம்
ஆயிரம்பாவம்அடிக்கடிபண்ணுவோம்
அன்னியமாதரைஆசையாய்எண்ணுவோம்
ஈயாவுலோபகுணத்தையேநண்ணுவோம்
ஏழைபசியோடிருக்கநாமுண்ணுவோம் (நெஞ்சே)

ந. உள்ளபடிநமக்கொள்ளளவெள்கிலும்
உத்தமம்தான்இல்லையே-பாவ
வெள்ளம்நிறைந்திடும் பள்ளம்தனிலே
விழுந்துகெட்டோம்நில்லையே
வள்ளலைப்போல்வெறுமாயக்கூத்தாடுவோம்
வந்தஎளியர்க்குவாசலைமூடுவோம்
உள்ளேபகையும்உதட்டன்பும்நீடுவோம்
ஊரைஅடித்தேஉலையிலேபோடுவோம் (நெஞ்சே)

௪ உற்றகலையெல்லாம்கற்றமெய்ஞ்ஞானிபோல்
ஊரைமயக்கிடுவோம்-பழு
தற்றமெய்ஞ்ஞானத்தில்பற்றுதலின்றி
அலையஉடம்படுவோம்
மற்றவரைக்கெடுத்துப்பழிவாங்குவோம்
வாழ்வோரைக்கண்டால்வயிறுப்பிவீங்குவோம்
நற்றவம்செய்யாமல்நாளெல்லாம்தூங்குவோம்
நல்வேதநாயகன்பாதத்தைநீங்குவோம் (நெஞ்சே)

—0—

மயனமயக்கந்தவிர்த்தல்.

———o———

௱௨௪. இராகம்-யதுகுலகாம்போதி அடதாளசாப்பு,

பல்லவி,

நீமலைக்காதே- நெஞ்சே- நீமலைக்காதே.

அநுபல்லவி

நேமத்துடன்ஐயன்- நாமத்தைப்போற்றிடில்
க்ஷேமத்தைக்கொள்ளுவோம்-காமத்திலேசிக்கி (நீம)

சரணங்கள்.

௧. மோகத்தையும்அவி-வேகத்தையும்தரு
போகத்தையும்உத்தி-யோகத்தையும்நம்பி (நீம)

௨. ஆட்டையும்மந்தையின்-மாட்டையுங்கட்டிய
வீட்டையுமுன்கெட்ட-கேட்டையுமேஎண்ணி (நீம)

௩. கீச்சுக்கீச்சென்றோடும்-மூச்சுப்போனால்ஒரு
பேச்சுக்காகாமலப்-பிச்சுக்குழல்நம்பி (நீம)

௪. நாட்டைக்கொள்ளையிடும்-வேட்டைக்காரன்நமன்
காட்டைக்கலைத்துயிர்க்-கூட்டைக்கொள்வான்ஐயோ (நீம)

௫. கேட்டைத்தருஞ்சோற்று-மூட்டைதனைஒன்ப
தோட்டைப்பாண்டத்தைக்கற்-கோட்டையெனநம்பி (நீம)

௬. கொண்டையிலேரத்ந-தண்டையிலேவிழிக்
கெண்டையிலேமதன்- சண்டையிலேசிக்கு (நீம)

௭. சேலையென்றும்முத்து-மாலையென்றும்தினம்
வேலைகொள்ளும்பெண்கள்- காலைத்தழுவியே (நீம)

௮. சொத்துநமக்கென்று-சுத்தலதன்றிஆ
பத்துக்குதவாத-புத்திரரைநம்பி (நீம)

௯. தாயகனைவேத-நாயகனைவிட்டு
மாயவலைபட்டுத்-தூயநெறிகெட்டு (நீம)

நற்புத்தி கூறல்.

—— ০ ——

ஏசு-இராகம்-நாட்டை-திரிபுடைதாளம்.

பல்லவி

போனதுபோகட்டும் நீ இனியாகிலும்
புத்தியாய்வாழ்மனமே

அநுபல்லவி

ஞானமில்லாத நடக்கையைத்தொட்டாயே
நம்பினஎன்னைநட்டாற்றிற்கைவிட்டாயே (போ)

சரணங்கள்.

௧. எத்தனைநாள் இருந்தாலும்-ஒருநாள்
இறப்பதுசத்தியமே-அப்போ
தென்னவரும்புண்ணிய பாவம்அல்லாமல்மற்
றெல்லாம் அநித்தியமே
பித்தஉடம்பை வளர்த்திடச்செய்கிறாய்
பிரேதவயித்தியமே-என்றும்
பேதமில்லாப்பரன் பாதம்பணிந்தோர்க்குப்
பேரின்பம் சாதித்தியமே
பத்தர்சங்கத்தைநீ நித்தம்பிரிந்தாயே
பங்கம்புரிந்தாயே-எங்குந்திரிந்தாயே (போ)

௨. தன்றாரம் அன்றிப் பரதாரந்தாய்க்குச்
சமானம்இதுதேரே-கெட்ட
தாசியைகண்டால் நமஸ்காரஞ்செய்துநீ
தப்பவழிபாரே
இன்றுநாளையென்று நாள்போக்காமல்வினை
இட்சமேதீரே-பின்னும
எந்தஉயிரையும் சொந்தஉயிரென
எண்ணித்தயைகூரே
என்றும்பணப்பேய் தன்னைநீகும்பிட்டாயே
எச்சுக்குட்பட்டாயே-சிச்சீநீகெட்டாயே (போ)

௩. நாதனைப்பெசி நிம்மாவினால் அர்ப்ப
நால் துதிபாடாதே-நாளும்
நானென்னதென் றபிமானம்பிடித்துநீ
நாடெங்கும்ஓடாதே

சாதுபாதுகம்என்னவர்தாமுக
தவம்விடக்கூடாதே-கோடி
தர்மமுனக்குண்டேதர்மம்விளக்கும்
தன்னைத்தினைத்தேடாதே
போதுமைநாயகன்தானிருக்காரே
பொன்னை அடிக்காதே-என்னைக்கெடுக்காதே (போனது)

———()———

நித்தியானந்தந்தேடல்.

———(o)———

௱௬௰-இராகம்-வசந்துஸ்தான்காப்பி-ஆதிதாளம்.

பல்லவி,

நித்தியானந்தத்தைநாடு-பா
நிர்மலசுகத்தேடு - மனமே (நித்திய)

அநுபல்லவி.

சத்தியமார்க்கந்தனிலேகூடு
சற்சனங்களுடன்உறவாடு (நித்திய)

சரணங்கள்.

௧. இந்திரஜாலம்உலகவைபோகம்
இன்றைக்கிருப்பதுவோசந்தேகம்
அந்தமின்னல்போல்அழியும்தேகம்
ஐயோ அதனுடன்உனக்கென்னஸ்நேகம் (நித்திய)

௨. தனதானியமுதலானசம்பத்து
சாசுவதமோ அதற்காயிரந்தத்து
தினமுங்கவலைவிளைத்திடும்வித்து
சீச்சீ அதனைவிரும்பல்விபத்து (நித்திய)

௩. மெய்யேஒன்றுக்கும்உதவாப்பண்டம்
மிருகாதிகள்சூழ்மாமிசகண்டம்
பொய்யோஇதற்கிங்குநித்தியகண்டம்
புண்ணியஞ்செய்யுனக் காயிரந்தண்டம் (நித்திய

௪. காண்பதெல்லாம்நிலையல்லஅநித்தியம்
காயம்இறந்திடவேண்டும்அகத்தியம்
வீண்பொருள்மீதுனக்கென்னபயித்தியம்
வேதநாயகன்சொல்லேசத்தியம் (நித்திய)

கள்ளஞானம்

——(-)——

ராகம் - இராகம்- இந்துஸ்தான்காப்பி • ரூபகதாளம்.

பல்லவி.

புண்ணியம்போல்பாபம்-மனமே
புரிக்கிறாய்நாள்தினமே. (புண்ணியம்)

அநுபல்லவி

திண்ணமாகக்குளிக்கப்போயுந்தன்மேலே
சேற்றைவாரிப்பூசிக்கொண்டுதிரும்புதல்போலே (புண்ணியம்)

சரணங்கள்,

௧. கையிலேதாம்பிடிப்பது செபமாலை
கழுத்தில்வைப்பதுவோகன்னக்கோலை
மெய்யாகத்தினமபடிப்பதுதர்மநூலை
மேற்றுமேலுமகக்குதுன்மார்க்கவேலை (புண்ணியம்)

௨. ஒருபெண்வேண்டுமென்றுகொள்வோம்சந்நியாசம்
ஊரில்உள்ளபெண்கள்மீதெல்லாம்நேசம்
பருகப்பசியில்லாதபோதுஉபவாசம்
பசித்தால்ஒருபானைப்பருக்கையுங்காசம் (புண்ணியம்)

௩. கடவுளைத்துதிப்பதுபோல்வாய்ப்பாடம்
கண்ணுங்கருத்துங்கணம்இடைக்குமோடும்
திடமாகக்கோயிற்குள்ளேதேகம்போய்க்கூடும்
சித்தமேவெளியிலேதிரிந்துதிண்டாடும் (புண்ணியம்)

௪. ஆனதலையில்வளர்ப்பதுசடைமுடியே
அனுதினமுங்கெடுப்பதாயிரங்குடியே
தானம்பிறர்அறியக்கொடுப்பதோர்கொடியே
தனியேவந்தவனுக்குத்தான்தடிஅடியே (புண்ணியம்)

௫. அடுத்திடுங்கொடுமையிற்புலிக்குதாமேலே
ஆகையினால்ஆசனம்புலித்தோலே
நடித்திடுங்குரங்குதாஞ்செய்கையினாலே
நமக்குள்குறைவுபின்புறத்தொருவாலே (புண்ணியம்)

ங. அங்கமெல்லாம்கருமேகவியாதி
அதனைமறைக்கமெய்யில் அணிவோம்விபூதி
கங்கையில்லாப்பொருள்மனையாதி
நாம்துறந்தோம்நல்லதுறவறநீதி (புண்ணியம்)

ச. ஏகஅன்னம்தள்ளிப்பிடிப்போம்ஒருசந்தி
இதரபட்சணம்களால்நிறைப்போம்தொந்தி
தேகபலம்ஒடுங்கில்விரந்தியாய்பித்தி
இடமாறல்நம்செய்கைசிரிக்குமேசந்தி (புண்ணியம்)

ரு. உள்ளத்தின் அழுக்கைகாருதேமேகழுவோம்
உடலைக்கழுவநீரில் அடிக்கடிவிழுவோம்
கள்ளத்தனமாகச்சந்நிதிமுன்னே அழுவோம்
காக்குநாயையும்கைகட்டித்தொழுவோம் (புண்ணியம்)

சா. பசியில்லாதவர்க்குச்செய்வோம் அன்னதானம்
பசித்துவந்தோரைச்செய்வோம்அவமானம்
சுசியாகப்பிறர்க்குபதேசிப்போஸ்நானம்
நார்க்குணக்கடலிலேதினஞ்செய்வோம்ஸ்நானம் (புண்ணியம்)

எ. பெருமையாஅணிவதுகாவிவஸ்திரமே
பிரதிஷ்டைசெய்வதுதர்மசத்திரமே
பரவியநமதுநார்க்குணம்சமுத்திரமே
பாடோம்வேதநாயகன்சரித்திரமே (புண்ணியம்)

பொருளாசையொழித்தல்.

—o—

ருசஅ- இராகம்-தனகவசந்தம் ஆதிதாளம்

பல்லவி.

பொருளைவிரும்பவேண்டாம்-மனமே
பொருளைவிரும்பவேண்டாம்

அநுபல்லவி.

ஒருவரிடமும்நில்லாதாரெங்கும்பறக்கும்
திருவேதநாயகன்சேவடி-துறக்கும் (பொருளை)

சரணங்கள்.

௧. பணமுள்ளவர்க்குநமன்பயப்படுவானோ
குணமுடன் அவர்களைக்கும்பிடுவானோ (பொருளை)

௨. தனவான்களைத்துயர்சார அஞ்சிடுமோ
களசுகம் அவருடன்கலந்துகொஞ்சிடுமோ (பொருளை)

௩. பார்க்கஒட்டாமலேபார்வையைக்கெடுக்கும்
வார்த்தைசொல்லாமலேவாயையுந்தடுக்கும் (பொருளை)

௪. மண்டலத்தில்நமர்குலப்பெருகுதிரா
கண்டபடிஉண்ணநாம்பகந்தனுக்கும்கெதிரா (பொருளை)

௫. ஊரில்நம்மிருப்பிடம்ஒருமுழமட்டே
பாரிலேநமக்கேன்பலமனைக்கட்டே (பொருளை)

௬. உலகில்வயிறுநமக்குள்ளதுசாணே
மலைமலையாக்குவித்துவைக்குதல்வீணே (பொருளை)

௭. சங்கையில்லாமற்பணந்தலைவெட்டும்ஒருவாள்
தங்கைவருவாள்பின்புதமக்கையும்வருவாள் (பொருளை)

௮. வித்தாரமாகப்பொருள்வேண்டுதல்தாழ்வு
செத்தால்தெரியுமேசெட்டியார்வாழ்வு (பொருளை)

௯. அருளுடன்ஏழைக்குதவாப்பணம்பிணமே
பொருள் அதைக்குழிவெட்டிப்புதைக்குதல்குணமே (பொருளை)

௰. பூதமானாலுமுன்னைப்போதுமாகாணி
ஆதலால்நமக்கேன் ஆயிரங்காணி (பொருளை)

௰௧. கொண்டைச்சேலைக்காரிதான்கிழவியாகாளோ
கொண்டைப்பூமுடித்திடும்குமரியாகாளே (பொருளை)

௰௨. வெறுங்கழுத்தாயிருந்தால்விக்குமோதொண்டை
உருத்தலை அணிபோனால்உடையுமோமண்டை (பொருளை)

௰௩. கடுக்கன்இல்லாவிட்டாற்காதுகேளாதோ
உடுப்புகள்இல்லாவிட்டால்உடம்புகீளாதோ (பொருளை)

௰௪. கந்தலை அணிந்தவள்கர்ப்பம்ஆகாளோ
விந்தைநகையுள்ளவள்மெலிந்துபோகாளோ (பொருளை

௩. பொருந்தச்செலவிடாமல் புதைத்திடும்பணமே
இருந்தென்னபோயென்ன இதில் என்னமணமே
௪. நிதிவெள்ளியாதிகள் நிச்சயம்மண்ணே
புதையல்தன்னினமென்றுபுசிப்பள்மண்பெண்ணே

செல்வச்செருக்கு.

௱௪௬-இராகம்-தேமநோகரி- ஏகதாளம்.

பல்லவி.

வீண்கர்வம் ஏன்மனமே-உனக்கு
வீண்கர்வம் ஏன்மனமே

அநுபல்லவி.

காண்பொருள்சகலமுங் கடவுள் ஆதீனம்
கனதொண்டமானுங் கோட்டியுமேசமானம் (வீண்)

சரணங்கள்.

௧. நம்முடன்பிறந்ததுண்டோஉத்தியோகம்
நமக்குமுன்னே அதுபலர் அநுபோகம்
அம்ம அதற்குக்காத்திருப்பர் அநேகம்
அனைவாக்கும்உண்டு ராஜீகதெய்வீகம் (வீண்)

௨. தாசிகள்போல்செல்வம் பலருடன்கூடும்
தனமிருந்தஇடத்தில்தரித்திரம்நாடும்
கூசாமல்யானையைக் கொசுகுமேசாடும்
குப்பைஉயர்ந்துகோபுரத்தையுமூடும் (வீண்)

௩. கனவில்கண்டகத்திரிக்காய்கறிக்காமோ
கல்லால்இரும்பால்காயங்கொண்டோமோ
தினம் அசையாமல்மண்ணில் வேர்கொண்டோமோ
சினந்துநாம்சபித்திடில் திசையெல்லாம்வேமோ (வீண்)

௪. தம்பொருளென்பர் மனைவியர்மைந்தர்பேரர்
தப்பினால்விடுவரோ தாயாதிகாரர்
வெம்பிச்சமயம்பார்த்திருப்பார்சோரர்
மிச்சத்தைச்சுருட்டுவார்மேல்அதிகாரர் (வீண்)

ய௭

௫, இடையிற்கோவணமின் றிப்பிறந்தோமெய்யே
இறந்திடுங்காலத்தும்நாம்வெறுங்கையே
உடைமைநமதுசொந்தம் என்பதுபொய்யே
ஊரார்பொருளைநாம் சுமந்தோம்ஐயே (வின்)

௬, ஜெகமுழுதும்நமக்குச்சர்வமானியமா
சிந்தித்தகாரியம்எல்லாம்ஜயமா
சுகதுக்கபேதம் இல்லாதிவ்யமயமா
துஷ்டன்இயமனுக்கு நமைக்கண்டால்பயமா (வின்)

௭, நீடுந்தங்கையுந்தமக்கையும்அதிநேசம்
நிதமுங்கைம்மாறிக்கொள்வார்அவர்வாசம்
சூடுண்டமாடுபோல்துள்ளல்ஆபாசம்
துள்ளினமாடுபொதிசுமக்கும்பிரகாசம் (வின்)

௮. தாய்வயிற்றில்இருந்துஜனித்திட்டபோது
சட்டைதலைப்பாகுடன்நாம்வந்ததேது
மாயப்பிரபஞ்சத்தின்வாழ்வெல்லாஞ்சூது
மாவேதநாயகனைமறக்கலொண்ணாது (வின்)

உலகவாழ்வைவெறுத்தல்,

௱௫௰- இராகம்-ஹிந்துஸ்தான்காபி-ரூபகதாளம்.

பல்லவி,

வாழ்வைநம்பாதே-மனமே-வாழ்வைநம்பாதே

அநுபல்லவி,

தாழ்வில்லாதநமதுஸ்வாமி
தாளைத்தேடு பாடுபூமி

சரணங்கள்.

௧, தேகமாம்ஸகூட்டை-பல
ஜெந்துவுக்கும்நல்லவேட்டை-அதில்
ஜீகா அனந்தம்ஓட்டை உயிர்
ஓடிடஎத்தனைபாட்டை

உ, இன்றைக்காருவார்நாடு-நாளை
எடுப்பர்கையிலேஒடு-உடல்
ஒன்றுக்குதவாகூடு-இதை
உற்றுப்பார்த்தால்-வெட்கக்கேடு-புவி (வாழ்க்கை)

௩, பெண்டுபிள்ளைக்கென்னவாட்டம்-நம்மைப்
பிடுங்கித்தின்பதில்நாட்டம்-கையில்
உண்டாகும்போதுகொண்டாட்டம்-செல்வம்
ஒய்ந்தால்சகலருமோட்டம்-புவி (வாழ்க்கை)

௪, இந்தஉலகத்திற்பிறந்தார்-முன்னம்
எத்தனையோபேர்கள்இறந்தார்-பெற்ற
தந்தைதாய்பாட்டரும்புறந்தார்-நாலு
தாரங்கள்போய்நம்மைமறந்தார்-புவி (வாழ்க்கை)

௫, இன்றுபல்லக்கினிற்போவார்-நாளை
எடுக்கும்ஆள்களும்ஆவார்-நரர்
என்றவர்யாவருஞ்சாவார்-மதி
ஈனர்நரகத்திலேவார்-புவி (வாழ்க்கை)

௬, கூத்தில் அரசனைப்போலே-வேஷம்
கொண்டவர்க்குண்டோசெங்கோலே-புவி
சாத்தியநாட்கசாலை-அந்தச்
சாலையில்நாம்எந்தமூலை-இந்த (வாழ்க்கை)

௭, வண்டியும்ஓடத்திலேறும்-ஓடம்
வண்டியிலேறும்நாள்தோறும்-நாம்
கொண்டபொருள்கள்கைம்மாறும்-வேதம்
கூறுஞ்சொல்லநிறைவேறும்-புவி (வாழ்க்கை)

௮, எண்ணிக்கையில்லாமல்இங்கேமுன்னம்
இருந்தவரெல்லாம்எங்கே-நாமும்
நண்ணிப்போகவேண்டும்அங்கே-வேதே
நாயகன்பாதம்நம்பங்கே-புவி (வாழ்க்கை)

—o—

உடலை வெறுத்தல்,

ருக-இராகப்-ஹிந்துஸ்தான்காபி-ரூபகதாளம்

பல்லவி,

உடலைநம்பாதே- மனமே

அநுபல்லவி.

குடலுந்தசையும்எலும்புமநரப்பும்
கொழுத்துப்பழுத்துப்புழுத்தநிரம்பும் உடலை

சரணங்கள்,

௧, இந்திரியம்மலமூத்திரம்-தசை
இரத்தம்நிறைந்தபாத்திரம்-பாச
பந்தப்பேய்வளர்க்ஷேத்திரம்-வெறும்
பவந்தநாடகசூத்திரம்-இந்த உடலை

௨, ஆசைப்பட்சியின்கூடு-பல
அசுத்தஞ்சேர்குப்பைமேடு இதை
ஏசிப்போபோவென்னும்வீடு-கிட்ட
எட்டிவாவாவென்னுங்காடு-இந்த உடலை

௩, கண்ணிற்பீளைகள்வடியும்-இரு
காதிற்குறும்பிபடியும்-சளி
வண்ணமூக்கில்வந்திடியும்-நல்ல
வாயும்எச்சிலாய்முடியும்-இந்த உடலை

௪, பயனின்றிவிழுமட்டை-கொடும்
பாம்புகழற்றுஞ்சட்டை-போலே
உயிர்போனால்வெறுங்கட்டை-இதை
ஊற்றுப்பார்த்தால்லொடலொட்டை-இந்த உடலை

௫, காகங்காய்க்கரிக்கூட்டம்-பல
கழுகுக்குமநல்லஊட்டம்-கரு
மேகநிழல்போலஓட்டம்-இது
லைப்பொம்மலாட்டம்-இந்த உடலை

௬. எத்தனைபேர்புவியாண்டார்-அவர்
எல்லாருமுன்னேமாண்டார்-இங்கே
செத்தவரில்எவர்மீண்டார்-தெய்வ
சித்தம்ஒருவருந்தாண்டார்-இந்த உடலை

௭. மோடியேன்ஒருக்காலோ-உடல்
முழுதும்எலும்புதோலே-அதில்
நாடிஒடுங்கினலே-பின்பு
நமக்கிங்கேஎன்னவேலை-இந்த உடலை

௮. கணவன்தெய்வமென்பாள்பாரி-அவள்
காரியத்திற்கெட்டிக்காரி-செத்த
பிணமுன்வருவாளோநேரில்-நாம்
பிரிந்ததற்கல்லோஒப்பாரி-இந்த உடலை

௯. கிருமிகட்குபகரணந்தசை
கிழிந்துவடியும்இரணம் சிறு
கருமமேற்கொள்ளுந்திரணம்-இது
கரணந்தப்பினல்மரணம்இந்த உடலை

௰. வேதநாயகன்கூறும்-சொல்லை
மீறினல்நலமாறும்-பல
காதந்துர்க்கந்தம்நாறும்-பித்தம்
கபமலஞ்சலம்ஊறும்-இந்த உடலை

பணதூஷணை,

கருஉ-இராகம்-சங்கராபரணம்-ரூபகதாளம்,

பல்லவி,

பணமேஉன்னல்என்னகுணமே-தண்டம்
பண்ணினேன்சற்றுஎன்கண்ணின்முன்னில்லாமே பணமே

அநுபல்லவி

மணமில்லாதமோகங்குரோதத்துன்
மார்க்கமூர்க்கமும்யார்க்குமேபோதிக்கும் பணமே

சரணங்கள்.

௧. தேடிஉனைவைத்துமூடியவர்க்குநீ
நேர்க்காட்சிதருவாயோ-இனி
நாடியமன்வந்துசாடிடும்போதுநீ
நானென்றுமுன்வருவாயோ-இனி
கூடியபேர்கள்குடியைக்கெடுப்பாயே
கொல்லச்சொல்லிப்பின்னுங்காட்டிக்கொடுப்பாயே
ஓடிஓடிஅறப்பரைப்போயடுப்பாயே
உத்தமரைக்கண்டால்ஒட்டவெடுப்பாயே பணமே

௨. மத்தியில்உன்னைப்படைத்ததல்லால்முனி
வரும்போதுகூடவந்தாயோ-இடை
சித்தியுஞ்சத்தியுமநித்தியங்கைகூடச்
சிலாகாசனம்நீதந்தாயோ
புத்தியிருக்கும்இடம்விட்டேநீங்குவாய்
பொய்யும்புரட்டும்வுள்ளவிடத்தோங்குவாய்
எத்திசையுங்கெடுத்துப்பழிதாங்குவாய்
ஈயாதவாகையகப்பட்டுத்தூங்குவாய் பணமே

௩. மண்ணில்உனைநகர்பண்ணினதன்று
மனிதரைநீபண்ணினையே-உயர்
விண்ணினைமண்ணினைப்பண்ணினேனும்நேசம்
விலகச்செய்சத்துருநீயோ
எண்ணரிதானஇடமெங்கும்ஓடுவாய்
இந்திரசாலஞ்செய்துவிளையாடுவாய்
வண்ணநார்கள்மனக்ககூணைமூடுவாய்
வைத்துப்புதைப்பவர்வாயில்மண்போடுவாய் பணமே

௪. வஞ்சகமாயப்பிரபஞ்சமெல்லாம்நீ
விளைத்துச்செய்வாய்கொடுங்கோன்மை
நஞ்சம்நிகருனைநெஞ்சம்எண்ணுதமெய்ஞ்
ஞானிகட்கல்லவோமேன்மை
பஞ்சமாபாதகங்கட்குநீஆலயம்
பாரில்துன்பமென்பதெல்லாம்உன்தன்மயம்
மிஞ்சஉனையுடையோர்க்கொழியாய்ப்பயம்
வேதநாயகன்மேலுனக்குண்டோ பணமே

பரஸ்திரீகமனம் விலக்கம்,

—(-)—

௱௫௩- இராகம்-கமாஸ்-ஆதிதாளம்.

பல்லவி,

மாதரைநினையாதே-நெஞ்சே மாதரை

அநுபல்லவி.

பூதலமேல்பெரும்-பாதகமும்விப
ரீதமுமேவரும்-ஆதலினால் மறு மாதரை

சரணங்கள்,

௧, அருமஞ்சட்பூச்சல்லவோமுகக்காந்தி
அடிக்கடிபெண்கள்நிறமாறும்பச்சோந்தி
ஒருமையாஅவர்களைவிரும்புறல்பிராந்தி
உடற்குட்புகுந்துபார்த்தால்வருமவாந்தி மாதரை

௨, முன்னழகும்பின்னழமேபட்டு
முகஅழகானதுநெற்றியிற்பொட்டு
அன்னநடையென்பதுகவிஞர்கள்கட்டு
அருகிலில்லாமற்பறந்திடுஞ்சிட்டு மாதரை

௩, மரீத்திசிமாதர்கள்சுகம் அரைட்சணமே
மறுநிமிஷத்தில்உண்டாந்துன்பாணமே
பிடித்திடில்மலஜலம்எலும்புதோல்பிணமே
பிராணன்போனால்நரிநாய்பிடுங்கிடுமே மாதரை

௪, மேனிமுழுதும்வெளிவேஷத்தின்தளுக்கு
மினுக்கெண்ணெய்பூசியேகாட்டுவார்சளுக்கு
ஈனம்அறவேதினந்தண்ணீர்முழுக்கு
இல்லாவிடில்கப்பல்ஏற்றலாமழுக்கு மாதரை

௫, இடையில்மயக்குவதுசாலியன்சேலை
இருகாதில்சொலிப்பதுதட்டான்கைவேலை
கடையிலேவிற்பதுகொண்டைப்பூமாலை
கன்னிக்குச்சொந்தமெல்லாம்கடைமருந்தாலே மாதரை

௬, கன்னியர்விழிஉயிர்பிளந்திடும்அம்பு
கனதனம்நமன்குழல்உனைக்கட்டுகதும்பு
அன்னியமாதர்கள்விஷமெனநம்பு
அவருடன்பேசுவதேபெரும்வம்பு மாதரை

௭, இதமாகவேமணஞ்செய்தசீமாட்டி
இகபரம்இரண்டுக்குமேவழிகாட்டி
இதரமின்னார்களைச்சேர்வோன்காமாட்டி
என்றைக்கும்அவனுக்குமூத்தவள்பேட்டி மாதரை

௮, என்றுங்காமாதுரர்க்குரோகங்கள்நிலையே
ஈளுறும்போட்டக்கையில்வேண்டுவேப்பிலையே
அன்றுகொண்டவன்அறிந்தால்வருங்கொலையே
அற்பசுகத்திலவரும்ஆபத்துவல்லியே மாதரை

௯, கழுவிவாசனைஊட்டாவிடில்கெட்டவீச்சு
காதவழிஅடிக்கும்இதுகிசப்பேச்சு
தொழும்அழகென்பதெல்லாம்யேற்பூச்சு
தோகையர்கிழமானால் கனஏச்சு மாதரை

௰, அழகழகென்பதெல்லாம்வெறும்ஜாலம்
அணியுந்துணியும்போனால்அலங்கோலம்
அநுதினம்சுகத்தினைவெறுப்பதுசீலம்
வேதநாயகன்சொல்அநுகூலம் மாதரை

இதுவும் அது.

௱௩௪-இராகம்-தெள்ளியந்து-ஆதிதாளம்

பல்லவி,

மனமேஉனக்குமகாசுகிர்தம்-மறு
மாதரைநினையாதே மனமே

அநுபல்லவி,

தினமென்சொற்படிகேட்டால்உனைத்துதி
செய்வேன்மறுத்தடியில்வைவேன்வைவேன் மனமே

சரணங்கள்

௧. சட்டி முகத்தைச்சந்திரபிம்பமென்றும்-வெறும்
சதைக்கட்டிகளைத்தங்கக்கும்பமென்றும்
முட்டிகால்களைச்சொர்ணஸ்தம்பமென்றும்-மாதர்
முன்கமலைக்குஞ்சப்பாக்கம்பமென்றும்
மொட்டைத்தலைக்குமுழங்காலுக்கும்பிணைத்தே
முடிந்தாயே-வினை-படிந்தாயே-கெட்ட மனமே

௨. உச்சிட்டத்தை அமிர்தக்கட்டியென்றும்-நாறும்
ஊத்தைவாயைப்பவளப்பெட்டியென்றும்
மச்சம்பிளவடியுந்திட்டியென்றும்-சீத
வாங்குநவை அபூர்வசிட்டியென்றும்
பிச்சைக்காரன்கந்தையைமெச்சிக்கொள்வதுபோல்
பிடித்தாயே-பொய்யைப்-படித்தாயே-கெட்ட மனமே

௩. செட்டிகளால் அல்லவோஇடையழகு-எண்ணெய்ச்
சொக்கார்களால் அல்லவோ-சடையழகு
தட்டார்களால் அல்லவோநடையழகு-மாதர்
தம்மழகெல்லாம் பலகடையழகு
குட்டிச்சுவரில்முட்டவெள்ளெழுத்தோநீ
குதித்தாயே-பெண்ணைத்-துதித்தாயே-கெட்ட மனமே

௪. சொத்தைப்பற்களை முத்துச்சரங்களென்றும்-மிகச்
சூம்பியதோளை மூங்கில்மரங்களென்றும்-
சித்தமாகக்கமலங்கரங்களென்றும்-நாறும்
சிக்குமயிரைச்சலதரங்களென்றும்
பித்தன்போல்வர்ணித்துவேதநாயகன் அடி
பிரிந்தாயே-துன்பம்-புரிந்தாயே-கெட்ட மனமே

——(0)——

இதுவும் அது

---

௧௫௫ இராகம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி,

பெண்ணாசையே பெரும்பித்து-அதில்
பிரமிப்பதெல்லாம்விபத்து பெண்

அநுபல்லவி,

கண்ணைவலைவலைபூட்டி அற்பசுகம்
காட்டிப்புருஷரை வாட்டிவதைக்கும் பெண்

சரணங்கள்,

௧, கலகலெனு அசைப்பார்அவர்தண்டை
காட்டுமிருக மயிரே கொண்டை
உலகைமயக்கும் அவர்சேலைக் கெண்டை
உற்றுப்பார்த்தால் நன்மையேதவர் அண்டை — பெண்

௨, கேவலம் அங்கமெல்லாம் பிணநாற்றம்
கிறுகிறெனமயக்கந்தலைக்கேற்றம்
ஓவியமேனிமினுக்குப் பொய்த்தோற்றம்
உள்ளேதிரும்பிப் பார்த்தால் முழுமாற்றம் — பெண்

௩, கட்டிகட்டியாகக் கண்பீளைசாரும்
காதிற்குறும்பி சளிஎச்சல்சேரும்
கொட்டும்வியர்வைதலைப் பேனும்ஈரும்
கும்பிநாற்றமாங்குளித்திட்டநீரும் — பெண்

௪, மண்ணில்எலும்புபோல் அல்லவோமாது
மற்றதெல்லாஞ் செட்டிதட்டார் செய்குது
பெண்ணில்லாவிட்டால் பிழைப்பவர்க்கேது
பெண்ஜெபமும் அவர்போனால் செல்லாது — பெண்

௫. மண்ணிற்பரஸ்திரியைச்சேரும்நிமித்தம்
வாழ்வுஞ்சுகமுந்தனமும் அநர்த்தம்
எண்ணில்லாத் துன்பமும் புண்களும்சித்தம்
ஈனழும்பும்கோற்சவம்நித்தம் — பெண்

௬. இரவிற்கூத்தாடிகள்வேஷம்எடுப்பார்
இருட்டில்எவருமயங்கிக் கொடுப்பார்
தரையில்மின்னார் பகல்வேஷம் தொடுப்பார்
ஜாலவித்தைசெய் துலகைக் கெடுப்பார் — பெண்

௭, உண்டால்விஷம் வெட்டினாற் கொல்லுங்கத்தி
உன்னினோர் கண்டோரைக் கொல்லும் பெண்சத்தி
அண்டாமல் ஆடவர் ஒடுதல்புத்தி
அமர்வேத நாயகன் சொற்கேட்டால்சத்தி — பெண்

——(0)——

உ ய் யு ம் வ ழி

——(o)——

கருசு. இராகம்-சங்கராபரணம்-ரூபகதாளம்

பல்லவி.

உய்யும்வகையிதுநெஞ்சமே-வேறு
செய்யும்உபாயங்கள் வஞ்சமே உய்யும்

அநுபல்லவி.

மையல்தரும்மலங்களைநீக்கு
ஐயன்பொற்பாதத்துக்குன்னை ஆளாக்கு உய்யும்

சரணங்கள்.

க, நிந்தைதகலந்தவாசையே-நாளும்
நிக்கிரகஞ்செய அப்பசாசையே
எந்தவிதத்திலுமாசையே-ஒழித்
தென்றெண்ணுஞ்செய் தெய்வபூஜையே உய்யும்

உ, நான்எனதென்றபிமானமே-மிக
நாட்டுவதுமதியீனமே
ஏன்உனக்கிந்த அஞ்ஞானமே-நீதான்
என்றுஞ்செய்வாய்ஜெபத்தியானமே உய்யும்

ங, பெண்டுசெய்பண்டபதார்த்தமே-பெரும்
பிடையாம் அந்தச்சங்காத்தமே
கெண்ட அறந்தான்யதார்த்தமே-அதைக்
கூடில்உண்டாம்பரமார்த்தமே உய்யும்

ச, மையல்மிகுந்துகெட்டாதே-பாவி
வாழ்வென்பதுவெறும்சூதே
நையும்மெய்யன்புவிடாதே-வேத
நாயகனைநிதம்ஓதே உய்யும்

நெஞ்சொடுபிணங்கல்

கஉ௭. இராகம்-அசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

அநுதினம்இந்தப்படி-உன்னுடன்போர்கொடுக்க
யாராலாகும்நெஞ்சே

அநுபல்லவி.

களபக்தரோடுகள்ளாய்-கர்மானுபக்தர்கள்ளாய்
தினமும்என்னுயிரொடுகொள்ளாய்-சீசீஇதென்னபின்னாய் அ

சரணங்கள்.

க. அனந்தமுறைநான் சொல்லக்கேளாய்
அகந்தை அழியாயோ
தினந்தினமும் நீபுரிந்திருக்குந்
செய்கைகள் ஒழியாயோ-நீ
நினைக்கிறதே நீடமா-உன்றன்
நிதமுஞ்சங்கடமா
பிணக்ககலைக்கு நீஇருப்பிடமா
செய்வதெல்லாம் ஹடமா அநுதி

உ. படித்ததனிவேதந்தான் சொல்லிய
படிநடவாயோ
கடித்தவிஷம் ஒப்பாகியவினையின்
கடலைக்கடவாயோ-நீ
பிடித்ததேபிடியா-ஆசை
பேயுன்னிடங்குடியா
உடுத்தமாயைக் கரிப்பிதியடியா
உன்தொழில் இப்படியா அநுதி

௩. கடந்தமேலோர் பகர்ந்தமொழியைக்
கனவிலுமறியாயோ
நடந்தபொய்யாகிய வழிநீங்கி
நல்வழிபிடியாயோ-நாம்
அடைந்தஉடல்சதமா-புவிவாழ்
வானதுசாசுவதமா
தொடர்ந்துவேதநாயகன் ஹிதமாய்ச்
சொல்லியுமேமதமா அநுதி

துர்க்குணம்போன்றநற்குணங்கள்

௩௫-அ இராகம்-தன்னியாசி-ஆதிதாளம்.

பல்லவி.

செய்யவேண்டுமொருல் நீஅநுதினம்
செய்-செய்-செய்-மனமே செய்ய

அநுபல்லவி.

ஐயோவெறுத்தாய்நற்செய்கைகளையே
ஆசையிற்பின்சொன்னதுர்ச் செய்கைகளையே செய்ய

சரணங்கள்.

௧. எதிர்உதவிகருதி ஈயாலோபம்
ஈனர்கள்காற்றடிக்கினும் அதில்சோபம்
வதிநிதிவினைமேல் தீராக்கோபம்
வருவதுவரட்டும்இப்படிப்பாபம் செய்ய

௨. பரன் அடிமீதில் அடங்காமோகம்
பலதெய்வங்களைப்பணியாத்துரோகம்
இரவும்பகலும்புண்ணியந் தன்னில்இராகம்
இப்படியேதான்பாபம் அநேகம் செய்ய

௩. பலருக்கும்உதவிசெய்வதில்பலவந்தம்
பரஸ்திரீக்கிடம்ஈயாத நிர்ப்பந்தம்
தலமிசைபிறக்கிடர் செய்வதில்மந்தம்
தளராஇவ்வகைதோஷம் அனந்தம் செய்ய

௪. பொய்கொலை களவுகள் செய அறியாமை
புனிதர்போலநாம் இலையென்னப் பொறாமை
மெய்விலகிய அவதூறுதராமை
மேன்மேல் இப்படியே பலதிமை செய்ய

௫. நற்குணந்துர்க்குணம் எனச்சொலும்அசத்தியம்
தன்காரியம்பேணுதஅபத்தியம்
நற்கதிபெறுவதில்ஒழியாப் பைத்தியம்
நானிலத்திவ்விதமான துஷ்கிருத்தியம் செய்ய

௬. நன்மைதின்மைகள் மேல்காமக்குரோதம்
நாளும்அச்செய்கையிலே பிடிவாதம்
தன்மநிமித்தம் சர்வலோகவிரோதம்
தளராதிவ்வாரே அபராதம் செய்ய

௭. ஆட்கொள்வேதநாயகன் பாதமுத்தாரம்
அணியெனஉனக்குரைத்தேன் சவிஸ்தாரம்
கேட்கிலை ஆதலிற்கொடுத்தேன் உத்தாரம்
கெட்டசெய்கைகள் உனதிஷ்டப்பிரகாரம் செய்ய

மனவஞ்சகத்தைப்பற்றி.

———o———

௱௫௬-இராகம்- பந்துவராளி ஆதிதாளம்

பல்லவி

புரட்டெல்லாம்எங்கே படித்துக்கொண்டனை
புகலுவாய்மனமே இந்தப் புரட்

அநுபல்லவி.

முரட்டுமார்க்கம் சென்றிழைகிறாய்-அணு
முனையின்உள்ளும் நீநுழைகிறாய்-இந்தப் புரட்

சரணங்கள்.

௧. பொருளைத்தந்ததன் அருளைமறந்து
பொருளுக்கேஉபகாரம்-செய்யும்
மருளர்போல் அற்பப் பொருளைவிரும்பி
வான்பானஉபகாரம்-தன்னை
மறந்தாய்-என்னைத்-துறந்தாய்-பொன்னைச்
சிறந்தாய்-பின்னைப்-பறந்தாய்-பாரில்
உருளில்லாமல் தேரோட்டுகிறாய்-பானு
உதயம்இரவிற் காட்டுகிறாய்-கன
இருள்கொள்பாசத்தில்மாட்டுகிறாய்-நாளும்
என்னைப்பம்பரம்-ஆட்டுகிறாய்-இந்தப் புரட்

௨. மண்டலந்தனில்கண்ட பொருளெலாம்
வண்மையென்றுநீ குறித்தாய் பிர
சண்ட ஆசைக்கள் உண்டதாலே நீ
தலைமயங்கியே வெறித்தாய்-தனத்
தாசி-எனப்-பேசி-விலை

பூசினையே-சீசீ-பார
அண்டங்களைக்கை அடைகிறாய்-கால்போல்
ஆழ்கடல்மீதும் நடக்கிறாய்-பல
எண்டருவின்னுங்கடக்கிறாய் புண்யம்
என்றால்எழாமற் கிடக்குகிறாய்-இந்தப் புரட்

௩. என்னசொல்லினும் உன்னல் செய்யாயுனக்
கேளிந்தத் தலையாட்டை-மாளும்
முன்னமேஐயோ பின்னஞ்செய்கிலை
மூளுந்தீவினைத்திரட்டை இது
மோசம்-எய்தும்-நாசம்-லவ
லேசம்-விசு-வாசம்- இன்றி
அன்னம்போலெங்கணும்பறக்கிறாய்-கல்வின்
ஆவிடத்தும்பால் கறக்கிறாய்-சுக
நன்னலந்தனைத் துறக்கிறாய்-வேத
நாயகன்சொல்லை மறக்கிறாய்-இந்தப் புரட்

———o———

மனமயக்கம்.

———o———

௱௪௰-இராகம்-வசந்தா-ஆதிதாளம்

பல்லவி

மயங்கிறாய்மனமே-ஐயோவீணே மயங்

அநுபல்லவி.

மயங்கிறாய்மனமே-வாழ்விசொப்பனமே
மாறாமல்தினமே ஐயோவீணே மயங்

சரணங்கள்.

௧. சுகனைமோட்சத்-தியாகனைக்கருணைப்பிர
வாகனைப்பணியாமல்-ஐயோவீணே மயங்
௨. எண்ணியபெரியோர்-நண்ணியபொருளாம்
புண்ணியம்புரியாமல்-ஐயோவீணே மயங்
௩. நேயம்உள்ளோர்கள்-தாயகன்வேத
நாயகனைத்தொழாமல் ஐயோவீணே மயங்

காலதூஷணை.

———()———

௱௬௧-இராகம்-தர்பார்-ஆதிதாளம்

பல்லவி,

ஓகோகாலமே-உன்போலெவர்க்-குண்டிந்திரஜாலமே ஓகோ.

அநுபல்லவி

போகமாகவெ அண்டம்பூவெல்லாமேய்வாய்
பூனைபோலிருந்துபுலியைப்போற்பாய்வாய் ஓகோ

சரணங்கள்,

௧. ஊரெல்லாந்தூங்கினும் உனக்கில்லை தூக்கம்
ஓயாமலோடிவாயுனக்குண்டோதேக்கம்
ஆர்கெட்டாலுனக்கென்ன அறியாய்நீநோக்கம்
அதிகவட்டிகள்கொடுப்பவர்க்குன்மேல்வக்கம் ஓகோ

௨. பாலரைக்கிழவராய்ப்பண்ணியேகெடுப்பாய்
பகைமதன்ஜெயங்கடவாமலேதடுப்பாய்
காலிரண்டுடையார்க்குங்கோலொன்றுகொடுப்பாய்
காலனுக்குயிரெல்லாங்காட்டியேவிடுப்பாய் ஓகோ

௩. ஆயுதமில்லாமல்யாவையுமறுப்பாய்
அழுதாலுந்தொழுதாலும் அகன்றெம்மைவெறுப்பாய்
சாயுந்திராசுபோலேசகலமுந்நிறுப்பாய்
சகலஉயிரையுஞ்சட்டியிலிட்டுவறுப்பாய் ஓகோ

௪. கல்லைப்போலுடம்பையும்வில்லைப்போல்வளைப்பாய்
கணந்தினம்மதிவாரம் ஆண்டெனக்கிளைப்பாய்
வில்லைப்போல்வதனத்தைச்செல்லைப்போல்துளைப்பாய்
வீங்கழகியர்க்குகடுதவாங்குருவிளைப்பாய் ஓகோ

௫. துக்கமுற்றவர்க்குநீதொலையாமற்கிடைப்பாய்
சுகமுள்ளபேர்க்குநீதுரிதமாய்நடப்பாய்
விக்கலும்இருமலும்வேளையுங்கொடுப்பாய்
மிஞ்சுங்கருமயிரைப்பஞ்சுபோற்கெடுப்பாய் ஓகோ

௪. மலைகள்மண்டபங்களைவலிமையாஇடிப்பாய்
வாரிஎழுகடலும்வற்றிடக்குடிப்பாய்
தலைதடுமாறநீதான்கொள்ளைஅடிப்பாய்
தனிவேதநாயகன்தயையாலேநடிப்பாய் (ஓகோ)

உத்தியோகசம்பந்தக்கீர்த்தனைகள்.

நியாயபரிபாலனஞ்செய்ய வரம்வேண்டல்.

௱௬௨. இ-ம்-சாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

நானே-பொது-நீதிதானேசெலுத்திட
நல்வரம்அருள்கோனே (நானே)

அநுபல்லவி.

தானேயாகியசாக்ஷாத்காரமே
தேனேஅமுதமேதிவ்யஞானசாரமே (நானே)

சரணங்கள்.

௧. வட்டஉலகில்யாரும்பொதுவில்அநுபவிக்கும்
மழைகால்வெயில்பூதாதிபோலவே
இஷ்டர்அநிஷ்டர்தமர்எளியர்செல்வர்பெண்புமான்
என்னும்பேதம்உன்னுமல்லலவே
இட்டமாச்சரிநீசெலுத்தலின்மனம்காட்டி
சிறியவழக்கும்பெருவழக்கெனத்திண்ணம்நீட்டி
சட்டசாஸ்திரங்கள்மிகஉணர்ந்தறிவினைத்தீட்டி
சகலஉயிர்களும்எந்தன்னுயிர்போல்பாராட்டி
சிட்டபரிபாலனனெனுமுடிசூட்டித்
தீயர்மொழிபுகாமற்செவிவழிபூட்டிக்
கொட்டஞ்செய்துட்டர்கண்ணில்விரலைவிட்டாட்டிக்
கூகூஎனப்பொய்கதறும்படிமாட்டி (நானே)
௨. அருணன்சந்திரனிலைநீங்கினுந்தரைமேல்கீழ்
ஆயினும்அறத்தைநான்விட்டாமல்
வருணன்போற்பொருள்மாரிவழக்கர்பெய்யினும்அதை
வாங்கயாசகன்போற்கைநீட்டாமல்

வரும்வழக்கர்மனத்தைதவன்சொற்களாற்சுடாமல்
மற்றக்கீழ்உத்தியோகஸ்தர்வம்புக்கிடங்கொடாமல்
அருமடியால்வழக்காராச்சியில்பின்னிடாமல்
அப்பன்பாட்டன்சொன்னாலும்அறநெறிகைவிடாமல்
தருமதேவதைஞாயாஸ்தலந்தனில்நடிக்கத்
தப்புச்சாக்ஷிகள் கிடுகிடென்னவேதுடிக்க
இருமையகல்அநீதியேஓட்டப்பிடிக்க
இலஞ்சம்வாங்கிகள்வெட்கத்தால்உயிர்மடிக்க (நானே)

௫. அந்தவிலங்குமுடங்கூன்குருடூமைமுத
லான்ஜென்மம்வராமல்தடுத்தாயே
முந்தமானிடஜென்மந்தந்துமன்றிப்பின்னும
முன்சிபதிகாரமுங்கொடுத்தாயே
இந்தஉபகாரத்தைஇதயத்தெழுதித்தேக்கி
எவர்க்கும்பெரியவனென்னும்அகங்காரம்நீக்கி
நந்தாவிளக்கம்போல்நவையிருளினைப்போக்கி
நான்செய்தநீதிநூற்கென்நடையைத்திட்டாந்தமாக்கித்
தொந்தமெனவேவிளையாடிஉண்டுதூங்கிச்
சுகஉடலம்வளர்க்குஞ்சோம்பினைநீங்கி
விந்தைநன்முயற்சியில்மேன்மேலோங்கி
வேதநாயகன்நல்லோனென இசைதாங்கி (நானே)

துர்வழக்காளிகளைப்பற்றி.

௱௪௫. இராகம்-சௌராஷ்டிரம்-அடதாளசாப்பு.

பல்லவி.

இந்தவழக்குக்கெல்லாம்நாம்தானா கோர்ட்டில்
வந்தவனெல்லாம்நமக்கெஜமானா. (இந்த)

அநுபல்லவி.

நந்தன்வலியச்சண்டைபிடித்தானும்அந்த
நாகனைத்திட்டி அவன் அடித்தானும். (இந்த)

சரணங்கள்.

௧. தந்தைதுர்மார்க்கஞ்செய்துகெட்டானும்-பிள்ளை
தாரங்களைத்தெருவில்விட்டானும்
முந்தஅதிகக்கடன்பட்டானும்நிலம்
முழுதுந்துர்விநியோகம்இட்டானும் (இந்த)

௨. அண்ணன் தன் தம்பிகளைவெறுத்தானும்-அவர்க்
காஸ்திபாகங்கொடாமல் மறுத்தானும்
கண்ணன்வயலைப்பொன்னன் அறுத்தானும்-கடைக்
காரன்கெட்டசரக்கைநிறுத்தானும் (இந்த)

௩. ககனப்பூவந்திமகன் கொய்தானும்அதைக்
கண்டுகுருடன்அம்பால்எய்தானும்
ஜெகமிசைஊமையனும் வைதானும்-அதைச்
செவிடன்கேட்டுநகை செய்தானும் (இந்த)

௪. துங்கன்வாதியைக்கண்டு திரித்தானும்-சிங்கன்
தும்மிஇருமிகெட்டி முரித்தானும்
தங்கள்இரண்டுகையும் விரித்தானும்-அந்தச்
சாந்தனுந்தன்முகத்தைச்சுரித்தானும் (இந்த)

௫. கரமிலான்வாதியைப் பிடித்தானும்-இரு
காலிலான்உதைத்துடைத் திடித்தானும்
சிரமில்லாதவன்கடித் தடித்தானும்-பதம்
தினம்வேதநாயகன் படித்தானும் (இந்த)

உத்தியோகசங்கடம்.

௱௬௪. இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

அப்பாஇதென்ன அதிகாரம்-ஐயோ
எப்போதும்பக்திசெய்ய இல்லையேநேரம். (அப்பா)

அநுபல்லவி.

சுப்பையரோஅபத்தமூட்டை-அந்தச்
சுந்தரையர்வழக்கிலே தொளாயிரம்ஓட்டை
அப்பையர்கற்பிப்பார் பொய்ச்சீட்டை-அந்த
அனந்தையர்கட்டுவார்ஆகாசக்கோட்டை. (அப்பா)

சரணங்கள்.

௧. சிலர்கேட்பார் கற்பகச்சோலை-வேறு
சிலர்கேட்பார்நமன் அணுகாமலேஓலை
பலர்கேட்பார்நூறுபுலிப்பாலை-அல்லும்
பகலும்உலகில் நமக்கிதுதானோவேலை. (அப்பா)

௨. அண்டப்புரட்டன் அந்தவாதி-அகி
லண்டப்புரட்டன்அப்பா அவன்பிரதிவாதி
சண்டப்பிரசண்டன்நியாயவாதி-நாளும்
சகஸ்திரப்புளுகன்சாக்ஷிக் காரனெனும்தியாகி. (அப்பா)

௩. எப்போதும்பொய்வழக்கர் கூட்டம்-அவர்க்
கிந்திரலோகங்கிடைத்தாலும் இன்னமுந்தான்வாட்டம்
தப்புச்சாக்ஷிகள்வாய் நீட்டம்-பொய்ச்
சத்தியம்ஆணையென்றால் அவர்க்குக்கொண்டாட்டம் (அப்பா)

௪. பேராசைக்காரன் குப்பன்செட்டி-அவன்
பிரயாதிகளிடத்தும் வாங்குவான்வட்டி
சோரன்வழக்கிலே சிங்கக்குட்டி இவர்
சூதால்வேதநாயகன் பதந்தொழஅட்டி. (அப்பா)

இதுவுமது.

ராகம். இ-ம்-புன்னாகவராளி-திரிபுடைதாளம்.

பல்லவி.

போதும்போதும்உத்தியோககனமே-இதில்
ஏதுசுகம்நமக்குமனமே. (போதும்)

அநுபல்லவி.

ஓதக்கடலின்அலைக்கோய்வுண்டோஆரவாரம்
வேதநாயகன்நாமம்விளம்பஉண்டோநேரம். (போதும்)

சரணங்கள்.

௧. சிலர்நிலவழக்குகள்கொடுப்பார்-வேறு
சிலர்பணவழக்குச்செய்தடுப்பார்
பாருங்கம்முடன்சண்டைதொடுப்பார்-அல்லும்
பகலும்நம்பிராணனை எடுப்பார்
உலகில்வழக்கிழந்தோர் ஊரெங்குந்தூற்றுவார்
கலமில் அப்பீல்கோட்டார் நம்தீர்ப்பைமாற்றுவார். (போது)

௨. ஒருவன்கேட்பான் அள கர்பரியை-வே
றொருவன்கேட்பான்மெருகிரியை
ஒருவன்கேட்பான் அருணன்பரியை-வே
றொருவன்கேட்பான்வெள்ளைக்காரியை
ஈருபக்ஷந்தீர்ப்புக்கசந்தால் விண்ணோட்டோர்க்குமனஸ்தாபம்
சுரர்பக்ஷந்தீர்ப்புச்செய்தால்துஷ்டநரர்க்குக்கோபம். (போது)

௩. எந்தநேரமும்ஓயாவேலை-இதில்
என்னபெற்றோமுத்துமாலை
அந்தஉத்தியோகமேனூலை-அதில்
அகப்பட்டநாம்கரும்புபோலே
சந்ததமும்உழைத்துந்துணிந்ததுண்டோசஷாமம்
இந்தக்கூழுக்குத்தானோஇருப்பதுபட்டநாமம். (போதும்)

௪. எழுதிஎழுதிஎன்னகிரீடம்-பெற்றோம்
இங்கிததெரியார்நிர்மூடம்
பழுதுசொல்வதிவர்க்குப்பாடம்
அழுதாலுந்தொழுதாலும்அவர்துர்க்குணம்போமோ
கழுதைக்குவாழ்க்கைப்பட்டுக்கடிஉதைக்கஞ்சலாமோ. (போ)

பெரியதுரையாகிய கடவுளுக்கும். மனுஷத்துரைகளுக்கும் உள்ளபேதம்.

௱சுசு. இ-ம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி.

அந்தப்பெரியதுரைக்-கிந்தத்துரைகள்சரியா
மூடமனமே
விந்தைப்பொன்னுக்குநிகர்நிந்தைக்குரியகரியா. (அந்த)

அநுபல்லவி.

இந்தப்புவியில்நமைச்சொந்தப்பொருளாச்செய்து
தந்தைக்குநிகராகச் சிந்தைக்குள்உறையும். (அந்த)

சரணங்கள்.

௧. அந்தத்துரைநாம்செய்யும்எந்தப்பிழைகளையும்பொறுப்பான்
இரக்கமின்றி
இந்தத்துரைநாம்செய்யும்எந்தப்பிழைக்கும்தலைஅறுப்பான்
வேலைகொள்ளாமல்
அந்தத்துரைதான்நமக்கெந்தப்பொருளுந்தந்துநிறுப்பான்
வேலைவாங்கியும்
இந்தத்துரைநமதுசொந்தப்பொருளையுமேமறுப்பான்
விளையாட்டாக
அந்தத்துரைஉலகம்அமைத்தளித்தழிப்பான்
இந்தத்துரைகந்தலைஇரண்டாகக்கிழிப்பான்
அந்தத்துரைதனிமையாப்பகைஒழிப்பான்
இந்தத்துரைபடைகள்இருந்துமேவிழிப்பான். (அந்த)

௨. அந்தத்துரைவாகனமின்றிஅண்டங்களெல்லாங்கடப்பான்
முடவன்போலே
இந்தத்துரைவாகனம்இல்லாவிட்டால்விழுந்துகிடப்பான்
எக்காலமுமே
அந்தத்துரைதானொன்றும்அருந்தாமல்நமக்கன்னம்படைப்பான்
சோறுகறியும்
இந்தத்துரைதாரன்நமக்கீயாமல்தன்வயிற்றில்அடைப்பான்
பலவகையில்
அந்தத்துரைதான்நமக்கனுதினம்உழைப்பான்
இந்தத்துரைதான்நன்மைஏவல்கொண்டுபிழைப்பான்
அந்தத்துரைஎன்றைக்கும்அழிவின்றித்தழைப்பான்
இந்தத்துரையைஇனிஇயமன்வந்தழைப்பான். (அந்த)

௩. அந்தத்துரைசகலஅந்தரங்களையுந்தெரிவான்
குருடன்போலே
இந்தத்துரைஉலகிலெதுந்தெரியாமலேதிரிவான்
துஷ்டரையெல்லாம்
அந்தத்துரைஅடக்கிமூர்த்தச்சிஷ்டருக்கருள்சொரிவான்
பொய்யரையெல்லாம்
இந்தத்துரைஉயர்த்திவந்துநல்லவர்க்கிடர்புரிவான்
சத்தியமாக

அந்தத்துரைதான்சுத்தஅமலசொரூபி
இந்தத்துரைஉலகில்இணையில்லாப்பாபி
அந்தத்துரைமேல்நாயகன்மனவியாபி
இந்தத்துரைஎவர்க்குஞ்சயாதலோபி (அந்த)

கோட்சொல்லும்உத்தியோகஸ்தர்களைப் பற்றி.

௱௬௭. இ-ம்-அசாவேரி-திரிபுடைதாளம்.

பல்லவி.

எந்தநாளிலுந்தர்மமேஜெயம்ஏன்மயங்கிறாய்-பெண்ணே.

அநுபல்லவி.

நிந்தனைபலர்கூறட்டும்-அவர்
நினைவெல்லாம்நிறைவேறட்டும்-பின்பு
சிந்தனைதடுமாறட்டும்-அவர்
சிரிப்பார்சிரித்துநாறட்டும்-பெண்ணே. (எந்த)

சரணங்கள்.

க. எரிகிரவிட்டில்பிடுங்குவதுலாபம்
என்றுசொல்வார்அந்தவண்ணமே
பெரியகோட்சொல்லிநம்உத்தியோகத்தைப்
பிடுங்குவதிவர்எண்ணமே
சரியிவர்எண்ணமுடிக்கட்டும்-லஞ்சம்
சர்வகொள்ளைகள்அடிக்கட்டும்-உண்மை
துரைமகன்கண்டுபிடிக்கட்டும்அந்தத்
துஷ்டரைடஜன்அடிக்கட்டும். (எந்த)

உ. வரும்இடரெல்லாம்வரட்டும்நாம்-அதில்
வருத்தங்கொண்டென்னசாரமே
சருவமூடர்கள்வாழும்நாட்டினில்
சாதுக்கட்கபகாரமே
துரைமகன்நம்மைக்கெடுக்கட்டு-அந்தத்
துஷ்டர்க்குத்தியோகங்கொடுக்கட்டும்-அவர்
தரையில்கெட்டபேரெடுக்கட்டும்-பின்பு
தம்பிமார்களைமுடுக்கட்டும்-பெண்ணே. (எந்த)

௩. வல்லவனுக்குப்புல்லும்ஆயுதம்
வாழ்வதுநமக்கருமையா
நல்லவர்க்கிதுகாலமாஇங்கு
நாமிருப்பதுபெருமையா
கல்லில்நார்இவர்உரிக்கட்டும்-அவர்
காலில்விலங்குதரிக்கட்டும்-கண்ட
எல்லவருமேசிரிக்கட்டும-மிக
என்சொல்அப்போதுசரிக்கட்டும-பெண்ணே. (எந்த)

௪. கோளும்பொய்களுங்கூறட்டும்-நாய்
குலைத்துநத்தம்பாழாமா
முழுதும்சூரியன்ஒளியைக்கையினுல்
மூடமறைந்துபோகுமா
நீளுந்தீயர்கள்குதிக்கட்டும்-அவர்
நெஞ்சில்வஞ்சகம்பதிக்கட்டும்நமை
காளுமேஅவமதிக்கட்டும்-வேத
நாயகன்சிக்ஷைவிதிக்கட்டும்பெண்ணே. (எந்த)

சுவாமியைநினைக்கநேரமில்லையென்று முறையிடல்.

௱௬௮-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

நினைப்பதெப்போதுநெஞ்சே-ஐயன்பதத்தை
நினைப்பதெப்போதுநெஞ்சே

அநுபல்லவி.

தனத்தையும்மாதர்யௌவனத்தையும்உத்தியோக
கனத்தையும்எண்ணிப்பலதினத்தையும்கழித்தால் (நினை)

சரணங்கள்.

௧. பாட்டிலும்பலவிளையாட்டிலும்துர்விஷயக்
காட்டிலும்புத்திதனை-நாட்டினுல்கழித்தால் (நினை)

௨. தாரத்தைப்பிள்ளைகள்சம்சாரத்தைஎண்ணித்துர்வியா
பாரத்திலேநமதுநேரத்தைக்கழித்தால் (நினை)

௩. தாரைக்குள் ஒருசாண்குக்ஷி இரைக்காகவெள்ளைக்காரத்
துரைக்குக்கைகட்டிச்சாகும் வரைக்கும்நாம்உழைத்தால் (நினை)

௪. பாருக்குள்வரும்கூலிக் காரர்க்கும்பின்னும்இந்த
ஊருக்கும்உழைத்துநம்-வீரத்தைக்குலைத்தால் (நினை)

௫. தொண்டைகிழித்துக்கொண்டு சண்டைசெய்யும்வக்கீல்கள்
அண்டையில்இருந்துநம்-மண்டையைஉடைத்தால் (நினை)

௬. ஞாலத்தில்பெண்கள்செல்லும்-சாலத்தைநம்பிஅவர்
மூலத்திலேநமது-காலத்தைக்கழித்தால் (நினை)

௭. உழக்கில்தெற்குவடக்கு-கிழக்குமேற்கென்றுசொல்லும்
வழக்கர்பெருஞ்சமுத்திர-முழக்கத்திலிருந்தால் (நினை)

௮. வேதநாயகன்திருப்-பாதங்களைமறந்து
பூதஉடல்வளர்க்கக் காதகங்கள்அலைந்தால். (நினை)

உத்தியோகத்தைவெறுத்தல்.

௧௬௬. இராகம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

இந்தஉத்தியோகமென்னபெரிதா-நெஞ்சே
இதுபோனால்நாம்பிழைப்பதரிதா (இந்த)

அநுபல்லவி.

எந்தஇடம்போனாலுங்கந்தபொடிவாசிக்கும்
அந்தவிதமாய்நம்மைஅகிலமெல்லாம்பூசிக்கும் (இந்த)

சரணங்கள்.

௧. நல்லபிரபுக்களெல்லாம்நாட்டைவிட்டேஅகன்றார்
ஞானசூநியரெல்லாம் நமக்கதிபதியென்றார்
இல்லாததோஷம்நம்மேல்எடுத்தவர்முடிகின்றார்
இரவியினுங்களங்கம்இருக்குமெனப்புகன்றார். (இந்த)

௨. ஆகாதக்காலம்இதில் அசடர்தலைஎடுத்தார்
அருங்குணசீலர்கள் அதிகாரங்கைவிடுத்தார்
போகாமற்கோளரும்பொய்யரும்வந்தடுத்தார்
பூவிற்றகடையிலேபுல்லுவிற்கக்கொடுத்தார் (இந்த)

௩. இந்தஉலகுக்கெல்லாம்இவரோஅதிபதியா
இவருக்குழைக்கருமக்கென்னதலைவிதியா
அந்தமாகவேபடிஅளப்பதிவர்பொறியா
ஆயிரந்தொழிலும்நாம் அறியாதசங்கதியா (இந்த)

௪. பாரில்இவரைக்கண்டோபடித்திட்டோம்பலபாடை
பட்டதற்கெனனதந்தார்பாக்கியங்கூடைகூடை
ஊரில்உத்தியோகம்போனாலொழியும்பிடித்தபீடை
உயர்வேதநாயகன்உதவுவான் அன்னம்ஆடை (இந்த)

—(*)—

துன்பத்துக்கு அஞ்சாமை.

௧௭௰, இராகம்-முகாரி-ஆதிதாளம்.

பல்லவி,

என்னவந்தாலும்-மனமே-ஐயன்
இருக்கையில்என்னவிசனமே (என்ன)

அநுபல்லவி,

மன்னர்பகைக்கில்உயிர்-தன்னைவதைப்பர் வே
றென்னசெய்வார்நிதம்-பன்னரும்இடர்கள் (என்ன)

சரணங்கள்.

௧. உத்தமமானசஞ்சீவி கையில்
உடையவனைக்கொல்லுமோநாவி
அத்தனைநம்பும்மேதாவி தன்னை
அலைக்குமோதுயரமுமேவி
கத்தனைமறந்தவர் சித்தமேகவலைகள்
வைத்தபாத்திரமாகும் நித்தமுமதுன்பம் (என்ன)

௨. ஈடறுகாவுடன்ஓடை அரு
கிருக்கையில்என்செய்யுங்கோடை
மாடகூடகோபுரமேடை-தனில்
வசிப்பவர்க்குண்டோகுளிர்வாடை
தேடரியபுண்ணியபொற் பீடம்அமர்ந்தன்பெனும்
கிரீடந்தரித்தோர்க்கின்பம் நாடகம்செயும்நோய் (என்ன)

௬. ஓதரும்தேவதாபத்தி-நாளும்
உலகில்யாவையும்வெல்லும்சக்தி
போதமுடன்அதுவேமுத்தி-அதில்
புருஷார்த்தங்களெல்லாம்சித்தி
வேதநாயகன்பத்தர்-மீதடருந்துன்பங்கள்
ஆதவன்முன்பனியாம்ஆத்தில்துயரம் (என்ன)

பிறர்மேல்குறைகூறுமை.

களக. இராகம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

ஒருவர்மேலுங்குறைநீகூறுதே-திரு
ஊச்செயற்காற்பிறரைச்சீறுதே (ஒருவர்)

அநுபல்லவி.

வருவதுவந்தொழியமாறுதே-கரு
மஞ்சுக்கிணைகிருபேசன்-கஞ்சசக்கழல்மறந்து
வஞ்சக்கடலில்விழும்-நெஞ்சக்குரங்கேநீ (ஒருவர்)

சரணங்கள்.

௧. துன்பம்என்பதெவர்க்கும் சுதந்தரமே-அதைத்
தொலைப்பதற்குண்டோஒருதந்திரமே
இன்பம்உற்றவரெவர்நிரந்தரமே-பிறர்
இடிக்கவந்தாலுங்-கட்டி-அடிக்கவந்தாலும் பழி
முடிக்கவந்தாலும் உயிர்-மடிக்கவந்தாலும்-நீ (ஒருவர்)

௨. பொறுமைஎக்காரியமுஞ்சாதிக்குமே-அதைப்
பூண்டவர்க்கேசுகம்ஆதிக்கமே
மறுமையின்துயரத்தைப்பேதிக்குமே மிக
மகிழ்ந்தபோதிலும்-துயர்-நிகழ்ந்தபோதிலும்-பிறர்
புகழ்ந்தபோதிலும்-உனை-இகழ்ந்தபோதிலும்-நீ (ஒருவர்)

௩. மற்றவர்தாம்செய்யினும்பெருந்தீங்கு-அதை
மனதிற்கொள்ளாதிருப்பதே-பாங்கு
குற்றமாகியவழிதனைநீங்கு-மிகக்
கோத்தபலபுவனம்-பாத்தபரன்-அடியை
ஏத்தும்வேதநாயகன்-வார்த்தையின்படி-நீ (ஒருவர்)

பரிதாளகண்டனம்.

௧௭௨. இராகம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி.

சீச்சீநீர்லஞ்சம்வாங்கல்ஞாயமாமோ-அதனால்உமைச்
சேர்ந்ததரித்திரம்-விடிந்துபோமோ (சீச்சீ)

அநுபல்லவி.

வீச்சிலும்வீண்பகட்டுப்-பேச்சிலும்பணம்வாங்கும்
தேர்ச்சியுடையவினைப்-பூச்சிஒப்பவரோ (சீச்சீ)

சரணங்கள்.

௧. வரவேண்டியகடனைவகையுடன்கேட்டுவாங்கக்கூசிப்
பலரிருக்க
வலியநீர்கேட்டுவாங்கமனம்எப்படிவந்ததோசீசீ
உலகில்நீங்கள்
பரவியபெருந்தவம்பதினாயிரம்வருஷம்ஊசி
முனையில்நின்று
பண்ணினும்போமோஅந்தப்பாவம்ஒருமுந்திரிவாசி
இலஞ்சந்தனைக்
கரம்வாங்கினோர்கள் தந்தோர்க்குப்பாதனுசி
கள்ளர்க்கும்வேண்டும்நடும்இரவமாவாசி
இரவும்பகலும்உமக்கேஏகராசி
எவரையுமயக்கிடும்நீர்புருஷதாசி (சீச்சீ)

தனதுகேடறியாமல்சகலர்க்கும்சாஸ்திரஞ்சொல்லும்பல்லி
கழுநீர்விழுந்து
சாகுதல்போல்யாவுந்தெரிந்தமகிமைக்கொத்துமல்லி
ஆகியநீங்கள்
மனமயங்கும்எளியரிடம்வாங்கலாமோதனம்இல்லிக்
குடநீர்போலே
வாழ்வுந்தனமுங்கெட்டுத்தாழுமென்பதுள்ளங்கைநெல்லி
ஆகையால்ஏழை
ஜனம்அழவாங்கிடுந்தனம்உயிர்கொல்லி
சாய்க்குமேஅதுவாழ்வின்வேரினைக்கெல்லி
தினமுமேஅடிக்கிறீர்நீர்ஜெகஜல்லி
திருட்டுத்தொழிலும்நீங்கள்ருத்திராக்ஷப்பில்லி (சீச்சீ)

௩. இழிவுக்காலயமான உடையஷ்டமச்சனிபற்றுதோ
பொல்லாததுஷ்டாநீர்
என்றுசனிபிடிக்க அஞ்சினும்பாதசஞ்சுற்றுதோ
புண்ணியங்களைவிட்டு
வழிகெட்டஉங்களுக்கு வளநிதியாவுமேவற்றுதோ
ஒருசாண்கும்பி
வளர்த்திடஉங்களுக்கு வருமாதச்சம்பளம்பற்றுதோ
குண்டோதரன்போல்
ஒழிவில்உம்முதரந் தூராப்பெருங்குழியா
உம்மாற்சகலவுத்தி யோகர்க்கும்பழியா
விழியவியாதோஉமக் கென்னகெட்டசுழியா
வேதநாயகன்உரைப்பது வீண்மொழியா (சிச்சி)

——(*)——

இதுவும் அது.

கஎ௩. இராகம்-சங்கராபரணம்- சாப்புதாளம்,

பல்லவி,

ஏதுக்குவாங்குகிறீர்லஞ்சம்—உமக்
கிதைவிடவேறுண்டோ பஞ்சம் ஏதுக்கு

அநுபல்லவி,

வாதுக்குவீணே வழக்குரைபேசி
வாங்குகிறீர்என்னபிழைப்பிதுசீசீ ஏதுக்கு

சரணங்கள்.

க. நீசப்பொருளினை ஆசைப்பட்டேநல்ல
நீதியைநீக்குகிறீர்-ஐயோஅபக்
கியாதியைத்தூக்குகிறீர் உமக்கும்பொய்த்
தாசிக்குமேஎன்னபேதம்-நீர்தான்
சாதிப்பதென்னபிரமாதம்-பிறர்
காசுக்கேன்இந்தவிவாதம்-அப்பு
காத்தான்முதலோர்க்குநீர்முதற்பாதம ஏதுக்கு

உ, மணமுமலரும்போன்ற நேயர்களிடத்திலும்
வாங்குவீர்பரிதானம்-உமைவிட்டு
நீங்குமோ அவமானம் அலட்சியம்
பணமென்னகாணும் பாஷாணம்பிரர்
பணமென்றால்விடுகிறீர் பிராணம்-வாங்கக்
குணமுண்டோ கடுகுப்பிரமாணம்-வாங்கக்
கூசுகிறீரில்லை கிடையாதோநாணம் ஏதுக்கு

ந. பாழில்இறைத்தஜலம்போல் உமக்குப்
பரிசளித்தாவதுண்டோ துரைதீர்ப்புப்
பண்ணுவதும்மைக்கொண்டோ வெட்கமின்றி
ஏழைகளிடத்திற்கைக்கூலி வாங்க
இச்சைகொண்டீர்என்னகேலி-வந்து
சூழுமேபலபலஜோலி-நிஜம்
துரையறிந்தால்உங்கள் உத்தியோகங்காலி ஏதுக்கு

ச, உழக்கிற்கிழக்குமேற்குண்டாக்கி ஒருக்காலே
ஊரைப்புரட்டுகிறீர் விவாதிக்கும்
பேரைமருட்டுகிறீர்-நிச்சயமுண்டோ
வழக்குச்சேற்றினில் நட்டகம்பம்-பிச்சை
வாங்கியும்உமக்கென்னடம்பம்-ஞாயம்
இழக்கின்றபேர்படுந் துன்பம்-உமக்
கிசைந்திடுஞ்செல்வத்தை அறுத்திடும்ரம்பம் ஏதுக்கு

ரு, சீலையில்நார்உரிப்பதுபோலே-எவரையும்
திட்டமாக்ளத்துகிறீர்-கைகளில்-அகப்
பட்டதைச்சுற்றுகிறீர்-பெரிதான
மலையோஉமதுகாயஸ்தூலம்-நீர்தாம்
வாழ்வதுண்டோகோடிகாலம்-ஊரில்
கொல்லுர்களவர்கள்விசாலம்-ஆனல்
கொடுக்கவேண்டுமுந்தி உமக்குத்தாம்பூலம் ஏதுக்கு

சு, ஆடுங்கறங்கென வாடும்பஞ்சைகளிடம்
அடிக்கிறீர்சர்வகொள்ளை-உமைவந்து
பிடிக்குமேபெரியசள்ளை-வாங்கினபின்பு
போடுகிறீர்பட்டாராமம் ஒரு
போதும்விடியுமோக்ஷாமம்-உமை
நாடிமிஞ்சாதொருரோமம்-வேத
நாயகன்சொற்கேட்டால் உமக்குண்டுக்ஷேமம்

இதுவும் அது.

களச, இராகம்-பியாகடை-சாப்புதாளம்,

பல்லவி,

ஆர்வேணுமோ அவர்வாங்கட்டும்-நீலஞ்சம்
ஆசைவையாதே நெஞ்சே ஆர்

அநுபல்லவி.

சீர்வளரும்குளத்தூ ரெனும்பதிஉள்ளோர்
செல்வன்தேவநாயகன் சொல்லும்உரையைக்கொள்ளார் ஆ

சரணங்கள்.

க, சம்பளமிருக்கப்பின் மேல்வருமானம்
தனைநாடியேன் அதன்மேநித்தியநியானம்
அம்புவியிசை விளைந்திடும்அவமானம்
அதைவிடஎடுக்கலாமோ உபாதானம்
அஞ்சிடும்பல-பஞ்சையோர்களையே-நிதம்துன்பஞ்செய்து
மிஞ்சவேஅவர்-லஞ்சமேதர
வஞ்சமேபுரி பஞ்சபாதகர் ஆர்

உ, கக்ஷிகாரருக்குன்னால் ஏதுபகாரம்
கனதுரைதீர்ப்பான் தன்மனதுப்பிரகாரம்
ரட்சிபபேனெனப்பொய் சொல்வதில்என்னசாரம்
லஞ்சமென்பதுபட்டப் பகலிற்செயசோரம்
ரத்னராசியும்-அர்த்தநாணயமும்-தந்தால்-உன்காரியம்
சித்தியென்றுப-யதிராளையும்
எத்திவாங்கிடும்-உத்தியோகர்கள் ஆர்

ங, அயலார்பொருளின்மேல் நமக்கென்னசொந்தம்
அகதியைமடிபிடித் தேன்பலவந்தம்
இப்பலவாங்கிக்கெட்ட குடிகள்அநந்தம்
இகபரம்போய்வரும்-நரகநிர்ப்பந்தம்
இக்கணத்தில்உன் பக்கமாகிடவே-செய்வேன்-தந்தாலென்று
அக்கிரமத்தில்-அலைக்கழித்து
வழக்கரைத்தொடர்-துற்குணத்தர்கள் ஆர்

ச, ஒருகாசாகிலும் வாங்குதல்துரோகம்
ஊர்கொள்ளை அடிக்கவோ உனக்குத்தியோகம்
ஆருபவர்க்கென்ன உன்றுலேநிர்வாகம்
தனத்துக்கேன்செய்கிறாய் நீபிராணத்தியாகம்
சட்டநீதிபுரட்டி வாதியையே-தினம்-தெட்டித்தங்கக்
கட்டிவெட்டி-உருட்டிஓட்டிய
பெட்டிகொட்டி-மருட்டுமெட்டிகள் (ஆர்)

பிரபுத்துவ தூஷணை.

௬எரு, இராகம்-தன்னியாசி- ஆதிதாளம்,

பல்லவி,

ஓஓபிரபுத்துவமே—தினமும்
உன்னாலேகன உபத்திரவமே (ஓஓ)

அநுபல்லவி,

காவளர்பூமியில் என்னிடத்துன்தொழிலைக்
காட்டாதேயென்னை வாட்டாதே (ஓஓ)

சரணங்கள்,

க, அன்னத்தைக்கண்டால் விஷம்போல் வேம்புபோல்
அருவருத்துண்ண துணியாய்
ஆயிரம்பக்குவஞ்செய் தொருவாய்ச்சாதம்உண்
டாலும்நீஜீரணியாய்
என்னத்துக்கிந்தஅன்ன மென்றெண்ணியேழைகளுக்
கிந்தவர்பசிதணியாய்
இறுமாப்போ திமிர்வாதமோ
ஈசன்வந்தாலும் எழுந்துபணியாய் (ஓஓ)

உ. பார்க்கச்சகியா அங்கயீனர்அழகரென்று
பலருந்துதிக்க விதிப்பாய்
பலசாலிநானென்று தள்ளிக்கொண்டுசெத்த
பாம்பையுமேமிதிப்பாய்
ஊர்க்குள்எவருஞ்சொல்லும்நிந்தையை
உன்னையேநீதுதிப்பாய்
உண்மைசொல்வோரைத் தள்ளிப்பொய்சொல்வோர்களை
உற்றவரென்றுமதிப்பாய் (ஓஓ)

௩. காரியமில்லா விண்டம்பம்விஷயத்தில்
காசெல்லாம் செலவழிப்பாய்
காலத்தையும்உனது காயத்தையும்விஷய
காமத்திலே கழிப்பாய்
பாரில்சுகம்எளியராலென்றுநினையாமல்
பாவி அவரைப்பழிப்பாய்
பத்துப்பேர்நித்தம் உனைத்தாங்கஇல்லாவிட்டால்
பாக்கப்பாக்க விழிப்பாய். ஓஓ

௪. பாலையும்விஷஞ்செய்யும் பாம்புபோற்சுகமெல்லாம்
பாழாக்கிக் கெடுப்பாய்
பலநோய்களுக்கிருப்பிடமாய் வைத்தியர்
பலருக்கு வேலைகொடுப்பாய்
காலையுமாலையுங் காரணமின்றிக்கடு
கடுத்துநீ சிடுசிடுப்பாய்
கைப்பொருள்போனால் ஒருவேளையும்தெரியாமல்
கையிலேஓடெடுப்பாய். ஓஓ

௫. சீமையிற்கவிசொல்லக் கம்பனும்நிகரல்லச்
சேஷன்நானென்று விரிப்பாய்
சேஷநீயென்பதற்குச் சாக்ஷியாகவிஷத்தைத்
தேகமுழுதுந் தரிப்பாய்
ஊமைக்குளதுவாயன் சண்டைப்பிரசண்டனென
ஓயாமல் விவகரிப்பாய்
உயர்கவிஞரைக்கண்டால் ஒன்றும்பேசாமல்நீ
ஓட்டத்தை யனுசரிப்பாய். ஓஓ

௬. பெருநொண்டிபோல்உனைத் தூக்கச்சொல்லிப்பல
பிராணிகள் கழுத்தொடிப்பாய்
பெருந்தொழில்செய்துகளைத்தவன்போல்உடம்பெல்லாம்
பிடிக்கச்சொல்லிஅடிப்பாய்
அரும்பலசாலிநான் தூக்கிவிட்டால்பிணைக்கா
டாக்குவேனென்றுநொடிப்பாய்
ஐயன்வேதநாயகன் அடியைமறந்துபெண்கள்
அடிகளையேபிடிப்பாய் ஓஓ

குடும்பசம்பந்தக்கீர்த்தனைகள்.

தாய்தந்தையரைநமஸ்கரித்தல்.

௱எசு-இராகம்-பியாகு ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. உற்றவரோஎனைப்பெற்றவரோதினம்
உமக்கேநமஸ்காரம்
முற்றும்நீர்செய்தஉதவிக்குநான்என்ன
மொழிவேன்உபகாரம்.

௨. பத்துமாதம்என்னைவயற்றிலேசுமந்து
பலதுயர்சகித்தீரோ
எத்தனைபிராணசங்கடமுடனேஎனை
ஈன்றுநிர்வகித்தீரோ.

௩. பெற்றீர்வளர்த்தீர் பெயரும்இட்டீர்ஜீவப்
பிரதிஷ்டைசெய்வித்தீரோ
உற்றஉம்உதிரத்தைமுலைப்பாலாகவே
ஊட்டியேஉய்வித்தீரோ.

௪. தேனினும்அமிர்தினும்இனிதேஎனக்குநீர்
செப்பியதாலாட்டு
வானினும்அமரர்க்குவருமோஇதுபோல்
மங்களத்திருப்பாட்டு.

௫. மாந்தவியாதிகள்என்னையணுகாமலே
மருந்துகள்கொடுத்தீரோ
வாந்தியுமலசலஅசுத்தமும்சகித்தெனை
மார்புறஎடுத்தீரோ.

௬. உடல்உயிர்ச்சகலமும்நீர்தந்ததேயன்றி
உண்டோஇனிவேறு
அடரும்உலகமெல்லாம்உமக்களித்தாலுமே
ஆமோகைமாறு.

௭. சிவன்போலநீர்என்னைவளர்த்திட்டஅருமையை
செப்பஎன்னாலாமோ

காவே ஆயிரம் இருக்கினும்நீர்செய்த
நன்மையைச்சொல்லப்போமோ.

௮. கவலையெல்லாம்என்கவலையல்லால்வேறு
கவலையொன்றறியீரோ
புவியிலேஎன்சுகம்அல்லதுவேறொரு
பொருளையுங்குறியீரோ.

௯. பாலவியாதிகள்எனைஅணுகாமலே
பத்தியம்பிடித்தீரோ
காலமெல்லாம்பலவிரதங்கள்அனுஷ்டித்துக்
கருமங்கள்முடித்தீரோ.

௰. இரவுமுழுதுமேதூங்காதிருந்துநீர்
எந்தனைக்காத்தீரோ
அரவுமுதற்பலஜெந்துக்களால்வரும்
ஆபத்தைத்தீர்த்தீரோ.

௰௧. தரணியில்என்சுகம்வேண்டியேநீர்பல
தருமங்கள்செய்தீரோ
கருணைசெய்யும்படிகடவுளைத்துதித்துநற்
காணிக்கைசெய்தீரோ.

௰௨. சற்றுநீர்என்முன்மறந்திருந்தால்நான்
சடலம்பொருப்பேனோ
உற்றவுலகிலேஇன்னாள்மட்டும்நான்
உயிர்வாழ்ந்திருப்பேனோ.

௰௩. காணுதெய்வத்தின்அருளாலேவந்த
கண்கண்டதெய்வம்நீரோ
ஆணுப்பெண்ணுயிராஅந்தத்தேவதையும்
அனைநந்தையென்பாரோ.

௰௪. எனக்கொருசுகம்வரில்உமக்குவந்ததுபோல்
எக்களிப்படைந்தீரோ
எனக்கொருதுயர்வரில்உமக்குவந்ததுபோல்
ஏங்கிஉள்ளுடைந்தீரோ.

௰௫. பாலுஞ்சோறும்பக்ஷணங்களுமெனக்கிட்டிடப்
பழஞ்சோறுண்டீரோ
காலமெல்லாம்நல்லசோமனென்உடுக்கநீர்
கந்தையைக்கொண்டீரோ.

௰௬. சப்பிரமஞ்சத்தில்நான்படுத்துறங்கநீர்
தரையிலேபடுத்தீரோ
கைப்பொருளெல்லாம்என்னிமித்தம்பரி
காரிக்குக்கொடுத்தீரோ.

௰௭. வாக்கால்உளறும்என்மழலைச்சொற்கேட்டு
மகிழ்ந்தேதுதித்தீரோ
காக்கைக்குமதன்குஞ்சுபொன்குஞ்சென்பதும்போல்
கரிசனம்பதித்தீரோ.

௰௮. குற்றம்எத்தனையோசெய்தேன்அவற்றைக்
குணமாய்க்கொண்டீரோ
சற்றுநான்நோய்கொள்ளில்அன்னம்நித்திரையின்றித்
தளர்ந்துமெய்துவண்டீரோ.

௰௯. தோளினும்மார்பினும்இடையினுமெனைத்
தூக்கிக்கொண்டலைந்தீரோ
நீள்பஞ்சகாலத்தில்உள்ளசோறெனக்கிட்டு
நீர்பசித்துலைந்தீரோ.

௨௰ சுயநலம்வேண்டிஇங்கொருவருக்கொருவர்
துணைசெய்வார்மெய்தானே
பயனொரும்வேண்டாதெனைநீர்வளர்த்திட்ட
பட்சம்யென்சொல்வேனே.

௨௧. உறவினரெல்லாம்உம்மாலேவந்த
உறவினர்தாமலவோ
அறநெறிகாட்டும்குருவுமேநீரெனில்
அயலினிஎன்சொலவோ.

௨௨. பலபொருள்எனக்குச்சம்பாதித்துவைக்கவே
பலவிதம்உழைத்தீரோ
நிலமிசைஉம்முயிர்க்குயிர்நானேஎன்று
நினைத்துநீர்பிழைத்தீரோ.

௨௩. தாரம்போனால்மறுதாரம்வருவர்பெற்ற
தந்தையரும்அப்படியே
நீர்போனால்வேறுதாய்தந்தையாவந்து
ஒருவரெப்படியே.

௨௪. தக்கபருவத்தில்எனை அடக்கிப்பாட
சாலையில்விட்டீரோ
பக்கமெல்லாந்திரிந்தென்னாலேபல
பாடுகள்பட்டீரோ.

௨௫. இளந்தைப்பருவத்தில்என்னால்வருந்துன்பம்
எல்லாம்பொறுத்தீரோ
தளர்ந்தபருவத்தில்உம்மால்வருந்துன்பம்
சகிப்பதுபெருஞ்சீரோ.

௨௬. துக்கங்களெல்லாம்நீர்வகித்துக்கொண்டு
சுகம்எனக்களித்தீரோ
மக்களேசகலபாக்கியமென்றெண்ணி
மனமிகக்களித்தீரோ.

௨௭. மண்பிள்ளையாயினுந்தன்பிள்ளையென்றெனை
மகிழ்ந்தாதரித்தீரோ
பண்புடன்என்பொருட்டாகநீர்பலரையும்
பணிந்துபசரித்தீரோ.

௨௮. தெரியாமல்நான்செய்தபிழைபொறுத்தென்னிடம்
திருவருள்பதிப்பீரோ
அரும்வேதநாயகன்அருள்செய்யும்படிஎன்னை
ஆசீர்வதிப்பீரோ.

தகப்பன் மகனுக்குப்புத்திகூறல்.

௭௭-ம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

மார்க்கம்இதுமகனே-சந்திரன்
தோற்கும்எழில்முகனே. (மார்க்கம்)

அநுபல்லவி.

மூர்க்கருடனேஉறவாடாதே-பழி
மூண்டிடும்சூதுவிளையாடாதே-இந்தப்
பார்க்குளொருபொய்சொல்லக்கூடாதே-மது
பானம்விரும்பிமனம்வாடாதே-சன் (மார்க்கம்)

சரணங்கள்.

க. நித்தியன்பொன்னடியிணையே-துயர்க்கடலை
நீக்குதற்குதவும்புணையே
பத்திமான்கட்குண்டோஇணையே-கடவுள்நேசம்
பரகதிக்குவழித்துணையே
சத்தியமார்க்கத்தைப்பிரியாதே-பல
தப்புவழியைஅனுசரியாதே-சுய
புத்தியில்லாமல்எங்குந்திரியாதே-இந்தப்
புவியில்எவர்க்கும்இடர்புரியாதே-சன் மார்க்கம்

உ. புண்ணியபாவங்கள்இரண்டேநிச்சயம்-அந்தப்
புண்ணியவழியைநீஅண்டே
மண்ணினுமேமகிமைகொண்டே-பிழைப்பதன்றி
மறுமையினும்பாக்கியம்உண்டே
கண்ணியமாகஎன்றும்பிரகாசி-நல்ல
கனதந்தைதாய்பெரியர்அடிபூசி-தினம்
அண்ணன்தம்பிசோதரிகளைநேசி-நிதம்
அன்னம்எளியர்க்கிடுநயம்பேசி-சன் மார்க்கம்

ங. சத்தியம்அடக்கம்பொறையே-முதலாகிய
சற்குணங்களொடுநிறையே
சித்திபெறில்ஒருகுறையே-அணுகாதினிக்
செப்பினேன்நீதிமுறையே
சுத்தமாகவேதினம்நீராடு-நல்ல
தூயவஸ்திரங்களைக்கையாடு-கன
புத்திமான்களுடனேதினங்கூடு-கெட்ட
புல்லரைக்காணில்அஞ்சியேஓடு-சன் மார்க்கம்

ச. கல்விநமக்கவசியமே-கற்றவர்க்கிந்தக்
காசினியெல்லாம்வசியமே
செல்வமுடன்வரும்நயமே-கற்றவர்க்கென்றும்
ஜீவனத்துக்கில்லைபயமே
பலவகைப்படிப்பையும்நீங்காதே-உன்
பாடம்படிக்காமலேதூங்காதே-நீ
நல்வழிநடக்கப்பின்வாங்காதே-எந்த
நாளும்நீகடன்வாங்கிஏங்காதே-சன் மார்க்கம்

௫. பாடமெல்லாம்நெஞ்சில் இருந்து-எழுதப்பேசப்
பாடவும்பழக்கம்பொருத்து
நீடுகையெழுத்தும்திருத்தகற்படிநீ
நிற்கவேண்டும்ஈதென்கருத்து
ஏடுங்கையுமாயிருவாடாதே-நீ
என்றும்பிறர்பொருளைநாடாதே-சர்வ
மூடரைக்கூடிவிளைபாடாதே-என்றும்
மூக்குத்தூள்புகையிலேபோடாதே-சன் மார்க்கம்

௬. சீலத்தைக்கைவிடாதே-துர்ப்போதனை
செய்பவர்க்கிடங்கொடாதே
ஜாலத்துக்குட்படாதே-மாதுஷ்டனென்று
தாரணியிற்பேர்யெடாதே
காலத்தைவிருதாவிற்கழிக்காதே-உன்
கைப்பொருள்வீணிற்செலவழிக்காதே-இந்த
ஞாலத்தொருவரையும்பழிக்காதே-வேத
நாயகனைமறந்துவிழிக்காதே-சன் மார்க்கம்

தகப்பன்மகளுக்குப்புத்திகூறல்.

௱௭௮-இம்-சஹாணு-ரூபகதாளம்.

பல்லவி

புத்தியிதுமகளே-உனக்குநற்-புத்திஇதுமகளே (புத்தி)

அநுபல்லவி.

நித்தியமும்பான்நேசம்விடாதே
சத்தியமார்க்கத்தைத்தாண்டிக்கொடாதே. (புத்தி)

சரணங்கள்.

௧. ஆலயம்குருக்களைஅசட்டைபண்ணாதே
அடிக்கடிஜெபஞ்செய்யாதிருக்கவெண்ணாதே
காலந்தனைவீணிற்கழிக்கஎண்ணாதே
கண்ணேபிறைகூதவிடாமல்உண்ணாதே (புத்தி)

௨. மாதாபிதாக்களைமகிழ்ந்துநீதாங்கு
மண்ணில்நல்லபிள்ளையென்றுபேர்வாங்கு
தீதுகள்உனக்குச்செய்தோர்க்குமேதீங்கு
செய்யாமலிருப்பதுதிருவுளம்பாங்கு (புத்தி)

௩. ஞானபுஸ்தகங்களைநாளும்நீவாசி
நல்லவருடன்கூடிதாதனைநேசி
ஈனர்தமக்குஞானமேஉபதேசி
என்றுங்குணவதியேமகராசி (புத்தி)

௪. உயிர்போனாலும்நீஒருபொய்சொல்லாதே
உன்வீடுகடந்தயல்வீடுசெல்லாதே
பயில்மறுபுருஷர்கள்பார்க்கநில்லாதே
பாவத்தைக்கனவிலும்நினைத்தல்பொல்லாதே (புத்தி)

௫. அம்புவிழியேஅறங்கைவிடாதே
அற்பப்பொருள்விரும்பிஐயோதொடாதே
வம்புக்காரிகளுடன்வார்த்தைகொடாதே
மற்றவர்பொருளைக்கண்டாசைப்படாதே (புத்தி)

௬. வாழ்வுவந்தாலும்நீமயங்கித்துள்ளாதே
மற்றவர்இழிவைஉன்வாயால்விள்ளாதே
தாழ்வுவந்தாலும்நீசலித்துக்கொள்ளாதே
சகலமும்பான்செயல்தடுத்துத்தள்ளாதே (புத்தி)

௭ மாமிநாத்திகளைமதித்துறவாடு
மகளும்தாயும்போலமகிழ்ந்துநீகூடு
சாமியாகுங்கணவன்தயவைநீதேடு
தலையணைமந்திரம்ஓதுதல்கேடு (புத்தி)

௮. தப்பாமல்எளியனைத்தாங்கிக்கைதூக்கு
தானதருமம்ஜெபதபத்தில்நாள்போக்கு
கைப்பாகத்தாலேஉன்கணவனார்மூக்கு
கம்மென்றுமணமேறக்காயக்கறியாக்கு (புத்தி)

௯. விடியுமுன்எழுந்துநீவேலையைநாடு
வீட்டைக்கண்ணாடிபோலவிளக்கிக்கையாடு
உடலும்ஆடையும்அழுக்கொழியநீராடு
உடலம்பெருக்கத்தீனிஉண்பதுகேடு (புத்தி)

ங. சொந்தவேலைகள்செய்யச்சோம்புறையாதே
துன்பஞ்செய்தவர்க்கும்நீதுன்பஞ்செய்யாதே
வந்தஎளியவனைஎட்டிவையாதே
மாவேதநாயகன்வார்த்தைசொல்லாதே

உத்தமஸ்திரீயின்லட்சணம்.

களக. இராகம்-சாரங்கா-ரூபகதாளம்.

பல்லவி.

எவளோஅவளேகுலநாரி-அவள்
இகபரம்இரண்டுக்கும்உபகாரி (எவளோ)

அநுபல்லவி.

அவனிதனைவிதிக்கும்-ஆண்டவனைத்துதிக்கும்
அனகபூஷணி-அமிர்தபாஷணி
நனகதூஷணி-கலகதுவேஷணி (எவளோ)

சரணங்கள்.

க. நித்திரையிலுங்கணவன்தியானம்-என்றும்
நீங்காதபெரியஅபிமானம்
பத்தினிகளுக்கெல்லாங்குருஸ்தானம்-அவள்
பரபுருஷருக்குமாதாசமானம்
சத்தியம்பொறைஅருள்-சாந்தம்அவட்குப்பொருள்
தர்மாஞ்சனி-சமயாஞ்சனி (எவளோ)

உ. உத்தமகுணங்களேஆபரணம்-ரத்ந
ஒலைமுதல்நகைகள்ஒருதிரணம்
பத்தாவைப்பிரிவதுவேமரணம்-வரும்
பந்துஜனங்கட்கெல்லாம்ஆதரணம்
சுத்தசித்தம்உடையாள்-தூயஅன்னநடையாள்
துதிகொள்சுந்தரி-சுபநிரந்தரி
மதியில்மந்திரி-வசனதந்திரி (எவளோ)

௩. சந்திரபிம்பம்போலுந்திருமுகமே-அவள்
தரிசனம்பிர்மானந்தசுகமே
எந்தவேளையுமிருதுவாசகமே-சீலம்
ஈவாள் அருந்ததிக்கும்பாசகமே
வந்துதனை அடுக்கும்-வறியர்க்கெல்லாங்கொடுக்கும்
மலநிவாரணி-வடிவபூரணி
குலசிரோமணி-குணவுதாரணி (எவளோ)

௪. குண அழகொன்றுலகூதாந்தரமே-கொல்லுங்
கொடுவிஷம்குணமில்லாள்சுந்தரமே
உணர்வில்லாள்வீடுவனாந்தரமே-ஞானம்
உத்தமிக்கென்றுஞ்சுதந்தரமே
அணுகும்பர்த்தாகுரூபம்-அவட்குத்திவ்யசொரூபம்
அதிகநயவதி-அமிர்தகிரணமதி
புதியசுபமதி-புருஷர்தவநிதி (எவளோ)

௫. சகலமுந்தெரிந்தவித்தியாதீபம்-என்றும்
தலைவன் ஊழியமேகாலக்ஷேபம
பகாஅண்ணுமகிமைப்பிரதாபம்-அவள்
பாக்கியங்கணவன்பிரியசல்லாபம்
நிகரில்வேதநாயகன்-நேசமேபேசுஞ்சுகம்
நிதியநவமணி-நிகர்வகுண அணிஎவளோ
அதிகவிதரணி-அரியகிரகணி (எவளோ)

பெண்பார்க்கத்தூதனுப்புதல்.

கஅ௯. இராகம்-உசேனி-ஆதிதாளம்.

பல்லவி.

நல்லபெண்ணைப்பார்நீதூதா
நல்லபெண்ணைப்பார்நீதூதா (நல்ல)

அநுபல்லவி.

அல்லடாகேள் இந்தப்பூமியின்மேலே
ஆயிரங்காலத்துப்பயிராகையாலே (நல்ல)

௧. அதிகபேச்சுக்காரி பெரும்வம்பி
ஆயிரமானாலும் அவள் வேண்டாந்தம்பி
நிதம்நிதம் ஊரெல்லாம் நீட்டுதாள் கம்பி
நிச்சயம் அவள் ஆகாள் நீ என் சொல் நம்பி (நல்ல)

௨. எழுத்துவாசகம் அறியாதவள் மட்டி
வேதம் அறியாள் அவள் சுரண்டுவாள் சட்டி
கழுத்திலே அவளுக்குத் தாலியைக் கட்டிக்
காரியமில்லை அது காசுக்கு நஷ்டி (நல்ல)

௩. அழகுங் குணமுமுள்ளவள் நல்லஜோடு
அழகில்லையாயினும் குணத்தையே தேடு
பழகு நற்குணமில்லா அழகியின் வீடு
பாம்புபுலிகரடி வாழ்ந்திடுங்காடு (நல்ல)

௪. வீட்டுவேலை தெரியாதவள் வேம்பு
மினுக்கும் அவள் குலுக்குமே வெறுவீம்பு
கூட்டு நற்குணமில்லாக் கொடியவள் பாம்பு
குலத்தைக் கெடுக்கவந்த கோடாலிக்காம்பு (நல்ல)

௫. நகைகள் தரித்து மஞ்சள் வாடைகள் பூசி
நாடெங்குந் தெரிய வேர்ந்தைத்துக்கைவீசி
சொகுசுடன் நடப்பவள் ஆயிரந்தாசி
சும்மாவந்தாலும் அவள் வேண்டாம் சீசீ (நல்ல)

௬. தேவதாபத்தி இல்லாதவள் கள்ளி
திருட்டுக்கும் புரட்டுக்கும் அவள் ஒரு பள்ளி
தாவில்புருஷன் குடிக்கவள் பெருங்கொள்ளி
சனியனை விலக்குவாங்காமல் நீ தள்ளி (நல்ல)

௭. உடமைகளுடன் பணங்காசின் மேல் இச்சை
உள்ளவள் சண்டைக்குக் கட்டுவாள் கச்சை
இடைவிடாமல் கெடுமேனல்லச்சை
இவளைக் கொள்ளுவதிலும் எடுக்கலாம் பிச்சை (நல்ல)

௮. சந்ததங் கணவன் மேல் ஒழிப்பாய் பத்தி
சாந்தம் பொறுமை தயை தானம் நற்புத்தி

எந்தவேளையும்உடல்ஆத்துமசக்தி
இல்லாதவள்அவன்கழுத்துக்குக்கத்தி (நல்ல)

௩. நல்லவள்ஏழையானாலுந்தேடாதே
நானூறுபோனாலும்நீபின்னிடாதே
பொல்லாதவள்கையில்காட்டிக்கொடாதே
புலியைக்கொண்டுவந்தென்னைத்தெருவில்விடாதே (நல்ல)

௪. சகலகாரியமுந்தெரிந்தவள்சிலாக்கியம்
தரித்திரதசையிலும்அவள்பெரும்பாக்கியம்
இகபரம்இரண்டுக்கும்அவளேயோக்கியம்
என்றுசொன்னான்வேதநாயகன்வாக்கியம் (நல்ல)

தூதன் பெண்பார்த்துவந்துசொல்லல்.

௧௮௧. இராகம்-சௌராஷ்டிரம்-அடதாளசாப்பு.

பல்லவி.

பஞ்சவர்ணக்கிளிபோல்ஒருபெண்ணை நான்
பார்த்துவந்தேன்சாமி (பஞ்ச)

அநுபல்லவி.

கொஞ்சமுஞ்சந்தேகமில்லாமலேஅந்தக்
கோலமயிலைநீர்கொள்ளும்-அநு
கூலம்வந்ததென்றுதுள்ளும்-நல்ல
காலங்கவலையைத்தள்ளும (பஞ்ச)

சரணங்கள்.

௧. பூரணசந்திரன்போலும்முகத்திற்குப்
பூமியிலுண்டோசமானம்-தெய்வப்
பூவையர்சுந்தரம்வேண்டில்அவளிடம்
போய்வாங்கவேண்டுமேதானம்-அந்த
நாசிகண்வாய்செவிமுகக்குக்குவமையை
நாட்டுவதுமதியீனம்-அவள்
நடைஅழகுக்குஞ்சடைஅழகுக்குமே
நானென்னசொல்வேனுபமானம்-அந்த
மானின்சொல்லேதேவகானம்-இடை
தானுண்டென்பதனுமானம்-நாணும்
மீனங்கண்ணெனில்அவமானம் (பஞ்ச)

உ. பாக்கியவதி அவள்பக்கத்திருந்தாலும்
பாவம்எல்லாம்பறந்தோடும்-அவள்
பால்வடியும்முகம்பார்த்தாலும்போதும்செள
பாக்கியம்வந்துவிளையாடும்-திரு
வாக்கால்அவள்மனம்மெய்மெய்யென்றால்மெய்யுமே
வர்ணிக்கயாராலேகூடும்-கிட்டி
வந்தநமக்குத்தூரந்தரயோகம்
வருத்தத்தைநீர்தள்ளிப்போடும்-இனிக்
கருத்தில்அவளையேநாடும்-மிகு
திருத்தமாகக்கவிபாடும்-நல்ல
பொருத்தம்ஆனந்தக்கூத்தாடும் (பஞ்ச)

௩. வெள்ளியும்தங்கமும்அள்ளிக்கொடுத்தாலும்
வேறொருவர்முகம்பாராள்-நல்ல
மேன்மைத்துரைமகள்ஆனாலும்வீட்டு
வேலைக்குப்பின்னிட்டுச்சோராள்-நிதம்
தள்ளிநீர்வைதடித்தாலும்கைநோகுமே
சாமியென்றுதொழுஞ்சீராள்-பெற்ற
தாய்தகப்பன்அழைத்தாலும்ஊரைவிட்டு
சற்றும்பிரிந்திடநேரோள்-பழு
தற்றநவமணிநேராள்-நாளும்
குற்றமுள்ளோர்சபைசேராள்-செய்த
நற்றவத்தால்அன்றிவாராள் (பஞ்ச)

௪. காரியம்பார்ப்பாள்கணக்கும்எழுதுவள்
காய்கறிஆக்கவும்கெட்டி-அவள்
கைபட்டால்வேம்புங்கரும்பல்லவோருசி
கண்டுநீர்மண்டுவீர்சட்டி-அவள்
ஊரிலேமாமியார்நாத்திமார்எல்லாம்
உலந்திடுகற்கண்டுகட்டி-தினம்
ஓயாவிருந்துவந்தாலும்சலியாமல்
உண்ணச்சொல்வாள்அன்னங்கொட்டி-அந்த
வண்ணக்குயிலைநீர்கிட்டி-இரு
கண்ணிற்கண்டாற்பசித்திட்டி-துரை
பெண்ணைக்கொள்ளஎன்னஅட்டி (பஞ்ச)

௫. சிந்தாமல்மயங்காமல்வீட்டுப்பொருள்களைச்
சிவன்போல்காக்கும்நிர்வாகி-தினம்
செலவைக்குறைத்துவரும்படியில்மிச்சம்
சேர்த்துவைக்குமதியூகி-நிதம்
கந்தஉறவேதன்வீட்டையுந்தன்னையும்
கனசுத்தம்செய்நாகரீகி-காணும்
கனவில்எப்போதும்தெய்வத்தைக்
கணவனைத்தியானிக்கும்ஸ்நேகி-நகை
பணம்விரும்பாதவிவேகி-சாந்த
குணமுடையகனதியாகி-நல்ல
உணர்வுடையஉபயோகி (பஞ்ச)

௬. ஆபத்துவேளையில்அறிவுசொல்மந்திரி
அரும்பிணிக்கவளேசஞ்சீவி-துன்பம்
அணுகும்போதாறுதல்தரித்திரகாலத்தில்
அருநிதியாம்அந்தத்தேவி-உம்மைப்
பாபத்தில்வீழாமல்போதிக்கும்சற்குரு
பாடவும்வல்லவேதாயி-தெய்வ
பத்திநற்புத்திஇரக்கம்பொறுமை
பாவியசற்குணவாவி-கொள்ளும்
ஒருவருக்கேஅவள்ஆவி-மற்றப்
புருஷருக்கவள்வற்சதாவி-அவள்
பெருமைக்கோர்குறைசொல்வோன்பாவி (பஞ்ச)

௭. சங்கீதம்பாடியும்இங்கிதம்பேசியும்
தாள்பிடித்தும்துயர்தீர்ப்பாள்-நாளும்
தன்வேலைக்காரர்பலர்இருந்தாலும்
சகலமும்தன்கண்ணுற்பார்ப்பாள்வீட்டில்
அங்கும்இருப்பாள்பின்இங்கும்இருப்பாள்
அண்டையிலும்கட்டிக்காப்பாள்உன்
கற்பவருத்தம்இல்லாமல்கவலைகள்
அத்தனையும்தலைஏற்பாள்-திருச்
சித்தமென்னவென்றுகேட்பாள்-மொழிப்
புத்தமுதைச்செவிவார்ப்பாள்-உம்மை
உத்தமமார்க்கத்தில்சேர்ப்பாள் (பஞ்ச)

௮. நீர்மகிழ்ந்தால்அவள் தான்மகிழ்வாள் துன்பம்
நீர்கொள்ளில்அவட்கும்விசாரம்
நீர் உண்ணில் அவள் பசிதீரும்-இருவர்க்கும்
நிச்சயம்ஏகசரீரம்-இந்த
ஊரில்நீர் இல்லாதபோதுறங்காள்-அன்னம்
உண்ணாள்பண்ணாள் அலங்காரம்-நீர்
ஊமைகுருடானாலும்செய்வாள்-உமக்
குரிமையாய்ஜோபசாரம்-ஆனால்
பரமாதருடன்நீர்சஞ்சாரம்-செயில்
வரும்அவளுடையநிஷ்டூரம்-அதற்
கொருநாளும்இலைபரிகாரம் (பஞ்ச)

௯. பாவம்நீர்செய்யச்சொன்னாலும்செய்யாள்வேறே
பண்ணாள்உமக்கபசாரம்-பெறும
பாலர்க்குநல்வழிகாட்டித்தினமும்
படிப்பிப்பாள்வேதாந்தசாரம்-வந்து
தாவும்எளியவர்க்கில்லையென்னாமலே
தாய்போல்செய்வாள்உபசாரம்-செல்வம்
தாழினும்ஏழைக்குத்தான்உண்ணும் அன்னத்தைத்
தந்துமெலிவாள்சரீரம்-தம
யந்தியுமேநமஸ்காரம்-செய்யும்
சுந்தரிசீலம்விஸ்தாரம்-உமக்
கந்தமின்னேகல்லதாரம் (பஞ்ச)

௰. பாயும்படுகையுமாகநோய்கொண்டாலும்
பர்த்தாவேலைக்குப்பின்வாங்காள்-எத்தம்
பக்ஷம் ஒன்றேகோடிலக்ஷம்என்றேஎண்ணிப்
பலதுன்பம்வந்தாலும்ஏங்காள்-பெற்ற
தாயும்பிதாவும்நிகர்வேதநாயகன்
தாமரைப்பாதத்தைநீங்காள்-நல்ல
சத்தியநிரந்தரைபுத்தியின்மந்திரி
சட்டகுடித்தனப்பாகங்கள்-வேலை
முட்டமுடியுமுன் தூங்காள்-உமக்
கிஷ்டமுள்ளாள்பழிஒங்காள் (பஞ்ச)

தலைவியிடத்து வைக்கவேண்டிய நேசத்தைப்பற்றித் தலைவன் கூறுதல்.

ராஅ௨. இராகம்-சௌராஷ்டிரம் அடதாளசாப்பு.

பல்லவி.

பத்தினிபோல்நமக்கித்தரைமீதினில்
உற்றவர்யார்மனமே. பத்தினி

அநுபல்லவி.

சத்தியமாகவேதாய்க்குப்பின்தாரம்
தாரத்தினால்அல்லவோசமுசாரம் பத்தினி

சரணங்கள்.

க. இல்லாமனும்நாமுமேவகசரீரம்
என்பிதுவேனுநீதியின்சாரம்
நல்லவளேநம்மனைக்கலங்காரம்
நாட்டிலேமற்றஉறவெல்லாந்தூரம் பத்தினி

௨. கைப்பொருள்இல்லாவிட்டாலும்நற்பாரி
கைவசமானால்அவளேபொன்மாரி
எப்பொருளும்இருந்தாலும்ஓர்நாரி
இல்லாதவீடுதண்ணீரில்லாவாரி பத்தினி

௩. பெண்ணென்றாற்பேயும்இரங்குமன்பாலே
பெண்ணைஅடித்தால்வருங்கெட்டநேரே
கண்ணைஇமைகாப்பதுபோலநேரே
காதலிதன்னைக்காப்பாற்றுதல்சீரே பத்தினி

௪. பந்துஜனமெல்லாம்வீண்பரிவாரம்
பாரில்அவரால்உண்டோஉபகாரம்
அந்தரந்தன்னில்உதவுவாள்தாரம்
ஆபத்துவேளைக்கவளேஆதாரம் பத்தினி

௫. தாய்தந்தையாரையும்விட்டுவந்தாளே
சம்சாரபாரத்தைத்தாங்கிநைந்தாளே
நோயில்பிரசவந்தன்னில்நொந்தளோ
துன்பத்தைதான்கொண்டுசுகத்தைத்தந்தாளோ பத்தினி

தலைவனுடையமேன்மையைத் தலைவி தோழிக்குக்கூறுதல்.

கஅரு-இராகம்-பிலகரி-திரிபுடை.

பல்லவி.

நாயகர்பக்ஷமடி-என்னக்கது
ஆயிரம்லக்ஷமடி — நாயகர்

அநுபல்லவி.

நீயறிவாயோ அவர்குணம்மானே
நாயறியுமோஎருச்சந்திப்பானை — நாயகர்

சரணங்கள்.

௧. பத்தாவின்பக்ஷம் உள்ளாள்மகராசி
பத்தாவின்பக்ஷம் இல்லாள்பரதேசி
வித்தாரமாகத் திரவியராசி
மேன்மேலிருந்தும் பலனென்னசீசீ — நாயகர்

௨. ஏழையானாலும் எனக்கெசமானே
என்றும்அடிமை அவருக்குநானே
கூழைஉண்டாலும்எனக்கதுதேனே
கொண்டார்இருக்கக்குறையென்னமானே — நாயகர்

௩. மாலைபொன்னோலைகள்வண்ணமுத்தாரம்
மற்றநகைகளெல்லாம்பெரும்பாரம்
சீலமுங்கற்புமேதேகசிங்காரம்
திவ்யமாணிக்கத்துக்கேன் அலங்காரம் — நாயகர்

௪. ஆயிரந்துன்பங்கள்வந்தாலும்நானே
ஐயர்கிருபைஉண்டானால்அஞ்சேனே
பாயைப்பிடித்தவன்என்னசெய்வானே
பானைபிடித்தவள்பாக்கியந்தானே. — நாயகர்

துன்பஞ்செய்தாலுந்தலைவனேகதியென்றுதலைவிதோழிக்குசொல்வது

௧௮௪-இராகம்-சாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

அடித்தாலும்வைதாலும்அவரோதுணையல்லால்
ஆர்துணையடிமானே — அடி

அநுபல்லவி.

மடித்தாலும்அவருளவைவாய்மதமிஞ்சலாமோ
வானத்தின்கீழிருந்துமழையிடிக்கஞ்சலாமோ — அடி

சரணங்கள்.

௧. குற்றங்குறைகள்கண்டால்கொண்டவர்பொறுப்பாரோ
குணமாகநாம்நடந்தால்கோபித்துவெறுப்பாரோ
இன்றைக்குச்சொல்வோரெல்லாம்என்கூடஇருப்பாரோ
இழவுக்குவந்தவரெல்லாந்தாலியறுப்பாரோ — அடி

௨. அடிக்கும்ஒருகைஅரவணைப்பதும்ஒருகையே
அழுதழுதும்பிள்ளைஅவள்பெறவேண்டுமெய்யே
இடிக்குங்கணவருடன்எதிர்த்தால்வாழ்வதுபொய்யே
எரிகிறநெருப்பிலேஇடலாமோபின்னும்நெய்யே — அடி

௩. என்னஅவர்சொன்னாலும்எதிர்மொழிவிள்ளலாமோ
எரியும்அக்கினிதன்னைஇருகையால்அள்ளலாமோ
சின்னமதியாஉலகம்செல்வத்தைத்தள்ளலாமோ
தின்கிறசோற்றிலேமண்போட்டுக்கொள்ளலாமோ — அடி

௪. நன்மையாகநடந்தால்நமக்குண்டாம்அவர்நேயம்
நல்லஉத்தமிக்கெந்தநாளுந்தெய்வசகாயம்
ஜென்மம்உள்ளமட்டுக்குஞ்சேருமோஓர்அபாயம்
சீவனும்உடலும்போற்சேர்ந்துவாழ்வதுபாயம் — அடி

௫. ஆனைகட்டச்சங்கிலிதான்எடுத்துக்கொடுக்கும்
அப்படிபோல்நமதுவாயேநம்மைக்கெடுக்கும்
ஞானமாகநடந்தால்நன்மைஎல்லாம்அடுக்கும்
நல்லவள்தெய்வமென்றுநாடெல்லாங்கொடுக்கும் — அடி

௬. மதயானைமேலெடுத்தெதிரியலாமோமண்ணுண்டை—
மணவாளரிடத்திலேவளர்க்கலாமோசண்டை—
மூதலாளிஇல்லாவிட்டால்மூத்தவளேசம்மண்டை—
மொட்டைத்தலையிலேநாய்முடிக்கலாமோகொண்டை. அடி.

தலைவன்செய்தகன்மையைத்தலைவிகூறல்.

கஅரு - இராகம் - அசாவேரி. திரிபுடைதாளம்.

பல்லவி.

எத்தனைஆனாலும்பத்தாவைப்போல்எனக்
கிசைந்தவர்ஆரடி
அநுபல்லவி.

வித்தாரக்கள்ளிகிளிவம்புபடியாதே
ஒத்துவாழாக்குடிஒருநாளும்விடியாதே எத்தனை

சரணங்கள்.

க மாணிக்கச்சிலைபோலப்பெண்கள்பலரிருக்க
மானேஅவனையெல்லாம்விட்டாரே
மைத்துனியேசொந்தப்பத்தினியென்றென்னை
மாலையிடஉடன்பட்டாரே
காணிக்கையாகநான்புத்தியறியுமட்டும்
காத்திருந்தென்னைக்கைதொட்டாரே
கால்முதல்தலைமட்டும்பொன்காய்த்தமரம்போல
கனத்தநகைகளெல்லாம்இட்டாரே
ஆணிப்பொன்னேஅறியேன்நான்ஒருகஷ்டம்
அத்தானல்லவோஎனக்கிந்தஅதிர்ஷ்டம்
பாணிக்கிரகணஞ்செய்தவருடனேஇஷ்டம்
பாராட்டினால்நமக்குண்டோஒருகஷ்டம் எத்தனை

உ. தங்கக்கின்னியிலேசோறும்வெள்ளிக்கின்னியிலேபாலும்
சட்டம்சட்டமாகஉண்டோமே
தாதிமார்கள்பிடித்தசாமரையில்நல்ல [doubtful reading]
[illegible]

அங்கமாய்நான்ஏறவண்டிபல்லக்குகள்
அற்பவருக்கமும் அண்டேனே
அன்னத்துக்கில்லாமல்என்றோடொத்தபெண்கள்
அழுதுவலியன்குத்தக்கண்டேனே
மங்களமாகவேசிங்காரபனைக்கூட்டு
வகைவகையாகஉடுத்தஜெகமோகனப்பட்டு
எங்கும்பஞ்சமானாலும்எனக்குண்டோஒருகட்டு
இத்தனைபாக்கியம்எல்லாம்அவளைத்தொட்டு எத்தனை

௩. கோபம்உள்ளஇடத்தில்குணமும்இருக்கும்அவர்
கோபித்தோர்வார்த்தைசொல்லலாகாதா
கொண்டவர்இடத்திலேதிண்டிமிண்டுஞ்செய்தால்
கோதையேகுடிகெட்டுப்போகாதா
சோபனஞ்செய்தனை[illegible]மேலொரு
தோஷஞ்சொன்னாலும்வாய்வேகாதா
சூரியனைக்கண்டபனிபோல்அவர்முன்னேஎன்
துன்பமெல்லாம்பறந்தேகாதா
ஆபத்தீர்ப்பவர்அவர்பெருநிதியடி
அடித்தாலும்வைதாலும்அவரேகதியடி
பாபபுண்ணியம்பாராதவள்மதியடி
பாலுந்தேனும்போல்வாழ்வது[illegible]தியடி எத்தனை

௪. ஏரியைக்கோபித்துக்கால்கழுவாவிட்டால்
ஏரிக்குண்டோநஷ்டம்ஓதடி
எசமானைக்கோபித்தால்எனக்கேநஷ்டம் அல்லால்
எசமானுக்குநஷ்டம்வதடி
சூரியனைக்கல்லால்அடிப்பதுபோலத்
துணைவனைப்பகைத்தல்[illegible]தடி
துள்ளினமாடேபொதிசுமக்கும்கெட்ட
துஷ்டைகளுக்கென்றுந்தீதடி
நீருள்ளமட்டுக்கும்மீனுக்குக்கொண்டாட்டம்
நீர்வற்றினல்பின்புநிற்குமோமீன்கூட்டம்
பாரியர்க்குப்பத்தாவாலேஆட்டபாட்டம்
பத்தாவுக்குப்பின்புசோற்றுக்குத்திண்டாட்டம் எத்தனை

மாமி நாத்தி முதலானவர்களின் கொடுமையைபற்றி ஒருஸ்திரீ முறையிடுதல்.

கஅசு-இராகம்-கல்யாணி அடதாளசாப்பு.

பல்லவி.

உனக்கெல்லாமெச்சா-சகியேஇது
ஆருக்கும்ஒருபேச்சா உனக்

அநுபல்லவி

பாருக்குள்ளேஎந்தன்கணவரும்நானுமே
பாசமாய்விசுவாசமாய்அதி
நேசமாய்ச்சகவாசஞ்செய்வது உனக்

சரணங்கள்.

க. பத்தாவுடனேநான்கூடிச்சல்லாபம்
பண்ணினால்மாமியார்க்கென்னடிகோபம்
ஒத்திருந்தால்அவட்கேன்மனஸ்தாபம்
ஓகோசகியேஇதுவென்னபாபம்
ஓதடிஇதுசூதடிபெரும்
வாதடிகனதீதடிஇது உனக்

உ. நானும்அவரும்பேசில்நாத்திக்கேன்சலிப்பு
நாங்கள்பிணக்கங்கொண்டால்அவட்கென்னகளிப்பு
ஆனாலும்எனைக்கண்டால்அவளுக்கேன்வலிப்பு
ஐயையோஊரெங்கும்இதுவேலும்மலிப்பு
அன்னமேயடிசொன்னமேமொழி
பன்னவேதகை-இன்னமேதடி உனக்

௩. கலியாணஞ்செய்தும்உண்டோசாதியாசம்
கடனுவாங்கியும்என்உபவாசம்
பலமாகவேதங்கைச்சரையிலேவாசம்
பண்ணியுங்குளிப்பதற்கென்னபிரயாசம்
பாபமோஇது-சாபமோசெய்வ
கோபமோபரி-தாபமோதினம் உனக்

ரு. சட்டமாய்ப்பேசாவிட்டால்வாழ்க்கைப்பட்டு
சபலம்என்னஇதுபிராமணேங்கட்டு
சட்டினிபாக்கலத்தினிற்சோறிட்டுக்
கைகளைப்பிடிப்பதுபோல்என்னதட்டு
சாந்தரோடே சாந்தமாகவே
சாந்தமாகவே சேர்ந்துவாழ்வது ஊருக்

சா. பிரபலமாகமுகூர்த்தடிங்கோலிப்
பேசாதிருக்கவோகட்டினார்தாலி
ஆசார்க்குமெனக்கும்உண்டோநடுவேலி
ஆறுதற்தோழி இதுவென்னகேலி
அக்கரைப்படுசக்களத்திகள்
அங்கலிப்பொடுகெக்கலிப்பட ஊருக்

கணவனைப்பகைத்தஸதிரியை

அவள்தாய்கண்டித்தல்,

ராகம்-காம்போதி- ஆதிதாளம்.

பல்லவி

மார்க்கம்அல்லடிமானே-கணவருடன்
மூர்க்கஞ்செய்வதுதானே மார்க்கம்

அநுபல்லவி

தீர்க்கமாய்ச்சொல்லச்சொல்லத்தினம்வாதுசெய்யலாமோ
ஜென்மக்குணத்தைச்செருப்பால்அடித்தாலும்போமோ மார்க்கம்

சரணங்கள்

க. அருப்பிழைசெய்துபத்தாஅன்பைமுறிக்கலாமோ
அணைநடந்தவெள்ளத்தையாருமறிக்கலாமோ
கரும்புருசியென்றுவேரோடுபறிக்கலாமோ
கண்ணானவரைப்புண்ணாக்கிப்பிரிக்கலாமோ மார்க்கம்

உ. தலைவன்முகங்கோணினால்சகலவாழ்வுங்கோணும்
சபையிலெலனைச்சேர்க்கச் சகலர்மனமும்நாணும்
கொலைபாவிசாரமெல்லாஞ்சூழ்ந்தவந்தணைக்காணும்
குயவரைவைத்துக்கொண்டல்லோசிந்தமெழுந்தேனும் மார்க்கம்

௧. நரன்என்பதேஇல்லாமல்தானே உண்டாமோ பகை
சரியாகநீநடந்தால்கவலைக்குண்டாமோ பகை
குணபூஷணிகட்டிவேண்டுமோவேறுநகை
குப்பையிற்கிடந்தாலும்மாணிக்கம்பெருந்தொகை [illegible]

௨. கணவனைப்பணிந்தவள்கரையேறுவதேதடி
கடல்கொதித்தால்விளாவத்தண்ணீரெங்கேதேடி
உணர்வாகநீநடந்தால் உண்டோ ஒருதீதடி
உறுதிநான்சொல்லச்சொல்ல உனக்கேன் இன்னம்வாதடி [illegible]

௩. கனமோடிசெய்துதுயர்க்கடலிலேமுழுகிறாய்
கலியாணவீட்டிலேகட்டிக்கொண்டழுகிறாய்
உனதுமனதுபோனபடியெல்லாமொழுகிறாய்
உற்சாகத்தாலேநீமேச்சேறிவிழுகிறாய். [illegible]

தங்களுக்குப்படிப்பிக்கும்படி ஸ்திரீகள் புருஷர்களை வேண்டுதல்,

௩௮. இராகம்-நாதநாமக்கிரியை ஆதிதாளம்

பல்லவி.

வித்தையைப்படிப்பியுங்கள் தயைசெய்து
வித்தையைப்படிப்பியுங்கள் வித்தை

அநுபல்லவி.

உத்தமவான்களே சத்தியவான்களே
உங்கட்குக்கண்களானபெண்களாமெங்களுக்கு வித்தை

சரணங்கள்,

௧. திருத்தமாவேலைகளெல்லாம்முடிப்போம்
தீர்ந்தபின்புஸ்தகங்களைப்படிப்போம்
வருத்தம்நீர்படக்கண்டால்மனம்துடிப்போம்-இந்த
வண்ணங்கள்பாடிக்கொண்டு [illegible]

மாட்டோமோ வினை
மீட்டோமோ-நயம்
காட்டோமோ-சுகம்
ஊட்டோமோ நலம்

௨. வரவுசெலவின்கணக்கெழுதிவைப்போம்-பல
வன்கவகைஉடுப்புகள்உமக்குத்தைப்போம்
பரவும்பலதொழில்நீர்பண்ணவைப்போம்-நல்ல
பக்ஷணம்கறிகளுமசெய்யத்தப்போம்-நல்ல

படியோமோ-இருள்
விடியோமோ-அருள்
முடியோமோ-அருள்
மிடியோமோ-நல்ல விந்தை

௩. வாணியும்நீரும்ஒரு கோத்திரமா இருள்
வரப்பிரசாதம்உமக்குமாத்திரமா
வீணில்அவட்கெங்கள்மேல்க்ஷாத்திரமா-நாங்கள்
மெய்ஞ்ஞானமார்க்கத்துக்கபாத்திரமா உம்மை

வெல்லோமோ-இருள்
கல்லோமோ-கவி
சொல்லோமோ-புத்தி
இல்லோமோ-நல்ல வித்தை

௪. கொஞ்சம்நீர்கோபஞ்செய்யில்அஞ்சிடுவோம
குற்றம்பொறுக்கச்சொல்லிக்கெஞ்சிடுவோம்
தஞ்சமதாகஉமைநம்பிடுவோம்-எம்மேல்
சாகித்தியம்செய்துதினம்கும்பிடுவோம்-நாங்கள்

தாழ்ந்தோமே-துயர்
ஆழ்ந்தோமே-உம்மைச்
சூழ்ந்தோமே-காலில்
வீழ்ந்தோமே-நல்ல வித்தை

௫. அடித்தாலும்கதிநீரே-உம்மை
அன்றிஎங்களுக்கினித்துணையாரே
படித்தால்பிழைத்தும்போவோம்பெரியோரே-இந்தப்
பஞ்சைகள்முகம்பாரும்துரைமாரே-உங்கள்

பதம்பூண்டோம்-அபி
மதம்நீண்டோம்-உங்கள்
இதமதாண்டோம்-அசங்
கதமவேண்டாம்-நல்ல வித்தை

௬. படியாதஆண்கள்உடனேநேசம்-சற்றும்
பாண்டீர்சம்மதியீர்லவநேசம்
மடம்உறும்உங்களுடன்சகவாசம்-செய்ய
மட்டும்உமக்கில்லையோசங்கோசம்-இந்த

மதிமோசம்-வரும்
அதிஹாசம்-மனம்
யதிபாசம்-அற
இதிகாசம்-உடன் வித்தை

௭. வித்தையில்லாப்புருஷன்செய்கையைப்பாரும்-அந்த
விதமல்லவோபடியாமடவாரும்
உத்தமியையேவிரும்புவீர்நீரும்-கல்வி
உணராவிட்டால்குணம்எப்படிச்சேரும்-இந்த

ஓரீரோ-முகம்
பாரீரோ-ஆயர்
தீரீரோ-தளை
கூரீரோ-நல்ல வித்தை

௮. உத்தியோகந்தந்தாலும்ஒருநாள்பார்ப்போம்-தினம்
உதவிசெய்துங்கள்தொழில்காத்திருப்போம்
பத்தியாய்க்குடித்தனம்தலையேற்போம்-கல்வி
பாலர்க்குப்போதித்துநல்வழிசேர்ப்போம்-என்னை

பதிநீரோ-சர்வ
நிதிநீரோ-தினம்
கதிநீரோ-கன
மதிநீரோ-நல்ல வித்தை

௯. படித்தால்மிருகம்போல்நாள்கழிப்போமோ-என்றும்
பரபுருஷர்முகத்தில்விழிப்போமோ
அடித்தாலுமமுகம்கோணிச்சுழிப்போமோ-கல்லா
தவர்கணவராலும்பழிப்போமோ-பல

அணிவேண்டோம்-நல்ல
துணிவேண்டோம்-நவ
மணிவேண்டோம்-காமப்
பிணிவேண்டோம்-நல்ல வித்தை

௫. இரவில்நீர்தூங்கினபின்நாம்படுப்போம்-நீங்கள்
எழுமுன்எழுந்துவேலைகளைத்தொடுப்போம்
தரும்வழிகள்என்றுபெயர்எடுப்போம்-நாங்கள்
சந்ததம்வேதநாயகனை அடுப்போம்-மிகத்

தழையோமோ-கல்வி
நுழையோமோ-உமை
அழையோமோ-ஜீவன்
பிழையோமோ-நல்ல வித்தை

இதுவும் அது,

ராகம்-இ-ம்-மோகனம்- திரிபுடைதாளம்.

பல்லவி,

கேளும்புத்திமான்களே-கிருபைவைத்
தாளும்சீமான்களே கேளும்

அநுபல்லவி,

நாளும்கதிஇல்லாஎங்கள்மேல்வர்மமோ
தாளுறும்தூசிபோல்தள்ளுதல்தர்மமோ கேளும்

சரணங்கள்.

௧. காலைக்கும்மாலைக்கும்மூலைக்குள்எங்களை
ஆலைக்கரும்புபோல்தேய்த்தீர்-பாக
சாலைக்கும்மன்மதலீலைக்கும்வினை
வேலைக்கும்எங்களைமாய்த்தீர்
மூலக்கல்விநாங்கள்வாசித்தால்ஆபத்தோ
மூடப்பெண்கொள்வீர்உமக்குப்பெருமித்தோ
ஓலைக்கிரந்தங்கள்உங்கள்பாட்டன்சொத்தோ
உமக்கென்னகாணும்கலைமேல்தலைபத்தோ கேளும்

௨. ஆதியிற்பெண்ணாலேமேதினியோர்கள்உண்
டானவகைமறந்தீரோபெண்
சாதிபுருஷனில்பாதிஎன்றமனு
நீதியையுந்துறந்தீரோ

பாதிஉடலைப்பறக்கவிடலாமோ
பாவபுண்ணியம்தெரியாமல்கெடலாமோ
நீதிஇல்லாதெய்வமுநிந்தித்திடலாமோ
நிந்தித்துப்பின்எங்களைநீர்தொடலாமோ கேளும்

நாரியரைஒருகாரியம்இல்லா
கடைப்பிணம்என்றெண்ணினீரோ-தேவர்
ஊரில்பெண்கள்கொண்டசிறினைஆகிலும்
உற்றுப்பாரும்ஐயர்மாரே
பாரிதனைநாவில்வைத்தான்பிதாமகன்
பாகம்சிரம்வைத்ததால்சிவன்மாசுகன்
மார்பில்வைத்தான்ஹரிபெண்திருடன்குகன்
மங்கைதேடிச்சந்திவந்தான்கரிமுகன் கேளும்

உங்கட்குதவியாய்எங்களைத்தேவன்
உண்டாக்கியதைஅறியீரோ-செல்வ
மங்கைஉடன்கல்விமங்கைமுதலானோர்
மாதர்என்றுகுழியீரோ
எங்களைஅல்லாமல்நீங்கள்உதித்தீரோ
ஏறிஆகாயத்திருந்துகுதித்தீரோ
அங்கப்பால்உண்ணாமல்தேகம்உதித்தீரோ
அடிமைஎன்றெங்கள்தலையில்விதித்தீரோ கேளும்

போசயூரொப்புமாதர்களைக்கண்டு
பொங்கிப்பொறுமைகொண்டோமே
பேதம்இல்லாஉந்தியாதெனில்நாங்கள்
பிறந்தென்னலாபம்கண்டோமே
தாகக்கல்விக்குநகைஎந்தமூலையே
நாங்கள்விரும்போய்நவரத்னமாலையே
வேதநாயகன்செய்பெண்மதிமாலையே
வேண்டினோம்தாரும்விட்டோம்உங்கள்காலையே கேளும்

மூடனைவிவாகஞ்செய்யாதபடி

ஒருஸ்திரீயைத்தடுத்தல்,

ராகம்-இ-ம்-புன்னாகவராளி-அட-தாளசாப்பு.

பல்லவி,

மாதேஎன்வார்த்தைதள்ளாதே-அந்த
மாப்பிள்ளைதன்னைக்கொள்ளாதே — மாதே

அநுபல்லவி,

ஆதரவாகஅரவைத்தொடலாமோ
ஆழமறியாமற்காலையிடலாமோ
ம்பாதமில்லானுக்குவாழ்க்கைப்படலாமோ
பொன்னேஒளிர் மின்னேகெடு
முன்னேமதி-சொன்னேனடி — மாதே

சரணங்கள்.

க. பொன்னேஅவன் ஆளழகனானுமே
புத்தியில்உலக்கைக்கொழுந்து வித்தை
தன்னைஅறியானைகொள்வதைப்பார்க்கினுஞ்
சாலங்கிணற்றில்விழுந்து
உன்னைக்கைப்பாடுபடச்சொல்லித்தாங்குவான்
ஊர்மாடுமேய்க்கவேதான்தடிதூக்குவான
பின்னையும்உன்னைத்தான்பேய்க்கோலம்ஆக்குவான்
பெண்ணேஇரு-கண்ணேஇதை
எண்ணேமொழிபண்ணேநிகரார் — மாதே

உ. உத்தமியேஅவன் ஞானமிருக்கின்ற
ஊனையும்பார்த்தறியேனே-தினஞ்
சுகநீர்மூடரைக்கூடிக்குடித்துன்
சுகாலத்தைக்குறியானே
சித்தமுற்றாதிசன்விடுகட்டேகோடுவான்
சிங்காரமற்றுக்குஞ்சிதம்விளையாடுவான்
இத்தமுனைக்குப்பட்டநாமம்போடுவான்
தேனேமட-மானேதிடம்
நானேசொன்-னேனேயடி — மாதே

௬. மன்னூர்க்குள் ஆணுக்கழகுபடிப்பும்
மதியுஞ்சுகுணமுந்தானே-வெறுங்
கண்ணுக்கழகுபணமுமிருந்தென்ன
காரியஞ்சொல்லடிதேனே
புண்ணியவானேழையானாலுங்-கொள்ளடி
பொய்யன்பணக்காரனானாலுந்-தள்ளடி
வண்ணங்கொள்பெண்ணுங்காண்பஞ்சமோ-கிள்ளடி
மாதேஇது-நீதிஇனி
வாதேசெய்-யாதேயடி மாதே

மைத்துனர்கலியாணத்திற்பாடிய

பரிகாசக்கீர்த்தனை.

சகூச, இராகம்பாசு-அடதாளசாப்பு

பல்லவி.

மைத்துனரே-இன்றுமுதல்-மகாராஜர்நீரே மைத்

அநுபல்லவி.

கொத்தார்குழலிஎங்கள்குயிலைக்கொண்டீரே மைத்

சரணங்கள்.

௧. ஏதும்வல்லிராக்கட்டிஅறியாதும்இப்பு
இனிஉமக்குப்பலவகைவகைஉடுப்பு
ஓதும்புகைக்குதண்டோமுன்உமதடுப்பு
ஆர்ளதைநாஞ்சொன்னால்உமக்கென்னகடுப்பு. மைத்

௨. சொன்னமயம்எங்கள்சுந்தரிதேகம்
தோற்குமேஉமக்கண்டங்காக்கை-அநேகம்
என்னவிதமாகவோவடித்ததுயோகம்
ஈடோஇதற்குத்தேவேந்திரபோகம் மைத்

௩. உழவுத்தொழில்செய்துமர்குடம்பெல்லாஞ்சேறு
ஊராந்தைக்கழுவப்பற்றுமோஒன்பதாறு
பழங்கூழுண்டஉமக்குப்பாலுடன்சோறு
பயப்படாதிரும்உமக்காயுசுநூறு. மைத்

௬. காதவழிநடப்பிக்கவேசாக்ஷி
காடியல்லக்கினிஉமக்குண்டோதாக்ஷி
ஏதுமற்றஉமக்கும்பலகாணியாக்ஷி
இனைந்ததுஹோஹோஹோஎன்னகண்சாக்ஷி மைத்

௭. எருமைநுழையும்உமதிருகாதின்-தொள்ளை
இனிஉமக்குவச்சிரக்கடுக்கன்கள்கொள்ளை
ஒருபணியும்இல்லாமல்உற்றீர்சள்ளை
ஊர்அதிபதிக்கிப்போதுகந்தமாப்பிள்ளை மைத்

௮. சந்திரசூரியர்மழைபனிகாற்றுக்கோடை
தாங்கியஉமக்கினிநவரத்னமேடை
உந்தம்அசுத்தங்கொள்ளுமேபல கூடை
உமக்கினிப்புஷ்பஞ்சந்தனம்பன்னீர்வாடை. மைத்

௯, இப்போதுமக்குவாசத்தைநுங்கள்கடலே
இதற்குமுன்எண்ணெய்ப்பட்டறியாதும்முடலே
அப்படிஇருக்கவன்வீண்தடபுடலே
ஆகாசத்தைமறைப்பதற்குண்டோபடலே. மைத்

மைத்துனருக்குபுத்திபோதித்தல்.

௱௯௨-இராகம்-ஹிந்துஸ்தான்காப்பி-ஆதிதாளம்.

பல்லவி

மைத்துனரேகேளும்-நான்சொல்லும்
புத்தியையேகேளும். மைத்

அநுபல்லவி.

சித்தமும்உம்மிடமநேசமேமீளும்
உத்தமிஇவளைஉம்உயிரெனஆளும் மைத்

சரணங்கள்.

௧. நன்றாயிப்பெண்ணுக்குவாய்ந்ததேஅதிர்ஷ்டம்
நரிமுகத்தில்விழித்தீர்நல்லசட்டம்
இன்றுமுதல்உமக்குவிடிந்ததுகஷ்டம்
இதைமறந்தாற்பயித்தியகாரபட்டம் மைத்

௨. சந்திரபிம்பம்இவள்முகமென்றுதேரும்
சர்வகோணவில்உமக்கிணையில்லையாரும்
சந்தேகமிருந்தால்கண்ணாடியைப்பாரும்
தலையைக்கவிழ்ந்துகொண்டுமூலையிற்சேரும் மைத்

௩. அணங்கின்அழகுக்குப்பெண்களுங்கொள்வார்ஆசை
அழகிலேநீர் ஆயிரம்அமாவாசை
இணங்கியேவாழ்வதில்என்னபிரயாசை
இவளைநீர்மணஞ்செய்யஎன்செய்தீர்பூசை மைத்

௪. சுந்தரிஇவளும்நீரும்ஒருதேகம்
சுகதுக்கம் இவர்க்குமேசமபாகம்
வந்தமருமாதனைச்சேர்வதுதுரோகம்
மலருமணமும்போலவாழ்வதுஸ்நேகம் மைத்

௫. தெரியாமற்செய்தபிழைபொறுப்பதுஸ்ரேயம்
திட்டிப்பெண்சாதிகளைஅடிப்பதுஅநியாயம்
பிரியமாய்ப்பேசித்திருத்துவதேஉபாயம்
பெண்ணென்றாற்பேயுமேசெய்யும்சகாயம் மைத்

௬. நயமில்லாவார்த்தைகளாற்பகைமூளும்
நன்மையினாற்குறைவில்லைசிந்நாளும்
தயையுடன்என்னைப்போற்பாரியைஆளும்
சந்தேகமிருந்தால்உந்தமக்கைகளைக்கேளும் மைத்

௭. இவளைப்பிரிந்தார்இவள்தாய்தந்தைமாரே
இனிமேல்தாய்தந்தைசகலமும்நீரே
அவனியில்இவள்உமதாவிக்குநேரே
அன்பில்லாவிடில்எடுப்பீர்கெட்டபேரே மைத்

அ, நற்புத்திஇவள்சொன்னால்அதைச்செவிகொள்ளும்
நமக்கொருநிகரில்லையென்றுநீர்துள்ளும்
துற்புத்திதான்சொன்னாக்கேளாமல்தள்ளும்
தோஷத்தைநீக்கிநற்குணங்களை அள்ளும் மைத்

௯, தந்தைதாய்குருசொன்னபடிநீர்நில்லும்
சாஸ்திரம்உணர்ந்தறியாமையைக்கொல்லும்
அந்தமின்னூலையும்படித்திடச்சொல்லும்
அடிக்கடிசொல்லிடிற்கனையுமேகல்லும் மைத்

௰, உன்னரியகடவுள்அடிக்கன்புகூரும்
உத்தமவான்களையேயென்றுஞ்சேரும்
இன்னந்தெரியாவிட்டால்மாயூரம்வாரும்
இசைவேதநாயகன்செய்நீதிநூல்பாரும் மைத்

சர்வசமயசமரசக்கீர்த்தனைகளின்

அகராதி.

கீர்த்தனைகளின் ஆதி.	பாட்டிலக்கம்.	பக்கம்.
அடிக்கடிலுமா	௱௰௯	௱௭௮
அநுதினம இங்கப்படி	௱௭௫	௱௪௰
அந்தப்பெரியஇனை	௱௬௬	௱௪௯
அபயம்நீயருளுவாய்	௭௯	௬௭
அப்பாஇதென்ன	௱௬௪	௱௪௭
அப்போதினை	௯௭	௯௬
அம்புயப்பதம்	௯௰	௯௧
அருள்புரிவாயே	௰	௰௧
ஆண்டருளே	௮	௬
ஆகரித்திடநல்ல	௪௯	௪௬
ஆதிபரமநாதஞான	௫௯	௫௰
ஆதிபரமநாதாநல்ல	௫௭	௫௨
ஆதிமூலனே	௱௯௯	௱௰௨
ஆதிமெய்பரஞ்சோதி	௨௭	௨௮
ஆரணமயமய	௭௭	௬௯
ஆர்வேணுமோ	௱௭௪	௱௫௯
ஆளாயோ	௱௯௮	௱௰௬
ஆள்வாயெனதுளம்	௨௪	௨௫
இந்தஉத்தியோகம்	௱௬௯	௱௫௯
இந்தவுபகாரம்	௰௯	௨௰
இந்தநிமிஷமே	௰௮	௰௯
இந்தப்பிழைசொல்லாம்	௰௬	௰௪
இந்தமனம்	௱௯௫	௱௰௯
இந்தவரந்தருவாய்ஸ்வாமி	௰௫	௰௬
இந்தவரந்தருவாய்	௫௪	௫௧
இந்தவழக்குக்கெல்லாம்	௱௯௯	௱௪௯
இந்தவேளை	௯௰	௭௯
இப்படிப்பட்டநான்	௱௨௰	௱௰௨
இரக்கஞ்செய்வாயே	௫௧	௫௧
இவ்வளவுதான்	௪௮	௪௫
இனியாகிலுமனமே	௱௪௨	௱௨௰
இன்னமுந்தாமதம்	௮௭	௭௰
இன்னந்தாமதம்	௭௯	௭௰
இன்னமும்என்மீது	௱௰௯	௱௰௧
இன்னந்தான்பராமுகமோ	௱௨௭	௱௰௮
இன்னம்பராமுகம்ஏதோ	௫௬	௪௯

*

சர்வசமயசமரசக்கீர்த்தனைகளிலுள்ள

இராகங்களின் அகராதி.

இராகம்.	கீர்த்தனைகளின் இலக்கம்.
அசாவேரி	௫௫௨-௱௫௭-௱௯௭-௱௮௫
அடாணா	௨௯-௯௬ ௱௪௩
அபூர்வம்	௱௧௰
அமீர்கல்யாணி	௱௨௬
அர்ச்சந்திராளி	௱௧௨
ஆகிரி	௧௩-௯௧
ஆநந்தபைரவி	௧௯-௧௭
ஆரபி	௨௫
இந்துஸ்தான்காப்பி	௭௨-௱௮௪-௱௰௯-௱௪௯-௱௪௯ ௭௫௰ ௱௫௯-௱௯௨
ஈசமனோகரி	௭௪-௱௮
உசேனி	௨௧-௯௭-௱௨௫-௱௧௯ ௱௮
எதுகுலகாம்போதி	௫௯-௯௩-௱௪௧ ௱௪௪
கண்டா	௯௯
கமாஸ்	௪௰-௫௫-௭௭ ௮௫௧
கரகரப்பிரி	௫௪
கல்யாணி	௰௧-௰௯-௮௪ ௱௪௨-௱௮௯
கற்கடா	௨௨
கனகன்சந்தம்	௭௰௩-௱௪௮
கன்னடகௌளை	௫௧
காப்பி	௱௪
காம்போதி	௪-௨௯ ௧௮-௪௨-௫௩-௱௮௭
குந்தளவராளி	௱-௱௪௰
கெங்காதரங்கணி	௮௰
கேதாரகௌளம்	௧-௨௰-௧௫
கேதாரம்	௨௮-௧௨
கௌளிபந்து	௱௩௪ ௱௩௯-௱௫௪
சங்கராபரணம்	௯௰-௱௫௨-௱௫௯-௱௭௨
சஹானா	௭௭-௮௧-௯௰-௯௪-௱௭௮
சாரங்கி	௱௧௩
சாபந்த்ரா	௯௩
சாமா	௪௰-௮௮-௱௩-௱௯
சாரங்கா	௪-௯-௩௭௯
சாவேரி	௱௫-௩௯௨-௱௮௪
சாலங்கபைரவி	௯௫
[illegible]	௮௯-௮௯
[illegible]	[illegible]

இராகம்.	கீர்த்தனைகளின் இலக்கம்.
குருட்டி	௪௰-௱௨௰-௱௯
செஞ்சுருட்டி	௫௫-௪௫
சைந்தவி	௪௯
சௌராஷ்டிரம்	௧௫ ௯-௰௯௯-௧௯௫-௧௯-௧௰௨ ௱௮௧-௱௮௨
ஜங்கலா	௰௨௯
ஜயந்த்ஸ்ரீ	௫௫
ஸ்ரீராகம்	௯௨
தர்பார்	௬௨-௧௫௧
தன்னியாசி	௪௯-௯௮-௰௯௮-௰௯
தீனசங்கராபரணம்	௰௫௫
துசாவந்தி	௨௨௭
தேசமுகாரி	௱௧௯
தேசிகதோடி	௧௪-௧௫௭
தேவகாந்தாரி	௧
தேவமனோகரி	௮௭-௪௪௬
தோடி	௭௰-௭௨-௭௯-௱௪-௱௫௮
நாகத்தொனி	௯௬
நாதநாமக்கிரியை	[illegible] ௱௯௯ ௱௮௮
நீலாம்புரி	௯௭
பங்களா	௮௯
பந்து	௱௬
பந்துவராளி	௯௰-௱௯௯
பரசு	[illegible]
பலஹம்சா	௯௫
பியாகடை	௫௰-௭௯-௱௭௪
பியாகு	[illegible]
பிலகரி	௱௨௮-௱௮௯
புன்னாகவராளி	௫௪-௱௨௯-௱௧௯-௱௧௰
பூபாளம்	௯௯
பூரணசௌளை	௯
பூரணச்சந்திரிகை	௱௨௭
பூரிகல்யாணி	௮௧-௯௮
மாரவி	௰௯-௱௰௨-௱௭
மத்தியமாவதி	௪௮-௯௬
மனிரங்கு	௰௫
மனோகரம்	௱௫௬
மாஞ்சி	௪௪

சர்வசமய சமரசக்கீர்த்தனைகளின் பலபிரிவுகள்.

உத்யோகசம்பந்தக் கீர்த்தனைகளின் விபரம்.

குடும்பசம்பந்தக்கீர்த்தனைகளின் விபரம்,

சர்வசமய சமரசக்கீர்த்தனைகளின் பலபிரிவுகள்.

ஹிதோபதேசக்கீர்த்தனைகள்,

Checked
2492